# இயல்:2

## இமயம் படைப்புகள் ஒரு சமூகவியல் பார்வை

கடந்த நூற்றாண்டு வரை இலக்கியங்களில் பேசப்படாத மக்களான தலித்துகள், தற்காலத்தில் பேசப்படுபவர்களாக மாறினர். உணர்வு நிலையில் மட்டும் படைக்கப்பட்டு வந்த இலக்கியங்கள் இன்று மக்களுக்கானச் சிக்கல்களை மையப்படுத்தி எழுதி வருவதைக் காணலாம். சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களான தலித்துகள் பற்றி எழுதும் போக்கு இன்று வளர்ந்துவருவதை நாம் காணலாம். பாரதியார், பாரதிதாசன், பெரியார் போன்றோரின் முயற்சியால் தலித் எனும் ஒடுக்கப்பட்டவர்களுக்கான அரசியல், பொருளாதாரம் ஆகியவைகள் உரிமை முறையில் கேட்கப்பட்டு பெறப்பட்டு வருகிறது. டாக்டர் அம்பேத்காரின் புரட்சியால், தலித்துகளுக்கானத் தனித்த இடம் அரசியலிலும், பொருளாதாரத்திலும் கிடைத்தது. சமூகக் கட்டமைப்பின் சாதியப் பின்னணியில் இயங்கும் சக்திகளை எதிர்த்து எழுதாத இலக்கியம், தற்காலத்தில் இவர்களைக் கண்டு கேள்விகளைத் தொடுக்கக் களம் அமைத்துத் தந்துள்ளது. அதிகாரப் பலம், பொருள் பலம் எனும் மையத்திலுள்ளவர்கள், சாதிய-சமயப் போக்குகளைக் கருவிகளாகப் பயன்படுத்திப் பணக்காரர்களாகவும், முதலாளிகளாகவும் மாறி இன்று ஆளும் வலிமையின் மையத்தில் உள்ளனர். சாதியப் பாகுபாடுகளைக்காட்டி ஏனையோர் புறந்தள்ளப்பட்டு, நிர்கதிக்கு ஆளாக்கப்பட்டனர். இந்த அடித்தட்டு தளத்தில் இருந்து பேசுவோரின் அல்லது உரிமை கேட்போரின் ஒலி கடந்த நூற்றாண்டு வரை (யாருடைய காதிலும்) அதிகாரம் படைத்தவர்களின் காதில் விழவில்லை. மனிதனாகவே மதிக்கப்படாத, வாழமுடியாத இந்த அடித்தட்டு மக்கள், தங்கள் உரிமைகளைப் போராடித்தான் பெறவேண்டியுள்ளது. போராட்டம் என்றாலே ஒற்றுமைதான் ஒரே வழி. ஆனால் தலித்துகளான அடித்தட்டு மக்களை ஒன்று திரட்டவோ, விழிப்படையச் செய்யவோ பெரியார், அம்பேத்கார் போன்றோர் இன்று இல்லையே என்பதை யாரும் மறுத்து விடமுடியாது.

ஆனால் புதினம், கவிதை, சிறுகதை எனப் புதிய இலக்கிய வடிவங்கள் தமிழில் தோன்றி வளர்ந்து ஐம்பது ஆண்டுகள் கழித்துதான் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் சிக்கல்கள் பாடுபொருளாக இந்த இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டன. இலக்கியவாதிகள் தங்களின் கவிதைப் படைப்புகளின் வழியே இந்த

ஒடுக்கப்பட்டவர்களுக்கானக்குரலை ஒலித்துக் காட்டினர். ஆயினும் இவர்களைத் தொடர்ந்து பலத்தக் குரல் கொடுப்போர் இல்லாததின் வெறுமையை உணர்ந்த, இலக்கியச் சிந்தனையாளர்கள் தலித்துகளுக்கானச் சிக்கல்களைத் தங்களின் படைப்புகள் வழியே இன்று பதிவு செய்து வருகின்றனர். இவ்வாறு இவர்கள் பதிவு செய்யப்பட்ட இலக்கியங்களைத் தொகுக்கும் போது, அவற்றினூடேத் தலித் மக்களுக்கான வாழ்வியலைச் சிந்திக்க வைக்கிறது. மேலும் பலரை இலக்கியங்களைப் படைக்கச் சொல்லித் தூண்டிவிட்டது. இதன் காரணமாக நடப்பியலில் தமிழில் இலக்கியவாதிகள் அடித்தட்டு மக்களின் வாழ்வியலை முன்நிறுத்தி கவிதை, சிறுகதை, புதினம் ஆகியவற்றைப் படைத்து விளிம்புநிலை அல்லது தாழ்த்தப்பட்ட மக்களுக்கானப் படைப்புகளைச் செய்து வருகின்றனர். இவ்வகைப் படைப்புகளில் "இமையம்" என்னும் படைப்பாளரின் புதினம், சிறுகதை போன்றப் படைப்புகள் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. எனவே, இமையம் படைப்புகளான சிறுகதைகள், புதினங்கள் போன்ற படைப்புகளின் வழியே பேசப்பட்டுள்ள விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் சூழல் சமூகவியல் நோக்கில் ஆய்வதாக இந்த இயல் அமைகிறது.

## 2.1 சமூகவியல் நோக்கில் புதியப் படைப்புகள்:-

தமிழ் இலக்கியவுலகில் இன்று அதிகமாகப் படைக்கப்படும் இலக்கியங்களாக கவிதை, சிறுகதை, புதினம் போன்றவை விளங்குகிறது. ஆதலால் இவ்வகை இலக்கியங்கள் சமூகவியல் நோக்குடன் படைக்கப்படுகிறது என்பதைக் காணும் முன் புதினம்,சிறுகதை போன்றவைகள் திறனாய்வுக் கொள்கைகள் மூலம் விளக்கப்படுகிறது.

> **"இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவுகளையும் அவற்றின் பின்னணிகளையும் கொண்டு ஆராயப்படுவது சமுதாயவியல் அணுகுமுறை என்ற அடைவில் வைக்கப்படுகிறது."**[1]

என்னும் தி.சு.நடராசன் அவர்களின் கருத்திற்கேற்பச் சமுதாயத்தின் அங்கமாகத் திகழும் குடும்பம், அதன் உறுப்பினர்கள், அவர்களுக்கான உறவுமுறைகள் போன்றவற்றை மையப்படுத்தியே ஒரு (நாவல்) புதினம் கட்டமைக்க முடியும் என்று கூறலாம்.

**"நாள்தோறும் இயங்கும் மனித வாழ்வின் பல பகுதிகளைச் சித்தரித்துக் காட்டும் சிறப்பு புதினங்களுக்கு உண்டு"[2]**

எனக் கூறும் சு.பாலச்சந்திரன் அவர்களின் கருத்து இதனை உறுதி செய்யும்.

இலக்கியங்கள் என்பது (புதினம், சிறுகதை) ஒரு பெரிய அனுபவ ஊற்றாக அல்லது வாழ்க்கையின் வெளிப்பாடாக படைப்பாளர்களால் படைக்கப்படுவதே என்ற இலக்கியத் திறனாய்வாளர்களின் கொள்கை வழியே சிறுகதை,புதினம் போன்ற இலக்கிய வகை இன்று படைக்கப்பட்டு வருகிறது. தனிமனிதன் அல்லது சமுதாய வாழ்க்கையின் பலப் பகுதிகளையும் சித்தரித்துக் காட்டுவதாக அமையப் பெறுவதே புதினம், சிறுகதை ஆகியவற்றின் தனிச்சிறப்பெனலாம்.

பொதுவாக ஒரு புதினத்தில் பல நிகழ்ச்சிகள் பலச் செயல்கள் நடந்த வண்ணம் இருக்கும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொருச் செயலோடு தொடர்புடையதாக இருக்கும். இதனுள் முதன்மைப் பாத்திரத்தோடு கதை எவ்வாறு இயங்குகிறது என்பதும் ஒரு கதையின் வழியே ஒரு முக்கியத்துவத்தை அளிக்கும் வகையில் முதன்மைப் பாத்திரம் தனித்த இடத்தைப் பெற்றிருக்கும் என்பதை நினைவில் கொண்டேப் படைப்பாளர்கள் செயல்படுகிறார்கள்.

## 2.2 கதை கூறும் பழமை மரபு :-

கதைக் கூறுதல் என்ற வழக்குப் பழமையானது. யார் முதன் முதலில் கதைக் கூறியிருப்பார்கள் என்றக் கேள்விக்கு விடையேதுமில்லை என்பதை நாட்டுப்புற வழக்காற்றியல் மூலம் அறியலாம். இந்தியாவின் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களும் கதை அமைப்பைச் சார்ந்தவையே. சங்கஇலக்கியங்கள் பாடல்களாக இருந்தாலும் அவற்றின் பெரும்பான்மையானது கதை வடிவகா இருந்து கதைக்கூறுவதைப் போலவே அமைந்திருப்பதைக் காணலாம்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி போன்றவைகளும் இப்பகுப்பில் அடங்கும். அமைப்பிற்கு ஏற்ப அவை காப்பியங்கள், புராணங்கள் என அமைகிறது. பழமொழி, கார் நாற்பது போன்ற நீதி நூல்களும் கூட சிறிதளவில் நீதிக்கருத்துகள் என்ற அளவில் கதைகளைத் தாங்கியதாகவே உள்ளது. இலக்கியவகைமை என்ற அளவில் அது வேறொரு பெயரில் அமைந்து விடுகிறது.

ஆனாலும் முழுக்க முழுக்க தனிமனிதனை, அல்லது அவன் சார்ந்த குடும்பத்தை நடப்பு நிகழ்வுகளோடு கதைகளாகக் கூறும் மரபு தமிழ் இலக்கியத்தில்

புதினம், சிறுகதை போன்ற இலக்கிய வகைமைகளில் மட்டுமே காணமுடிகிறது. காப்பியங்களில் அல்லது வேறுசில இலக்கிய வகைகளில் இயற்கை வருணனை, சித்தரிப்பு, அணிநயம், இலக்கணம் போன்ற ஒருசில தன்மைகளோடு அவை அமைந்திருக்கும். ஆனால், புதினம், சிறுகதை போன்ற நவீன புதிய வகை இலக்கியங்களுள் இவ்வகைப் போக்கு இடம் பெற்றிருக்காது. என்பதை ,

> **"நாவலுக்குரியக் கதைப் பொருள் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. நாவலாசிரியர் தம் உள்ளம் விரும்பியதை எதை வேண்டுமானாலும் கதைக்குரியப் பொருளாக எடுத்துக் கொள்ளலாம்"**[3]

என மிடில்டன் மரி என்ற திறனாய்வாளர் கூறும் கருத்தின் வழியே புதினம், சிறுகதை போன்றவைப் படைப்பாளரி மனநிலைக்கு ஏற்ப அமைந்திருக்கும் என்பதை அறியலாம்.

பொதுவாகக் கூறவேண்டுமெனில் புதினம், சிறுகதை என்றச் சொல் வகைச் (சொல்) புதியதாக இருந்தாலும், கதைக்கூறும் வழக்கம் நாட்டுப்புற மக்களாகிய நம் அனைவருக்கும் உண்டு. அந்த வகையில் தற்காலப் படைப்பாளர்களில் நடப்பியல் சார்ந்தப் பதிவுகளுடன் புதினம், சிறுகதை போன்றவற்றைப் படைத்து வரும் இமையம் என்பவரின் படைப்புகள் அனைத்தும் ஒரு இலக்கிய உலகில் ஒரு சிறந்த இடத்தைப் பெறுகிறது.

### 2.2.1 திறனாய்வு :-

இலக்கியங்களில் தற்காலத்தில் படைக்கப்பட்டு வருவனவற்றுள் புதினம், சிறுகதை, கவிதை போன்றவையே மக்கள் நடுவே வரவேற்பைப் பெற்று, பாராட்டையும் பெறுகிறது. அதோடு மக்கள் விரும்பிப் படிக்கும் இலக்கிய வகையாகவும் உள்ளது. இவ்வகைப் புதிய வகைப் படைப்புகளில் சமூதாயம் சார்ந்த அல்லது தனிமனிதன் சார்ந்தப் பின்னணிகள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். இப்புதிய இலக்கிய வகையின் நோக்கமேச் சமூகத்தைப் பற்றியதுதான் என்பதால் சமூதாயம் என்றால் என்ன? என்பது சிறுவிளக்கத்துடன் கூறப்படுகிறது.

சமுதாயம் என்பது குடும்பம், பலத்தொகுதிகளாக இருப்பது. இத்தொகுதிகளின் ஒட்டுமொத்த அமைப்பே நாடு. குடும்பம் என்று வருகிறபோது தாய், தந்தை, மகன், மகள் போன்ற உறவு முறைகள் பலமானதாக இருக்கும். இந்த குடும்பத்தோடு மிக நெருங்கிய உறவு முறைகள் வேறொரு குடும்பமாக இருக்கும்.

எனவே, குடும்பமேச் சமுதாயத்தைக் கட்டமைக்கிறது எனலாம். பழையச் சமுதாய உறவில் குடும்ப உறுப்பினர்கள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இல்லை. இந்த நிலைக் காலத்தால் மாறிக்குடும்ப உறுப்பினர்களாலே குடும்பத்திற்கு முக்கியம் என்ற நிலைத் தற்காலத்தில் இருப்பதைக் காணலாம்.

இந்த அமைப்புச் சார்ந்த நிறுவனமான சமூதாயம் என்பனவற்றையேச் சார்ந்து புதினம், சிறுகதை, கவிதை போன்றவைகள் படைக்கப்பட்டுவருகிறது. கடந்த நூற்றாண்டு வரையில் பேசப்படாதவர்களானத் தலித்துகள் இன்று இப்புதிய வகை இலக்கியங்களுள் பேசப்படுவது என்பதே ஒருத் தனிச்சிறப்பு எனலாம். தற்கால நவீனத்துவமிக்கப் புதினம், சிறுகதை, கவிதை போன்றவைகள் சமுதாயத்தை மையப்படுத்தி, அதனுள் உள்ளச் சிக்கல்களை எடுத்துரைப்பதாக அதனின் தோற்றுவாய் அமைந்துள்ளது.

ஆதலால், புதினமும், சிறுகதையும் கவிதையும் மனிதனோடு மிகத் தொடர்புடையது என்பதை இதன் மூலம் அறியலாம். சமூதாயத்தை முன்நிறுத்திப் படைக்கப்படும் இலக்கியங்களை விமர்சனத்திற்கு உட்படுத்துவது என்னும் போக்குத் தற்காலத்தில் வளர்ந்து வருகிறது. இதனை மதிப்பீடு என்றும் திறனாய்வு என்றும் கூறுவர். ஒரு படைப்பு எதனைச் சார்ந்து, எத்தன்மையை விளக்க முற்படுகிறது என்பதைக் கண்டறியும் முறைக்குத் திறனாய்வுக் கொள்கை என்று பெயர். இந்தத் திறனாய்வுக் கொள்கைகளோடு அந்தப் படைப்புகளை அணுகும்போது அப்படைப்புகளின் சாரம்சத்தைப் புரிந்துகொள்ளமுடியும். திறனாய்வுகள் கொள்கை அளவில் பலவேறுவகைகளில் மாறுபடுகிறது.

> **"திறனாய்வின் நோக்கம் அல்லது பணி, அடிப்படையில் இலக்கியத்தை மையமிட்டது. சரி, ஆனால், இலக்கியம் எதனை மையமிட்டது"**

என தி.சு.நடராசன் கேள்வி ஒன்றை எழுப்புகிறார். அதற்கானப் பதிலையும் தருகிறார்.

> **"இலக்கியம் ஒரு கலையாக, ஒரு சாதனமாக, ஒரு சக்தியாக வருணிக்கப்படுகிறபோது, அதனுடைய சாத்தியங்களையும் வழிகளையும் திறனாய்வு ஆராய்கிறது. இலக்கியம், ஒரு புதிராக வருணிக்கப்படுமானால், அந்தப் புதிரைத் திறனாய்வு விடுவிக்க முயலுகிறது. இலக்கியம் மக்களுக்கானது**

**மக்களைப் பற்றி பேசுகிறது. மக்களிடம் போகிறது, மக்களை பாதிக்கிறது என்று வருணிக்கப்படுமானால், திறனாய்வு, அந்த உறவுகளை இனங்கண்டு விளக்குகிறது"[5]**

எனக் கூறும் தி.சு.நடராசன் அவர்களின் கருத்திற்கேற்ப இலக்கியங்கள் எதைப்பற்றி எடுத்துக் கூறுகிறது. அவ்வாறு எடுத்துக் கூறும் போது மக்களைப் பாதிக்கிற அந்த செய்தி எது என்பதேத் தற்கால இலக்கியத் திறனாய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

ஆதலால் இந்தத் திறனாய்வு ஒரு அறிவுத் தேடலாக அமைந்து, இலக்கியத்தைக் காலம், இடம் என்றப் பரிமாணங்களில் இடைவெளியை நிரப்பிப் புரிந்துகொள்ள, மதிப்பீடு செய்ய, உதவுகிறது என்பதோடு, வாசிப்பவர்களுக்குப் பல பரிமாணங்களைத் தருகிறது எனலாம்.

இந்த வகையில் அமையும் திறனாய்வுகள் பல்வேறு வகைகள் அமைகிறது.

**"ஒரு படைப்பைப் பற்றி அல்லது ஒரு இலக்கியத்தைப் பற்றி தெரிந்து கொள்ள திறனாய்வே சிறந்த வழி; அதோடு குறிப்பிட்ட அணுகுமுறையும் பார்வையும் முக்கியமானது"[6]**

என்னும் தி.சு.நா-வின் கருத்தோடு நாமும் இணைந்துத் திறனாய்வு முறைகளைப் பட்டியல் இடுவோம்.

### 2.2.3 திறனாய்வு வகைகள்:-

அனைத்து விதமானப் படைப்புகளையும் மதிப்பீடு செய்ய அல்லது ஆய்வு செய்யப் பல்வேறுத் திறனாய்வு வகைகள் கொள்கைகளுக்கேற்ப உள்ளன. ஒவ்வொன்றும் தனித்தனிப் பெயரில் அழைக்கப்படுவதைக் காணமுடிகிறது. அவற்றை இங்கேப் பட்டியலிட்டுக் காட்டப்படுகிறது.

**1.விளக்க முறைத் திறனாய்வு 2.ஒப்பீட்டுத் திறனாய்வு 3.மதிப்பீட்டு முறை திறனாய்வு 4.ரசனை முறை அல்லது அழகியல் திறனாய்வு 5.பாராட்டு முறை திறனாய்வு 6.முடிபு முறைத் திறனாய்வு 7.விதிமுறைத் திறனாய்வு 8.செலுத்து நிலைத் திறனாய்வு 9.பகுப்பு முறைத் திறனாய்வு 10.அறிவியல் முறைத் திறனாய்வு 11.சமுதாயவியல் திறனாய்வு 12.வரலாற்றியல் திறனாய்வு 13.உளவியல் அணுகுமுறை**

**14.மொழியியல் அணுகுமுறை 15.உருவவியல் திறனாய்வு 16.அமைப்பியல் 17.பின்னை அமைப்பியல் 18.அறநெறி அணுகுமுறை 19.மார்க்சியத் திறனாய்வு 20.தொல்படிமவியல் அணுகுமுறை 21.இலக்கிய வகை நிலையியல் 22.தத்துவ நெறித் திறனாய்வு 23.தலித்தியத் திறனாய்வு 24.பெண்ணியத் திறனாய்வு"**

என தி.சு.நடராசன் 24 வகையானத் திறனாய்வுகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

இந்த திறனாய்வின் அடிப்படையிலேயே ஒரு இலக்கியத்தை ஆய்வு செய்ய முடியும் என்பது முடிந்த முடிவு. ஆனால் வெருமனே வாசிப்பவர்களுக்குத் தேவையில்லை. ஒரு படைப்பை அல்லது ஒரு இலக்கியத்தை வாசிப்பவர்கள் தான் வாசிக்கும் இலக்கியத்தை மேலும் புரிந்து கொள்வதற்கு இந்தத் திறனாய்வுகளாலே துணையாக நிற்கும்.

ஆதலால் தற்கால நவீனப் படைப்பாளர்களுள் ஒருவரான இமையம் என்ற படைப்பாளரின் படைப்புகளை மேலும் புரிந்து கொள்வதற்கு திறனாய்வு கொள்கைகள் மூலம் அணுகப்படுகிறது.

## 2.3 இலக்கியப் பார்வையில் "இமயம்" படைப்புகள்:-

ஒரு எழுத்தாளன் எழுத்துலகில் நிலைத்து நிற்பதற்கு அவரின் படைப்புகளே காரணம். எண்ணற்றப் படைப்பாளிகள் தங்களின் அடையாளம் தெரியாமல் காணாமல் போவதற்கு அவர்கள் படைப்புகளைக் கையாண்ட விதமே எனலாம். அதே வேளையில் ஒரு படைப்பாளர் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகவே கவர்ச்சியாக, அழகியல் சார்ந்து படைக்க வேண்டும் என்றில்லை. அவர்களின் எழுத்துக்களில் மனிதர்களின் வாழ்வியல் இருக்க வேண்டும். மனிதர்களுடைய வாழ்வியல் சிக்கல்களும், தீர்வுகளும் இருக்க வேண்டும். இந்த வகையான படைப்புகளுக்கு வாசகர்களின் ஆதரவு என்றுமே இருக்கும். அந்த வகையில் தற்கால இலக்கியங்களான புதினம், சிறுகதை போன்றவற்றைப் படைத்து வரும் "இமயம்" நவீன இலக்கிய உலகில் பேசப்படுபவராக இருக்கிறார் என்பதற்குக் காரணம், இவருடையப் படைப்புகள் எளிமையானவர்களைப் பற்றியதாக இருக்கிறது என்பதேயாகும்.

### *2.3.1 இமையத்தின் நோக்கம் :-*

வாசகர்கள் எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் படைப்பு மொழியினை அந்தந்த வட்டார வழக்குகளைக் கொண்டு அமைத்திருப்பது இமையத்தின் படைப்புகளுக்கு வெற்றி எனலாம். இமையம் தன் படைப்புகளின் மையமாகச் சமூதாயத்தையே முன்நிறுத்துகிறார். இவரது பெரும்பான்மையானப் படைப்புகள் அடித்தட்டுமக்களைச் சார்ந்ததாக இருக்கிறது. வாழ்வியலையும், பொருளாதாரத்தில் வலிவிழந்தோரையும் மையப் பாத்திரங்களாக்கிப் படைப்பது என்பதை இவரது படைப்புகள் மூலம் அறியலாம். இவரின் படைப்புகளில் வருணனைகள், அழகியல் உத்திகள் போன்ற இலக்கிய அழகியல் நோக்கு இல்லாமல் இருப்பதைக் காணலாம். எல்லாவற்றிற்கும் மேலாகச் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் எழுதியும் வருகிறார் எனும் போது இவரது படைப்பின் நோக்கம் நமக்குப் புரியும்.

## 2.4 இமையத்தின் படைப்புகள் :-

அண்ணாமலை என்னும் இயற்பெயருடைய இவர் "இமையம்" என்னும் பெயரில் தமிழ் மொழியில் சிறுகதைகள், புதினங்கள் போன்ற நவீன இலக்கியங்களைப் படைத்து வருகிறார். இவர் படைத்தச் சிறுகதைகள் மற்றும் புதினங்கள் ஆகியவைப் பட்டியலிட்டுக் காட்டப்படுகிறது.

### *2.4.1 புதினம்:-*

1. கோவேறு கழுதைகள் - 1994
2. ஆறுமுகம் - 1999
3. செடல் (மூன்று தொகுதிகள்) - 2006

### *2.4.2 சிறுகதைத் தொகுப்புகள் :-*

1. மண்பாரம் - 2004
2. வீடியோ மாரியம்மன் - 2008
3. கொலைச் சேவல் - 2013
4. சாவுச்சோறு - 2014

புதினங்களும், சிறுகதைத் தொகுப்புகளும் ஒரு புதியக் கோணத்தில் படைக்கப்பட்டுள்ளது. இவரது படைப்புகள் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்டிருந்தாலும், தடைபடாமல் தன் படைப்புகளை தொடர்ந்து செய்து வருகிறார்.

## 2.5 சமூகவியல் பார்வையில் இமயம் படைப்புகள்:-

அனைத்து இலக்கியத்திற்கும் தரம், தகுதி, சிறப்பு, சீர்மை வேண்டும் என்பதல்ல, இந்த நான்கும் இருந்தால் படைப்புகளுக்கு ஒரு அடையாளம் இருக்கும் என்பது விமர்சகர்களின் கருத்தாகும். படைப்புகளின் நோக்கமாக அரசியல், அதிகாரம் போன்றவற்றின் தன்மைகளைப் புரிந்து கொள்வதாக இருக்க வேண்டும். வானம் நீல நிறமாக இருக்கிறது என்பதோ! கடல் நீல நிறமாக இருக்கிறது என்பதல்ல படைப்புகள். மனிதர்கள், அவர்களுக்கான வாழ்வியல் சிக்கல்கள் போன்றவற்றைப் புரிய வைப்பதாக இருக்க வேண்டும் என்னும் கொள்கைகளுக்கேற்ப "இமயம்" படைப்புகள் உள்ளன எனலாம். வாழ்க்கையிலிருந்து தான் இலக்கியம் பிறக்க வேண்டும் என்பதே இன்றைய நவீனப் படைப்பாளர்களின் சிந்தனைகளாக இருப்பதே இன்றையப் படைப்பாளர்களின் வெற்றி எனலாம்.

## 2.6 சமூகம்: சமூகவியல்:-

இலக்கியம் அல்லது படைப்புக்கலை என்பது மனிதர்களின் வாழ்வியலை மையமிட்டதாகவே இருக்க வேண்டும் என்பதே இன்றைய நவீன படைப்பாளர்களின் படைப்பின் நோக்கமாக அமைகிறது. நவீனப் படைப்பாளர்கள் படைக்கும் படைப்புகளின் மையமாகச் சமூகம் இயங்குவதைக் காணலாம். சிறுகதைகள், புதினங்கள், கவிதைகள் போன்ற அனைத்துவிதப் படைப்புகளும் சமூகம் சார்ந்துப் படைக்கப்படுவது என்பது சமூகம் இல்லாமல் இப்படைப்புகள் இல்லை என்பதை நிரூப்பிக்கிறது. இமையம் என்றப் படைப்பாளரின் படைப்புகளும் சமூகத்தை மையப்படுத்தியேப் படைக்கப்பட்டிருப்பதால் சமூகம் என்பது என்ன? எனப் புரிந்துகொள்ள வேண்டியத் தேவை நமக்கு ஏற்பட்டுள்ளது. ஆதலால் சமூகம் என்பதற்கான விளக்கம் அளிக்கப்பட்டு பின்பு இச்சமூகம் இமையம் படைப்புகளில் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகிறது என்பதைக் காணலாம்.

"சமூகம்" என்பதற்கும் "சமூகவியல்" என்பதற்கும் வேறுபாடுகள் உள்ளது. சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டில் வாழும் மக்களின் கூட்டுத்தொகுப்பைக்

குறிப்பது உதாரணத்திற்குத் தமிழ்ச் சமூகம் என நம் சமூகம் அழைக்கப்படுவதைக் காட்டலாம். ஆனால், "சமூகவியல் என்பது அந்த சமூகங்களைப் பற்றிப் படிப்பது, படித்ததை ஆய்வது, ஆய்வதைப் பிறருக்குச் சொல்லுவது என்பதான விளக்கத்துடன் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

**சமூகம் என்பது ஆங்கிலத்தில் Society, Group , Clan போன்ற சொற்களால் அழைக்கப்படுவதைக் காணலாம்.**

**சமூகவியல் என்பதை ஆங்கிலத்தில் Sociology எனப்படுகிறது. ஆனால் சமூகவியல் என்பது ஒரு படிப்பாக, ஆய்வாக இருப்பதைக் காணலாம். இதனை ஆங்கிலத்தில் Study என்றும் Research என்றும் அழைப்பர்.**

### *2.6.1 சமூகம்:-*

சமூகம் என்பது மனிதர்களின் கூட்டுத் தொகுப்பு. மனிதர்களின் கூட்டு என்பது பலக் குடும்பங்களை உள்ளடக்கியது. குடும்பங்கள் ஒவ்வொன்றும் ஒரு தலைவன் அல்லது தலைவியைக் கொண்டு இயங்குவது. (தனிப்பட்டவரின்) குடும்பத்தில் உள்ளவர்களைக் காப்பது. குடும்பத்திற்கு அமைப்பு உண்டு. இடம் உண்டு. அவ்வாறு இல்லையென்றால் அது "நாடோடி" வகையைச் சார்ந்ததாக அமையும். ஆதலால் ஒரு மனிதரின் பாதுகாப்பு மிக்கக் களமாகக் குடும்பமே காரணமாகிறது.

இந்த குடும்பங்கள் பலவானாலும் ஒரு குறிப்பீட்ட விழாக்கள், பொது நிகழ்ச்சிகள் என மற்றக் குடும்பங்களுடன் இணைந்து செயலாற்றுவர். அப்போது அது சமூகமாக மாறுகிறது. பண்டைக் காலத்திலும் தனித்தனியே வாழ்க்கை நடத்தி வந்த / சுற்றித்திரிந்த மனிதன் குடும்பம் என்ற அமைப்புகள் மூலமே ஒரு நிலையான இடத்தைப் பெற்று வாழத் தலைப்பட்டான். இந்தக் குடும்பங்களும் தனிக் குடும்பம், கூட்டுக் குடும்பம் என இரு வகைகளில் அமைகிறது. இந்தத் தொகுப்பு ஒன்றிணைகிறபோதுச் சமூகமாக மாறுகிறது. சமூகவியலாளர்களால் கூறப்படும் சமூகத்திற்கானப் பண்புகளுக்கானக் கருத்துக்களாக இவற்றைக் குறிப்பிடலாம்.

### *2.6.2 சமூகம் என்பதின் பண்புகள்:-*

1. ஒரு குறிப்பிட்ட மரபுகளை பெற்றிருத்தல்.
2. ஒரு குறிப்பிட்ட விழாக்களில் ஒன்றிணைதல்.

3. திருமணம், போன்ற நிகழ்வுகளின் மூலம் தங்களை தொடர்பு படுத்திக் கொள்ளுதல்
4. ஒரு தலைவனைக் கொண்டு இயங்குவது.
5. பழக்க-வழக்கங்களை ஒரே மாதிரியாகப் பெற்றிருப்பது.
6. ஒற்றுமையாக இருப்பது.
7. தங்களுடைய பிரச்சனைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளுவது என்ற வகையில் இந்தப் பண்புகளைப் பெற்றிருக்கும்.

***2.6.3 குடும்பத்திற்கான பண்புகள்:-***

1. ஒரு தலைவனைக் கொண்டு இயங்குவது (ஆண் அல்லது பெண்).
2. சொந்த முடிவுகளுக்கு தலைவனின் முடிவை எதிர்பார்த்திருத்தல்.
3. ஒற்றிணைந்து செயல்படுவது.
4. திருவிழாக்கள்/திருமண நிகழ்வுகளில் தலைவனின் அனுமதியோடு பங்கு கொள்ளுதல்.
5. தங்களுக்கான உணவைத் தலைவி (பெண் ) சமைத்துக் கொள்ளுதல்.
6. தலைவனின் ஒத்திசைவுடன் திருமண உறவு வைத்துக் கொள்ளுதல்.
7. பிள்ளைகளைப் பேணி வளர்த்தல்/உணவு, இடம், கல்வி அளித்தல். பேணிப் பாதுகாத்தல்.

மேற்குறிப்பிட்ட அறிஞர்களின் கருதுகோளினைத் துணையாகக் கொண்டுச் சமூகம், குடும்பம் என்பனவற்றின் பொருளை ஓரளவிற்குப் புரிந்து கொள்ள முடியும்.

## 2.7 சமூகவியல்:-

சமூகவியல் என்பது சமூகத்தையோ அல்லது சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் குடும்பங்களையோ படிப்பது அல்லது ஆய்வது எனலாம். அறிவு சார்ந்தப் படிப்பு என்பதால் அறிவியல் என்றும் புவி சார்ந்தப் படிப்பு என்பதால் புவியியல் என்றும் அழைக்கப்படுவதைப் போன்றே "சமூகம்" சார்ந்தப் படிப்பு என்பதால் சமூகவியல் எனப்படுகிறது எனலாம். சமூகம்+இயல்=சமூகவியல். எனவே, குடும்பங்களையும் அதன் கூட்டமைப்பானச் சமூகத்தையும் பற்றிப் படிப்பதேச் சமூகவியல் என்பதை நாம்

புரிந்து கொள்ளலாம். இந்த விளக்கத்தில் கூறப்பட்டக் கருத்துக்களின் வழியே "இமையம்" படைப்புகள் எந்த வகையில் சமூகத்தைப் பிரதிபலிக்கிறது என்பதையும் குடும்பம் , சமூகம் ஆகிய இரு நிலைகள் எவ்வாறு இமையம் படைப்புகளில் கட்டமைத்துப் படைக்கப்படுகிறது என்பதைச் சமூகவியல் பார்வையோடு காண்போம்.

இந்தியவின் சமூகச்சூழல் என்பதேச் சாதியின் பின்புலத்தோடு இயங்குவது. இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட அல்லது ஒட்டு மொத்தச் சமூகக் கூட்டமைப்பின் அடையாளமாகச் சாதியைக் கூறலாம். ஆதலால் இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்தியச் சமூக ஆய்வு என்பது சாதியைப் பற்றியதான ஆய்வாகக் கருதலாம். சமூகத்தில் சாதி என்பது தலைமைப் பண்புடன் இருப்பதைக் காணலாம். சாதியே அனைவருக்கும் தலைவர். சாதியேக் கடவுள், சாதியே உயிர், சாதியே அனைத்தும். சாதியை இழந்தவன் இந்தியாவில் வாழத்தகுதியற்றவனாகிறான்.

சாதியின் தோற்றம் வளர்ச்சிப் பற்றி ஏற்கனவேச் சொல்லப்படத்தினால் அதற்கான விளக்கம் தேவைப்படாது. தமிழகத்திலும் இந்தச் சாதியை முன்நிறுத்தியே அனைத்துச் சமூகங்களும் வாழ்ந்து வருகிறது. தங்கள் வாழ்க்கையில் எது இருக்கிறதோ? இல்லையோ? (மானம், பொருளாதாரம், துணி, மனைவி, கணவன், பிள்ளை, படிப்பு, கல்வி, இடம், தொழில் இவைகள் இல்லையென்றாலும் பராவாயில்லை சாதி ஒன்று மட்டும் இருந்தால் பிழைத்துக்கொள்ளலாம்) உலகம் இருக்கும் வரையில் சாதியிருக்கும் என்ற பெருமாள் முருகன் அவர்களின் கருத்திற்கேற்பச் சாதிச் சார்ந்து இயங்கும் மனிதர்களின் வாழ்வியல் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றியே இன்றைய நவீன இலக்கியங்கள் பதிவு செய்கிறது. உதாரணமாக "இமையம்" - படைப்புகளைக் காட்டலாம்.

இமயம் படைப்புகளைச் சமூகவியல் சார்ந்த ஆய்விற்கு உட்படுத்தும்முன் சமூகவியல் சார்ந்தத் திறனாய்வின் வழி இலக்கியத்தை எவ்வாறு அணுக வேண்டும் என்ற கருதுகோளினைக் காணலாம். ஒரு படைப்பு அல்லது இலக்கியம் சமூகத்தை அல்லது மனிதர்களின் வாழ்வியலை எவ்வாறு சித்தரிக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்குச் சமூகவியல் திறனாய்வு என்ற இலக்கிய ஆய்வு துணையாக நிற்கிறது. சமூகவியல் திறனாய்வு என்பது குறிப்பிட்டப் படைப்பாளர் அல்லது படைப்புகள் சமூகத்தைச் சார்ந்த மனிதர்களை , குடும்பங்களை, சமூகத்தை எவ்வகையில் படைத்துக்காட்டுகிறது என்பதைக் காண உதவுகிறது. ஏன்?

சமுதாயவியல் அணுகுமுறையுடன் படைப்புகள் ஆராயப்பட வேண்டும் என்றால், அதற்கு காரணம் தமிழ்ச் சமூகங்களின் கட்டமைப்பே எனலாம். தமிழ்ச் சமூகங்கள் தங்களுக்கெனத் தனித்த பண்பாட்டைச் சாதிகளாகப் பெற்றுள்ளது. ஆதலால் தமிழர்களின் வாழ்வு பண்பட்டது எனக் கூறினால், சாதிகளே இங்கு பண்பட்டதாக உள்ளது எனப்பொருள்படும். தமிழகத்தின் பண்பாட்டுக் கலாச்சாரம் என்பதே சாதி பார்த்து பிறருடன் பழகுவதுதான். தனக்கு இணையான சமூகமாகவோ அல்லது தனக்கு மேலான சமூகத்தோடு பழகுதல் என்ற முறையே அனைவராலும் பின்பற்றப்பட்டு வருகிறது. தங்களுக்குக் கீழ் உள்ளச் சமூகக்குழுக்களை அவர்கள் மதிக்கமாட்டார்கள், அத்துடன் தனக்குக் கீழானச் சமூகக்கட்டமைப்பை உடையவர்களைச் சாதியின் பெயரில் தாழ்த்தி தங்களுக்குக் கீழ் படிந்து நடக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்துவார்கள். அத்துடன் அவ்வாறு கீழ்படிந்து நடப்பவர்களின் உழைப்பைச் சுரண்டுவர், அவர்களைத் தீண்டப்படாதோர் எனப் பெயரிட்டு அழைப்பர். இது காலங்காலமாக இருந்து வந்ததால், இந்தக் கீழானச் சமூகக்கட்டமைப் பெற்றுள்ளத் தீண்டப்படாதச் சமூதத்தாரின் உரிமைப் பிரச்சனைகளைப் பற்றிப் பேசுவதே இன்றைய நவீன இலக்கியங்கள் இலக்காக அமைகிறது.

இந்தப் பின்னணித் தளத்துடன் இயங்கிக் கொண்டிருப்பதுதான் தமிழ்ச்சமுதாயத்தின் பின்புலம். இவர்கள் திருமணம் என்ற ஒரு முறையில் இன்னும் தங்களை மாற்றிக் கொள்ளாததேச் சாதியம் வளர்வதற்குக் காரணம் என முற்போக்கு வாதிகள் கூறுவர். இக்கருத்தைச் சற்று ஆழமாகப் பார்த்தால், தமிழனுக்கு மட்டுமல்ல, இந்தியனுக்கும் இந்த உண்மைப் புரியும். ஆனால் இதனை யாரும் அவ்வளவு எளிதில் ஏற்றுக்கொள்மாட்டார்கள். அதிகாரம், பொருளாதாரம், அரசியல் என்னும் மையமேச் சாதியத்திற்கு காரணம் என்பதோடு பெண்ணும் சாதிக்குறிய அடையாளமா மாற்றப்பட்டுள்ளதையும் இங்கு காணலாம். அதிகாரம், பொருளாதாரம், அரசியல் என்ற மூன்றும் பெண்களைச் சார்ந்து இயங்குவதாகக் கூறுவாரும் உள்ளனர். இந்த அரசியல், அதிகாரம், பொருளாதாரம் என்னும் மையத்தை நோக்கியப் பயணத்தின் போட்டிகளே "சாதியம்" என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். வாதங்கள் எதுவானாலும், சாதியம் மட்டும் தீரப்போவதில்லை.

இந்த இறுக்கமானக் கட்டமைப்புக் கொண்ட இந்தத் தமிழ்ச் சமூகங்களின் இன்றைய வாழ்வியலைப் புரிந்து கொள்ள "இமையம்" போன்றப் படைப்பாளர்களின் இலக்கியங்கள் துணை நிற்கின்றன.

"அடிப்படையானப் பொருளியல் (Material) வாழ்க்கையைச் சமுதாய இருப்பு (Social Being) என்றும், அதன் காரணமாக வெளிப்படும் விளைவுகளையும் அதனால் தீர்மானிக்கப்படுவனவுமாகியக் கருத்து நிலைகளில் தோன்றுகின்றவற்றையும் சமுதாய உணர்வுகள் (Social Consciousness)"[9] என மார்க்சியம் கூறும், இக்கருத்தின் வழியே, இலக்கியங்கள் என்பது, சமூதாயத்திற்குள் காணப்படும் மனிதர்களின் நிலைப் பற்றி எடுத்துரைப்பது அல்லது மனிதர்களிடையேக் காணப்படும் இன்பம், துன்பம், சிக்கல், பிரச்சனை,முரண்பாடு, உறவு நிலை, சங்கட நிலை, கோபம்,தாபம்,பொறாமை,நல்லது,கெட்டது, காமம், கடவுள்,மேல்கீழ் பேதமை,அதிகாரம்,அரசியல்,பணபலம், போன்ற அனைத்தையும் அல்லது ஒரு சிலவற்றை மட்டும் பேசுபவையாக இருப்பதே இலக்கியங்கள் எனப்படுகிறது. ஆதலால் இலக்கியங்கள் என்பதை மனித உறவுகளுக்கிடையே உள்ள சிக்கல்களை அடியொட்டி அமைந்துள்ள மௌன விமர்சம் எனலாம்.

"இமையம்" படைப்புகளுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவுகளை புரிந்து கொள்ள பின்வரும் சமுதாயவியல் அணுகுமுறையின் கருதுகோளினை முன்வைத்து ஒப்பிட்டு ஆராயலாம்.

## 2.8 படைப்பும் சமூதாயப் பின்னணியும் :-

ஒரு படைப்பு என்பது பின்வரும் நிலைப்பாட்டின் அடிப்படையில் படைக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது ஒரு படைப்பு பின்வரும் நிலைப்பாட்டினைப் பெற்றிருக்க வேண்டும் என தி.சு.நடராசன் திறனாய்வுக் கொள்கைகளின் வழியே கூறுகிறார்.

### 2.8.1 I. சமுதாயப் பின்னணி அல்லது களம் (Social Context / Background)

1. படைப்பிற்குரிய காலப்பின்னணி
2. படைப்பாளனுடைய சமுதாயப் பின்புலம்

### 2.8.2 II. எதிர்கோள் அல்லது ஏற்பு (Social/ Readers Response)

1. உடனடியாக எதிர்கொள்ளல்-சூழல்
2. போற்றலும் புரத்தலும், புறக்கணித்தலும்

**2.8.3 III. சமுதாய சித்தரிப்பு (Social Content)**

1. சமுதாய நிறுவனங்கள் (Social Institution) திருமணம், தனிக்குடும்பம்,கூட்டுக் குடும்பம், சாதி, சமயம், சட்டம், அரசு.

2. சமுதாய உறவுகள் (Social Relation) குடும்ப உறுப்பினர்களிடையே, வர்க்கங்கள் மற்றும் ஏனைய பிரிவினரிடையே

3. சமுதாய நிலைப்பாடுகள் (Social Mobility)

   அ. கிராமிய வாழ்வு

   ஆ. நகர்ப்புறச் சித்தரிப்பு

   இ. குடிபெயர்வும் (புலம்பெயர்வு) அமர்வுகளும்

4. சமுதாயப் பிரிவுகளும் குழுக்களும் (Social Ethic Groups)

   அ. குலங்கள், சாதிகள், ஊர்

   ஆ. வட்டாரம், மொழி- அடிப்படையில்

   இ. தேசிய, துணைத் தேசிய இனங்கள் வர்க்கப் பரிவினைகள்

5. பழக்கவழக்கங்கள் (Social Habits)

   அ. நம்பிக்கைகள், சடங்குகள், பழக்கங்கள்

**2.8.4 IV. சமுதாய மதிப்புகள் (Social Values)**

அ. உடன்பாட்டு மதிப்புகள்

ஆ. காதல், கற்பு, தாய்மை, பாசம், புகழ், பக்தி, கொடை

இ. .எதிர்மறை மதிப்புகள்

பொய்மை, தீமை, பாவம், குடிப்பழக்கம், லஞ்சம், பித்தலாட்டம்

மதிப்பு மாற்றங்கள், தேக்கங்கள், சீரழிவுகள்.

### 2.8.5 V. சமுதாய சிக்கல்கள் (Social Problems)

அ. சமுதாய நிறுவனங்கள், பிரிவுகள், உறவுகளிடையே முரண்பாடுகளும் சுய முரண்பாடுகளும் - மோதல்கள், விளைவுகள், அந்நியமாதல், வறுமை, வேலையின்மை, குடும்பச்சிதைவு, அலுவல் மகளிர் பிரச்சனை, பெண்ணடிமை-சாதியடிமை.

### 2.8.6 VI.சமுதாய மாற்றங்கள் (Social Changes)

அ. உறவுகள், நிறுவனங்கள், மதிப்புகள் முதலியவற்றில் நிகழும் மாற்றங்கள்- காரணங்களும் விளைவுகளும்- கருத்து நிலை மாற்றங்கள்.[10]

மேற்கூறப்பட்டத் திறனாய்வுக் கொள்கைகளின் துணைகொண்டு இமையம் படைப்புக்களானப் புதினங்கள் மற்றும் சிறுகதைகள், இரண்டு தளங்களில் விளக்கப்படுகிறது. ஆய்விற்கு எடுத்துக்கொண்ட இமையத்தின் படைப்புகள் சுருக்கமாக விவரிக்கப்பட்டு பின்பு அவைத் திறனாய்வுக் கொள்கையோடு ஒப்பிட்டுப் பேசப்படும். ஒவ்வொன்றும் சமுதாயப் பின்புலம், ஏற்பும் எதிர்கொள்ளலும், சமுதாயச் சித்தரிப்பு, குடியிருப்புகள், இனக்குழுக்கள், சமுதாயமதிப்புகள், சமுதாயச் சிக்கல்கள், சமுதாய மாற்றம் என்ற தனித்தனித் தலைப்புகளில் அமைகிறது.

### 2.9 இமையம்: புதினங்களில் சமுதாயப் பின்புலம்:-

இந்த தலைப்பில், இமையம் - படைப்புகளானப் புதினங்கள் பொருத்திப்பார்ப்பதற்கு முன்பு "சமுதாயப் பின்புலம்" என்பது பற்றியக் கருத்துக்கள் எடுத்துரைக்கப்படுகிறது.

இலக்கியங்களின் சமுதாயப் பின்புலம் என்பது பற்றி தி.சு.நடராசன் அவர்கள் கீழ்கண்டவாறு திறனாய்வுக் கொள்கைகளை முன் வைக்கிறார்.

1. "படைப்பையும் படைப்பாளனையும் குறிப்பிட்ட சமுதாயச் சூழல் உருவாக்கியிருக்கின்றது. எனவே அவ்வக் காலச் சமுதாயச் சூழலின் பின்புலத்தினைப் புரிந்து கொள்வது சமுதாயவியல் திறனாய்வுக்கு அவசியம். ஏனெனில், படைப்பு-படைப்பாளன்-சமுதாயம் எனும் இவை, தமக்குள் நெருக்கமுறப் பிணைப்புக்

கொண்டவை என்று சமுதாயவியல் திறனாய்வு சொல்கிறது"

2. இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளச் செய்திகளும் அவற்றின் தன்மைகளும், குறிப்பிட்டச் சமுதாய அமைப்பின் காரணக் காரியங்களோடு நேரடியாக உறவு கொண்டவை. இவற்றைச் சரிவரப் புரிந்து கொள்ளுகிறபோது இலக்கியத்தின் செய்திகளும் சரிவரப் புரிந்துகொள்ளப்படுகின்றன. இலக்கியம் சமூகத்தை அப்படியே நேருக்கு நேராகப் பிரதிபலிக்கிறது என்று கூறிவிடமுடியாது..

3. இலக்கியப் பண்புகள், கலைவுருவாக்க நெறிமுறைகள் முதலியவற்றிற்கு ஏற்பவே, இலக்கியம் ஒரு சமுதாயத்தின் விளைபொருளாக மதிப்பிட வேண்டும் என்பதனை மறந்துவிட முடியாது.

4. இலக்கிய அரங்கத்துள் இருக்கும் உண்மைகள், அன்றையச் சமுதாயத் தளத்தில் வைத்துக் காணுகிறபோதுதான் அம்பலத்துக்கு வருகின்றன.

இந்த நான்குக் கொள்கைகளின் வழியே இமையம் படைப்புகளின் சமுதாயப் பின்புலம் ஆராயப்படுகிறது.

## 2.10 புதினங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | கோவேறு கழுதைகள் | - | 1994 |
| 2. | ஆறுமுகம் | - | 1999 |
| 3. | செடல் | - | 2006 |

## 2.11 கோவேறு கழுதைகள் (1994):-

"ஆரோக்கியம்" என்ற கதாப்பாத்திரத்தை மையப்படுத்தியே இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது. "சவுரி" ஆரோக்கியத்தின் கணவனாகத் துணைப்பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளது. ஆரோக்கியத்தைச் சுற்றி கதை நகர்கிறது. ஆரோக்கியத்தின் கணவன் சவுரி. இவர்களுக்கு ஜோசப், மேரி, பீட்டர்

என்ற மூன்று குழந்தைகள் இருக்கின்றனர். "கீழ்ச்சாதி வண்ணார்" என்ற இனத்து மக்கள், தமிழகச் சாதியின் கட்டமைப்பில் கீழ்ச்சாதிக்கும் கீழ்ச்சாதியாகச் சிக்கித் தவிக்கின்றனர் என்பதின் சமூகப்பின்புலம் இதில் காட்டப்பட்டுள்ளது. ஊரில் உள்ள அனைவருக்கும் ஏவல் வேலை செய்து வருவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. . துணி வெளுத்துத் தருதல் இவர்களின் முக்கிய தொழில். வீடுவீடாகச் சென்று "ராச்சோறு" கேட்டு உணவு உண்ணும் பழக்கத்தைக் கொண்டவர்களாக, இந்நிலையில் வாழ்பவர்களாக இச்சமூகத்தின் பின்னணியில் ஆரோக்கியத்தின் குடும்பம் காட்டப்பட்டுள்ளது. ஊரில் நிகழும் பிறப்பு, இறப்பு போன்றவற்றில் கீழ்நிலை ஏவல் வேலைகளைச் செய்து வருதல்,குழந்தைப் பேறு, வயல்களில் கூலி வேலை செய்து வருதல், பிற ஏவல் தொழில்களைச் செய்து வருதல் போன்றவைகள் இவர்களது தொழிலாகக் காட்டப்பட்டுள்ளது. கணவன் சவுரி யார் எதைச் சொன்னாலும் பேசாமல், அழுக்குப்படிந்த வேலைகளை முகங்கோணாமல் செய்பவன். மனைவி ஆரோக்கியம் (கதைத்தலைவி) கணவன் மாரியுடன் சேர்ந்து ஏவல் தொழிலைச் செய்தாலும், ஊரில் யாரேனும் குறைவானப் பொருள்கள் (தானியங்கள், பழைய துணிகள், வேலைக்கூலி) தரும்போது வாய்விட்டு கேட்டுப் பெற்று தன் குடும்பத்தை வழி நடத்துபவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. பெரிய மகன் ஜோசப் ஆரம்பக் காலத்தில் துணிகளை வெளுத்தல், இறப்புச்சடங்குகளில் பங்கெடுத்தல், இராச்சோறு கேட்டல் போன்றவற்றில் தன் பெற்றோர்களுக்கு உதவியாக அவர்களுடன் இணைந்தும், தனித்தும் இயங்குவதாகக் கதாப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. சகாயம் ஜோசப்பின் மனைவி, துணி வெளுத்தல், இறப்பு, பிறப்பு, திருமணச்சடங்கு, பெண்கள் வயதிற்கு வருதல், குழந்தையைப் பெற்றெடுத்தலில் உதவி என எந்த வேலையையும் செய்ய மறுக்கும் கதாப்பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளது. இந்த சாதித்தொழிலிருந்து விடுதலைக்கான வழியாக தனது பிறந்த ஊருக்கே ஜோசப்பையும் அழைத்துச் சென்று விடுகிறாள்.

ஆரோக்கியம்-சவுரி-இருவரின், இரண்டாவது மகளான "மேரி" வயதிற்கு (பூப்படைதல்) வரும் முன் (தாய் தந்தை போல) இராச்சோறு எடுத்தல், துணி வெளுத்தல் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுகிறாள். பூப்படைந்தவுடன் தனக்கு நேரும் பாலியல் தொல்லைகளால் "இராச்சோறு" எடுப்பதைத்தவிர்த்து, பகலில் மட்டும் வீடுவீடாகச் சென்று அழுக்குத் துணியெடுக்கவும் அனுமதிக்கப்படுகிறாள். மேரியும் அதைத் தவிர்த்து வெளுப்புத் தொழிலில் மட்டும் துணையாக இருக்கிறாள்.

ஆரோக்கியம்-சவுரி இருவரின் கடைசிப் பையன் பீட்டர் சிறுவயது முதலே அழுக்குத் துணியை வீடுவீடாகச் சேகரித்தல், இராச்சோறு வாங்கல், இறப்பு, திருமணம் போன்றவற்றில் கீழானச் சடங்குகள் செய்ய சவுரி-தந்தைக்குத் துணைாக இருக்கிறான். இவன் வளர்ந்து வருகையில் சில ஏவல் பணிகள் செய்ய மறுத்ததோடு ஊர் பெயர்களுடன் சேர்ந்து, ஊர்சுற்றி, வம்பு சண்டையில் ஈடுபடுகிறான். பதினான்கு வயதில் யாரிடமும் சொல்லாமல் ஊரைவிட்டு போய்விடுகிறான்.

மேரி ஒருமுறை ஆரோக்கியத்திற்குப் (தாய்) பதிலாக ஊரில் சென்று அழுக்குத்துணிகளைச் சேகரித்து வரும்போது பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகிறாள். இதைச் சொன்னால் ஊரை விட்டு துரத்தப்படுவோம் என்ற அச்சத்தினால் ஊருக்குப் பயந்து யாரிடமும் சொல்லாமல் அவளும் அவளுடைய அம்மாவும் மறைத்து விடுகின்றனர். ஆரோக்கியம் இதனைத் தாய் என்ற முறையில் தானாகவே நடந்தது பற்றி அறிந்து கொண்டு இருவரும் அழுது புலம்பி நாட்களைத் தள்ளும் வேலையில் மேரியின் அத்தை மகன் திரவியராஜ் மேரியைத் திருமணம் செய்து கொண்டு தன்னுடைய ஊருக்கு அழைத்துச் சென்று விடுகிறான். அடுத்தடுத்து தன் உறவு இழந்த ஆரோக்கியம் பிரிவு ஏக்கத்தாலும், வேலை பளுவினாலும் இளைத்து, துன்பப்பட்டு நாட்களை ஓட்டி வருகிறாள். தன் மகன் ஜோசப்பிற்கும் குழந்தை பிறக்கிறது. ஜோசப்-சகாயம் இருவரையும் தங்களுடன் வந்து இருக்கும்படி கேட்ட, அவர்கள் அதை மறுத்து விடுகின்றனர். ஆரோக்கியம் சவுரி, இவர்களை தாங்கள் குடிபோன ஊரில் வந்து, தங்களுடன் வந்து இருக்கும்படி கேட்கின்றனர். ஆரோக்கியம்-சவுரி மறுத்து விடுகின்றனர். மேரி-திரவியராஜ் தம்தியர்களுக்கு குழந்தைப் பிறக்கிறது. இரண்டு ஆண்டுகள் கழித்து திரவியராஜ் பாம்பு கடித்து இறந்து விடுகிறான். மேரி தன் குழந்தைகளுடன் மீண்டும் தன்னுடைய ஊருக்கு வந்து பெற்றோருடன் வசித்துவருகிறாள். மீண்டும், துணி வெளுத்தல் போன்றச் சாதி சார்ந்த வேலைகளைச் செய்து வருகிறாள். இவ்வாறாக ஆரோக்கியம்-சவுரி இவர்களின் குடும்ப வாழ்வினை மையமிட்டு இக்கதை அமைக்கப்பட்டுள்ளது. இது சாதியின் இழிவினை முன்னிறுத்திப் படைக்கப்பட்ட சிக்கலான வாழ்வினைக் கொண்ட புதிரை வண்ணார் என்ற சாதியின் பின்புலத்தை எடுத்துரைப்பதாக இருக்கிறது.

## 2.12 கோவேறு கழுதையின் சமூகப்பின்புலம்:-

கோவேறு கழுதை என்னும் புதினம் தலித் மக்களின் ஒரு பிரிவினரான புதிரை வண்ணான் என்ற சாதியத்தின் பின்புலத்தை மையப்படுத்திப்

படைக்கப்பட்டுள்ளது. ஒடுக்கப்பட்டவர்களானப் பறையர்கள் தங்களக்கு கீழ் ஏவல் பணிகளைச் செய்ய "புதிரை வண்ணான்" என்ற ஒருத் தனிப்பிரிவைப் பெற்றுள்ளனர். குடி வண்ணான் என்ற பிரிவில் இருக்கும் வண்ணான்கள், மேல்ச் சமூகத்தாருக்கு மட்டுமே ஏவல் பணிகளைச் செய்து வருபவர்கள். துணி வெளுத்தல், இறப்பு, பிறப்பு, திருமணச்சடங்கு போன்றவற்றில் பங்கு கொண்டு, மேல்ச்சாதியினரின் ஏவல் பணிகளை, கீழ்ச்சாதி என்றத் தீண்டாமையைப் பெற்றுக் கொள்ளாமல் (தீண்டாமை இவர்களுக்கு இல்லை) உரிமையுடன் மேல்ச்சாதியினரின் வீடுகளுக்குள் சென்று வேலைகளைச் செய்பவர்கள் இவர்களைக் "குடி வண்ணார்" என அழைக்கும் வழக்கத்தை நாட்டார் வழக்காற்றியலில் காணலாம்.

கோவேறு கழுதைகள்-புதினத்தில் இக்குடிவண்ணார் முதன்மைப்படுத்தப்படாமல். கீழ்ச்சாதி வண்ணார்களான "புதிரை வண்ணார்" என்போர்கள் கதையின் மாந்தர்களாக வலம் வருகின்றனர். கீழ்ச்சாதிக்கும் கீழ்ச்சாதியாகக் காட்டபெற்றுள்ள ஆரோக்கியம்-சவுரி இக்கதையின் மையப்பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இக்கதையின் மூலம் புதிரை வண்ணாரின் சமூகப்படிநிலையின் நிலை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இன விடுதலை வேண்டிப்போராடும் கீழ்சாதியான பறையர்கள் தங்களுக்குக் கீழே ஒரு சாதியை அடிமையாக நடத்தும் அவலம் இதில் காட்டப்பட்டுள்ளது. இதில் புதிரை வண்ணார் என்ற சாதியின் குடும்பம் சார்ந்த வாழ்வியல் நிகழ்வுகளை அறிந்து கொள்ளலாம். இவர்களுக்கானத் தனித்த இன அடையாளங்கள் ஏதும் இல்லை என்பதை இப்புதினத்தின் மூலம் எடுத்துரைத்துள்ளது.

மேல்படிநிலையில் இருக்கும் பிறச் சாதிகளான செட்டியார், கவுண்டர், சேர்வை, பிள்ளை, போன்றக் குடியானவர்களோடுப் பறையர்களும் புதிரை வண்ணார் சமூகத்தின் உழைப்புச் சுரண்டப்படும் நிகழ்ச்சிகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பறையர்கள் என்போர் அடிநிலையில், தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களுக்குச் சேவைப்பணியாற்றிடப் "புதிரை வண்ணார்" பரிவு எவ்வாறு மேலும் தாழ்த்தப்பட்டுக் கீழ்சாதிக்குக் கீழ்சாதியாக ஆக்கப்பட்டுள்ளது என்பதை புதினத்தின் உரையாடல் வெளிப்படுத்துகிறது.

> **"எங்க போனாலும் நாம இன்னொருத்தருக்குக் கீழ் கீழ்சாதிக்குக் கீழ்ச்சாதி வேலை செய்யறவுங்கள இப்படித்தான் செய்வாங்க" (கோ.க-பக்-7)**

என்றத்தலைமைக் கதாபாத்திரமான ஆரோக்கியம் தன் மகளிடம் கூறுவதைப் போல் ஆசிரியர் இச்சாதியின் இருப்பதை நமக்குத் தெரியப்படுத்துகிறார்.

**"சும்மா இருக்கிற காலத்துல கோவிலுக்கு எதுக்கு?"**

**"துணியை யாரு வெளுக்கிறது?"**

**"திடுதிப்புனு குடும்பத்தோடு போறங்கறது எந்த ஊரு ஞாயங்கறன்?"**

**"ஊருல நம் வண்ணாம் போக்கே சரியில்லை வேற ஊரு வண்ணானெக் கொண்டாற வேண்டியதுதான்" (கோ.க.அத்-1,பக்-1)**

ஊரார் பேசுவதைப் போல அமைந்துள்ள இந்த உரையாடலில், "மேல்சாதியின் சமுதாய அடக்குமுறையும், கீழ்சாதி வண்ணான் சமூகத்தின் அடித்தட்டு நிலையும் நமக்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேல்ச்சாதிக்காரர்களின் அடக்கு முறைகளானப் பேச்சுக்களே அவர்களின் சமுதாய இருப்பை வெளிப்படுத்துகிறது என்பதாக இது அமைந்துள்ளது.

**"திங்கறச் சோறும், படுக்கறதுக்கு எடமும் இருக்கிறவுங்களுக்குத்தான் கோவிலு, சாமியெல்லாம் சொந்தம்-பந்தமெல்லாம் சூத்துல துணியில்லாதவனுக்கு ஏது?" (கோ.க-அத்-1,பக்-1)**

என்ற இந்த உரையாடலில் "புதிரை வண்ணார்" சமூகத்தின் ஒட்டு மொத்த இருப்பும் காட்சிப்படுத்தப்படுகிறது. இவர்கள் தனித்து இயங்கும் நிலையில் இல்லை. மேல்சாதியினரைச் சார்ந்து வாழ்பவர்கள் என்றச்சமூக நிலை இதனுள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஒரு சமூகம் என்பது தனித்தப் பண்புகளைப் பெற்றிருத்தல் என்ற வரையறைக்குள் இல்லாமல் இவர்கள் சொந்த வீடோ, இடமோ இல்லாமல் அலையும் அலைகுடியினராக, நாடோடிகளாக இருக்கின்றனர் என்பதையே இப்புதினம் எடுத்துரைக்கிறது.

## 2.13 செடல் (2006) : புதினம்: சமூகப்பின்புலம்:-

தலித்துகளின் வாழ்க்கையை முன்னிறுத்திப் படைக்கப்பட்டுள்ளது. மதங்களாலும், சாதி அமைப்புகளாலும், புராணங்களாலும், இதிகாசங்களாலும் ஐதீகங்களாலும், சடங்குகளாலும் இறுகக் கட்டமைக்கப்பட்ட இந்திய-தமிழ்ச்சமூக வாழ்க்கையைப் புரிந்து கொள்ள செடல் என்ற புதினம் துணைநிற்கிறது.

## 2.13.1 கதைக்கரு :- முதல்பாகம்:-

செடல்(2001)-புதினம் மூன்று பகுதிகளாக (Part) வெளிவந்துள்ளது. **"பொட்டுக் கட்டுதல்"** என்ற மூடநம்பிக்கை மரபுபடி ஒரு பெண் சிறிய வயதிலேயே பொட்டுகட்டிவிடப்பட்டு அனாதையாக்கப்படும் ஒரு கீழ்சாதிப் பெண்ணின் அவலத்தோடு இக்கதை இயங்குகிறது. செடல் என்பது ஒருவகை விளையாட்டு. விளையாட்டினைக் காணும்போது பிரசவத்தின் மூலம் அங்கேயேக் குழந்தைப் பெற்றதினால், அக்குழந்தைக்கு செடல் எனப்பெயரிப்படுவதாகக் கதை கூறுகிறது. இந்தப் பெயருள்ளப் பெண்ணின் தனிமையும், அவளின் வாழ்க்கைப் போராட்டங்களும் கதையின் கருவாக அமைகிறது.

"கோபால்-பூவரும்பு தம்பதிகளுக்கு எட்டு குழந்தைகள். செடல் என்ற பெண்பிள்ளை எட்டாவதாகப் பிறந்தவள். அவர்கள் வாழும் ஊரில் உள்ள மேல்ச்சாதிக்காரர்கள் ஒன்று கூடி மழை வேண்டிச் சாமிக்காக ஐதீகங்களையும், புராணங்களையும் காரணம் காட்டிச் செல்லியம்மனுக்கு செடலைப் பொட்டுக்கட்டி விடுகின்றனர். பெற்றோர்களும் தங்களின் அடிமை நிலையை உணர்ந்து ஊராரின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு செடலைப் பொட்டுக்கட்டச் சம்மதிக்கின்றனர். செடல், சின்னம்மாள் என்ற கிழவியுடன் கோயில் பக்கத்தில் ஒரு குடிசை அமைத்து தங்க வைக்கப்படுகிறாள். கோயில் இடத்தையேச் சுற்றிச்சுற்றி வருகிறாள். வீட்டுக்குப் போகக்கூடாது அவ்வாறு போவது சாமிகுத்தம் எனப் பயமுறுத்தப்படுகிறாள். "சாமிபிள்ளை" என்று அனைவராலும் அழைக்கப்பட்டச் "செடல்" கோயிலைக் கூட்டுவது, சுத்தமாக வைத்துக் கொள்வது போன்ற வேலைகளைச் செய்து வருகிறாள். பூவரும்பு-கோபால் (செடலின் தாய் தந்தை) பஞ்சம் பிழைப்பதற்காக ஊரை விட்டேப் போய் விடுகின்றனர். செடல் அனாதையாக ஆக்கப்படுகிறாள். இந்நிலையில் "சாமிபிள்ளை" என்ற பெயருடன் வீட்டுக்கு வீடு சென்று கிடைத்தத் தானியங்களை வைத்து கிழவி சின்னம்மாளுடன் சேர்ந்து வாழப் பழகிக்கொள்கிறாள். ராமலிங்கஅய்யர் என்பவரின் மூலம் சாமிப் பாடல்களைப் பாடியும் , ஊரில் இருப்போருக்கு மந்திரம் சொல்லி நோய் நொடிகளைத் தீர்க்கவும் பழகிக்கொள்கிறாள். அனைத்து ஊர்களிலும் நடக்கும் திருவிழாவிற்குச் சென்று செல்லியம்மனின் கதையைப் பாடல்களாகப் பாடியும் கதையாகவும் சொல்லி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து காலம் தள்ளுகிறாள். ஒவ்வொரு வீடாகச் சென்று சாமிக்குச் சிறப்புச் செய்யும் போதும் கடலை, கேழ்வரகுக் கதிர், சோளக்கதிர், கம்பங்கதிர் போன்றவற்றை ஊதியமாகப் பெறுகிறாள்.

இதற்கு நடுவில் ஏசு சமயத்தைப் பரப்பப் பாதிரியார் ஒருவர் ஊர்ப் பெரியவரான நடராசப்பிள்ளையின் மூலம் பறையர்கள் வாழும் பகுதிக்குள் பள்ளிக்கூடம் ஒன்றைக் கட்டுகிறார். கல்வியுடன் மதம் மாற்றமும் நடக்கிறது. கீழ்ச்சாதியினர் பயிலும் பள்ளியில் படிக்கவைக்க விரும்பாத மேல்ச்சாதியனருக்கு தனிப்பள்ளி ஒன்று நடராசப்பிள்ளையின் மூலம் கட்டித்தரப்படுகிறது.

பாதிரியார் யாரை வேண்டுமானாலும் தன் மதத்திற்கு சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் "செடலை" மட்டும் அழைத்துப் பேசவோ! அவளுடன் பழகவோ கூடாது என அறிவுறுத்தவும் பட்டதுடன் மிரட்டவும் படுகிறார்.செடலுக்கும் அவ்வாறே அறிவுறுத்தப்படுகிறது.

ஊரில் மழை பெய்கிறது. ஊர் வளம் பெறுகிறது. ஆனால் செடலின் வாழ்வு அப்படியேதான் உள்ளது. பொட்டுகட்டி விடப்பட்டச் "செடலையை" ஊரார் மறந்தே போயினர். வீடு வீடாகச் சென்று பிச்சையெடுப்பதைப் போல பொருள் பெற்று வாழ்ந்து வரும் வாழ்க்கையில் கிழவி சின்னம்மாள் இறந்து விடுகிறாள். செடல் யாரும் அற்ற அனாதையாகிறாள். செடல் பூப்படைகிறாள். பூப்படைந்தவள் தீட்டுப்படுவதால் இனி கோயிலுக்குப் போகக் கூடாது என்ற நிலையில் தனித்து நிற்கிறாள். பெற்றோரும் இல்லை, கிழவியும் இல்லை, வீடும் இல்லை இனி என்ன செய்வாள்? என புதினத்தின் முதல் பகுதி முடிகிறது.

### 2.13.2 இரண்டாம் பாகம்:-

உற்றார் யாரும் இல்லாமல் பூப்படைந்த நிலையில் "செடல்" செய்வதறியாது தனித்து நின்ற போது "பொன்னன்" என்ற தூரத்து உறவுக்காரன் வீட்டில் நெடுங்குளம் என்ற ஊரில் அடைக்கலம் புகுகிறாள். பொன்னனுக்கு அஞ்சலை என்ற மனைவியும் ஒரு மகனும் மகளும் இருக்கின்றனர்.

பொன்னன் ஒரு கலைக் கூத்தாடி, திருவிழாக்களில் நாடகம் போட்டு மகிழ்விப்பவன். திருவிழாக்கள் இல்லாதபோது சாவு வீட்டிற்குச் சென்று கூத்து கட்டுவான். இவன் கூட்டத்தில் "விட்டம்" "பாவாடை" "கர்ணன்" "ஆரான்" "தொப்பளான்" போன்றோர்களும் இருந்தனர். இவர்களுடன் சேர்ந்து கூத்து நடத்த செடலும் இணைந்து பல ஊர்களுக்குச் சென்று கூத்துக்கு துணை நிற்கிறாள். இவளும் "கூத்து" கட்டுவதைக் கற்றுக் கொள்கிறாள். அவ்வப்போது கோவில் திருவிழாக்களில் சாமிப்பாட்டு பாடுவதுடன் கூத்தும் நிகழ்த்தவும் செய்வாள். செடலால் நடத்தப்படும் கூத்தினைக் காண்பதற்கு கூட்டம் அதிகமாகச் சேர்ந்தது.

கூத்து நடக்கும் இடங்களில் பாலியல் தொல்லைக்கு ஆளாகிறாள். தப்பித்துக்கொள்கிறாள். குள்ளன், மண்ணாங்கட்டி, மீனாட்சி, பூங்கோதை போன்ற உறவினர்கள் வந்து அழைத்தும் அவளுடையப் பிறந்த ஊருக்குப் போக மறுத்துவிடுகிறாள். பொன்னன் இறந்துவிடுகிறான். பின், அந்த ஊரில் தனியாகவே வாழ்ந்துவந்தாள். இந்நிலையில் கூத்துச் சபையில் இருந்த "ஆரான்" என்பவன் "செடலை" இரண்டாம்தரமாக வைத்துக் கொள்ளத் திட்டமிடுகிறான். "செடல்" அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இதனால் இவர்களது "கூத்துச்சபை" இரண்டாகப் பிரிகிறது. ஆரான் தனியாகப் போய் வேறு ஆட்களுடன் இவளுக்குப் போட்டியாக கூத்து நடத்தி வந்தான். "செடலுடன்" விட்டம், பாவாவை, கர்ணன், தொப்பளான் போன்றோர்கள் துணையிருந்தும் கூத்து நடத்தச் சிரமப்படுகிறாள். என இரண்டாம் பாகம் கதை நிறைவு பெறுகிறது.

### 2.13.3 மூன்றாம் பாகம்:

பொன்னன் இறந்தபிறகு நெடுங்குளத்தில் "செடல்" தனியாகவே இருந்து துன்பப்படுகிறாள். போதிய வருமானம் இன்றி உணவுக்கு வழிதேடிக் கூத்தும், சாமிப்பாட்டும் பாடியும் கூடப் போதிய வருமானம் இன்றி வருந்துகிறாள். ஆண்களுடன் இணையாமல் உற்வு கொள்ளாமல் கற்பு என்பதில் உறுதியாக இருக்கிறாள். இவ்வேளையில் தன்னுடைய அக்கா வனமயில், அவளின் மகன் பரஞ்சோதி ஆகியோருடன் பழைய ஊரிலேயே மீண்டும் சென்று தங்கிவிடுகிறாள். ஊரில் பஞ்சாயத்தைக் கூட்டி பொட்டுக்கட்டினச் செடல் ஊருக்குத் திரும்பி வந்தது பற்றிப் பேசுகின்றனர். கொலைச்சிந்து அருணாச்சலம் செடலுக்கு ஆதரவாகப் பேசி பழைய ஊரிலேயே இருந்து விடுவதற்கு துணைச் செய்கிறான். வீரமுத்து உடையார் என்ற மேல்ச்சாதியைச் சார்ந்தக் குடியானவர், செடலை விரும்புவதாகக் கூறுகின்றான். செடல் இது குற்றம். ஊருக்கு ஆகாது. நான் கீழ்ச்சாதி, நீங்க மேல்ச்சாதி இது ஒத்து வராது என்று மறுத்து அவனுக்குப் புத்திமதியும் கூறுகிறாள்.

வனமயில் (மகன்) பரஞ்சோதி ஆகிய இவர்களோடு "செடல்" தனியாகச் சிரமப்பட்டுக்கொண்டு வாழ்ந்து வரும்போது, வனமயில் நோயினால் இறந்து விடுகிறாள். பரஞ்சோதியைத் தன் மகனாகவே ஏற்றுக்கொண்டு அவனுடன் இருக்கிறாள். ஊரில் செடலை கூத்துக்காரி என்றப் பட்டப்பெயருடன் அழைப்பதை பரஞ்சோதிக்கு பிடிக்காமல் போகிறது. அந்த ஊரில் உள்ள பாதிரியாரிடம் சர்ச்சில் வேலைக்கு சேர்கிறான். செடல் அழைத்தும் அவன் வர மறுக்கிறான். ஊராருடன்

சென்று அழைத்தும் பரஞ்சோதி வரவில்லை. சரி அவன் போக்கில் விட்டுவிடுங்கள் என பாதிரியார் சொல்ல, செடலும் அவ்வாறே செய்கிறாள்.

"பாஞ்சாலி" என்ற உயர்ச்சாதியைச் சார்ந்தக் கூத்துக்காரி அவ்வூரில் மிகவும் புகழ் பெற்றவள். கால் ஒடிந்து வீட்டிலேயே முடமாகக் கிடக்கிறாள். அவளுடைய "கூத்துச்சபையில் " இணைந்து கொள்ளுமாறு "செடலு" அழைப்புவிடப்படுகிறது. ஆரம்பத்தில் மறுத்தச் செடல் பின்பு பாஞ்சாலியின் அறிவுரையைக் கேட்டு கூத்து கற்றுக் கொடுக்கும் அரங்கம் ஒன்றை அமைக்கச் சம்மதிக்கிறாள். இதனிடையே அவள் வருமானத்திற்கு அவ்வப்போது ஊரில் சாவு ஏற்படும் போது சாவு வீட்டிற்குச் சென்று கூத்து நிகழ்த்தவும் செய்தாள் எனப் புதினம் முடிவடைகிறது.

### 2.14 செடல் - புதினம்: சமூகப்பின்புலம்:-

"செடல்" என்ற மையப் பாத்திரத்தைக் கொண்டு புதினம் மூன்று பகுதிகளாக (PART) படைத்துக்காட்டப்பட்டுள்ளது. மழை பெய்யவில்லை என்பதற்காக ஊரில் உள்ள மேல்சாதிக்காரர்கள் ஒன்று கூடி யாரையேனும் செல்லியம்மன் கோயிலுக்கு "பொட்டுக்கட்டி" விட்டால் மழை வரும் என்ற மூடநம்பிக்கையை எடுத்துரைக்கிறது. பயன்படுத்திச் சின்ன வயதிலேயேச் "செடல்" பொட்டுக்கட்டி - சாமிப்புள்ள எனத் தனிமைப்பட்டு, தாய் தந்தையை இழந்து வளர அவள் கூத்தாடியாக மாறி, தன் வாழ்க்கை முழுவதிலும் சிரமப்படும் பெண்ணாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். இந்நாவில் மேல்ச்சாதிக்காரர்களின் மூடநம்பிக்கைகளுக்கு இலக்காகும் தாழ்த்தப்பட்டவர்களின் நிலையும், பெண் அதற்குப் பலியாகும் அவலநிலையும், கூத்தாடிகளின் சமுதாயப் பின்புலமும் இப்புதினத்தின் மையமாக் காட்டப்பட்டுள்ளது. ஐதீகம், புராணம், கடவுள் நம்பிக்கை போன்றவைகள், அடித்தட்டு மக்களை எவ்விதத்தில் பாதிக்கிறது என்பதையும், "பொட்டுக்கட்டுதல்" என்ற பழைய மரபுகளும், இதன் மூலம் பொட்டுகட்டப்பட்ட பெண்கள், கூத்தாடியாக மாறி வாழ்க்கையைத் தொலைக்கும் சமூக அவலநிலையும் இதனுள் பின்புலமாகக் காட்டப்பட்டுள்ளால். அனாதைகளாகச் சுற்றித் திரியும் "கூத்தாடிகளின் வாழ்வு" இங்கு காட்சிப்படுத்தப்படுத்தபடுவதுடன் சமுதாயத்தில் ஊடுருவியுள்ளக் கீழ்ச்சாதி, மேல்சாதி என்ற சாதியின் பின்புலம் "கூத்துக்" கலையையும் விட்டுவைக்கவில்லை என்பதாகப் இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது. தலித்து மக்களின் இயல்பு வாழ்வு இதனுள் சொல்லப்பட்டாலும், செடல் என்ற பெண்ணின் இயங்கு நிலையோடு சமூத்தின் பாலியல் ஆசைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

"ராமா என்றால் சாபம் போகும், ராமா என்றால் பாவம் போகும் ஒலகத்தாருக்கு, ஆனா! நம்பளுக்கு விதிச்சக் கொட பரத்தேவடியா என்கிற பட்டம்தான். படியேறினத் தேவிடியாங்கிற பட்டம் மட்டும் எத்தனை ராமனக் கூப்புட்டாலும் போன்னாலும் போவாது. இது மதுர மீனாட்சியோடேச் சாபக் கட்டளையாச்சே" (செடல்-பகுதி-3, அத்-2, பக்-235)

என செடல் கூறும் வார்த்தைகளின் மூலம் பொட்டுக்கட்டி விடப்படும் பெண்களுக்கு ஊரார் இட்டப் பெயர் "தேவடியா" என்பதையும் அதை யாராரும் மாத்திட முடியாது என்பதையும் பாத்திரங்களே உரையாடுவதைப் போல் ஆசிரியர் அவர்களது வாழ்வைப் புலப்படுத்துகிறார்.

"அவளே ஒரு பொட்டுக்கட்டி வுட்ட கூத்தாடிச்சி, அவளப் பத்தி ஊரெல்லாம் ஒரு மாரியாப் பேசுது. போயும் போயும் நீ அவகூட சேரலாமடி! அந்தக் கூத்தாடிப் பயலுக்கென்ன வயசி, இந்தக் குட்டிக்கு என்னவயசி, அவனோடே இவ வந்திருக்கான்னா, இது எப்படியாப் பட்டவள இருப்பா, இவளப் பத்தி எங்க போயித் தெரிஞ்சிக்கணும்? மருவாதயா வூட்டுல மொடங்கு, இல்லன்னா ஒங்கப்பன் காரன்கிட்ட சொல்லி, காலக் கையத் தெலக்கிப்புடச் சொல்லிடுவேன்." (செடல்; பாகம்-2, அந்-7, பக்-148)

என வரும் உரையாடலில் ஒரு தாய் தன் மகளுக்கு அறிவுரையாகச் சொல்லப்படுவது. பொட்டுக்கட்டி விடப்பட்டவர்களுடன் சேருதல், பேசுதல் என்பதை ஊரார் ஏற்றுக்கொள்வதில்லை என்பதை இதன் மூலம் ஆசிரியர் விக்குகிறார்.

"பொட்டுக்கட்டி விடப்பட்ட பெண்களும் லேசுப்பட்டவர்களில்லை. பின்னாலேயே சுற்றி சுற்றி வருகிற பையன்களிடம் சகஜமாகச் சிரித்துப் பேசுவார்கள். சட்டைப் பையில் கையை விட்டுக் காசு எடுக்கப்பார்ப்பார்கள். "சீலத்துணி ஒண்ணு எடுத்துத்தா. வெத்தலப் பாக்கு வாங்கக் காசுத் தா. பகடரு டப்பி, பொட்டு வாங்கியந்தாத்தான் ஒங்கூட பேசுவேன் என்று சொல்லிப் பசப்புவார்கள். மடியை அவிழ்த்துப் பார்ப்பார்கள். காசு இல்லாத ஆட்களைக் கிண்டலான

பாட்டைச் சொல்லி மட்டம் தட்டுவார்கள். பசை உள்ள ஆள் என்று தெரிந்தால் சிரித்தே, முகச் சொடுக்கல் போட்டே காரியத்தை முடித்து விடுவார்கள்." (செடல்:பாகம்-2, அத்-5, பக்-125)

என வரும் இந்தப் பகுதியில் பொட்டுக்கட்டி விடப்பட்டப் பெண்களின் நடத்தைகள் எடுத்துக்காட்டப்படுவது அவர்களின் ஒழுங்கற்ற, பாலியல் சார்ந்தக் கீழ்நிலைச் சமூகநிலை நடவடிக்கைகள் வெளிப்படுத்தப்படுகிறது.

"செடல் எந்த ஊருக்கெல்லாம் ஆடப்போகிறாளோ, அவளுடைய சொந்த ஊருக்குப் பக்கத்துக்குக் கிராமங்களுக்கு ஆடப் போனாலும் இவளைப் பற்றி எல்லா விஷயமும் தெரிந்திருந்தாலும் வெட்கமில்லாமல் அந்த ஊரிலுள்ள பணம் படைத்தவர்கள், செல்வாக்கு உள்ளவர்கள், திமிர் படைத்தவர்கள் சாடை மாடையாகவும், ஆள் வைத்தும், சிலர் நேரிடையாகவும் பேச்சுக் கொடுத்திருக்கிறார்கள். சிலர் பித்தாகவே அலைந்துமிருக்கிறார்கள். இரண்டு காணி நிலம், வீடு, பசுமாடு, போர்ப்பட்டி என்று சொன்னார்கள்" (செடல்: பாகம்-2, அத்-11, பக்-161)

என வரும் புதினத்தின் இப்பகுதியில் கூத்தாடிகளைப் பாலியல் நோக்கில் அணுகும் பணம் படைத்தவர்கள், செல்வாக்குள்ளவர்கள் நிலைக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கூத்தாடிகள் எந்த சாதியைச் சார்ந்தவர்களானாலும் அவர்கள் பாலியல் துன்பங்களுக்கு ஆட்படுவதையே இது காட்டுகிறது. உடலுறவு கொள்வதற்கு மட்டும் சாதி ஒரு தடையாக இருந்ததில்லை என்பதையே இது காட்டுகிறது.

பொட்டுக்கட்டி விடப்பட்டு ஊர்ஊராக, கோவில் கோவிலாகச் சென்று ஆடும் கலைக் கூத்தாடிகளையும் தெருக்கூத்தாடிகளையும் இதில் பங்கு பெறும் பெண்களையும் இச்சமூகம் எப்படிப் பார்க்கப்படுகிறது? எப்படி நடத்துகிறது? என்பதையேச் சமூகப் பின்புலமாகக் கொண்டு புதினம் அமைந்துள்ளது.

"பொட்டுக்கட்டுதல்" என்ற பழைய மரபின் பின்னணியைக் கதைக் களமாகக் கொண்டு பொட்டுக்கட்டி விடப்பட்டப் பெண்களின் அவலநிலையை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. பழைய மரபுகளைத் தாங்கி மூடநம்பிக்கைகளில்

மூழ்கியுள்ள ஊர் காட்டப்படுகிறது. இதில் மேல்ச்சாதிக்காரர்களாகக் குடியானவர் காட்டப்பட்டுள்ளனர். கவுண்டர், செட்டியார், சேர்வை, கோனார், பிள்ளை போன்ற மேல்ச்சாதிகள் காட்டப்பட்டுள்ளது. ‟காலனி” என்ற அடைமொழியுடன் ‟பறையர்” சாதியைச் சார்ந்தவர்கள் வாழும் கீழ்ச்சாதிக்குடியிருப்புகளும் அவர்களது வாழ்வும் இக்கதையின் கருவாக அமைந்துள்ளது.

‟பறையர்” என்போர் தாழ்த்தப்பட்டோர் என்றப் பிரிவில் பெரும்பான்மையாகத் தமிழகத்தில் இருப்போர்கள். மனுதர்மநூலின் படிப் பார்ப்பனர், சத்திரியர், வைசியர்(வணிகர்), வேளாளர் (சூத்திரர்) என்ற படிநிலையில், சூத்திரர்கள், தாழ்த்தப்பட்டவர்களாக, பண்மை அடிமைகளாக, பண்ணை விவசாயிகளாக, இனம் காட்டப்பட்டுள்ளனர். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் மனுதர்மத்தின் படிநிலை முற்றிலும் மாறுபட்டிருப்பதை முன்னரே கண்டோம். வேளாளர் என்ற சூத்திரர்கள் தமிழகத்தில் இரண்டாகப் பிரித்துப் பார்க்கப்படுகின்றனர். 1.பண்ணை முதலாளிகள் 2.பண்ணை விவசாய அடிமைகள் என்பதே.

விவசாயக் கூலிகள் அல்லது பண்ணை அடிமைகளேத் தமிழகத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக இனம் காணப்படுகின்றனர். பள்ளர், பறையர், சக்கிலியர் போன்றோர்கள் இம்மரபைச் சார்ந்தவர்களே. நிலம் உள்ளச் சூத்திரர்கள் தமிழகத்தில் வேளாளர் என்ற அத்தஸ்துடன் மேல்ச்சாதி என்ற நிலைக்கு தங்களை உயர்த்திக்கொண்டனர்.

## 2.15 ஆறுமுகம் (1999):- சமூகப் பின்புலம்:-

### 2.15.1 கதைச் சுருக்கம்:

இமையத்தின் படைப்புகள் ஒவ்வொன்றும் ஒரு தனித்த இடத்தைப் பெற்றுள்ளது என்பதில் எவ்வித மறுப்பும் இல்லை. அதைப்போலவே, ஆறுமுகம் என்ற புதினமும் அவ்வகையில் அமைகிறது.

தனபாக்கியத்தின் ஒரே மகன் ஆறுமுகம். ஆறுமுகத்தை மையமிட்டு இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கை வசதியுள்ளதாக மாற்றிக்கொள்ளத் தலித்துகள் மானம்,கற்பு போன்ற வாழ்க்கையில் ஏதேனும் ஒன்றை இழக்கநேரிடுகிறது என்பது இப்புதினத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தனபாக்கியத்தின் கணவன் ராமன், ஆறுமுகம் பிறந்து நான்கு ஆண்டுகள் கழிந்து இறந்துவிடுகிறான். தனபாக்கியம் தந்தையின் ஊருக்குச் சென்று தன் மகனோடு வாழ்ந்து வருகிறாள். கணவன் இறந்த பின்பு பாண்டிச்சேரி ஆரோவிலிருந்து

அழைப்புவிடப்படுகிறது. கணவனுக்குப் பதிலாக வேலைக்குச் சேரும்படி. தன் மகனுக்கு நல்ல வாழ்க்கை அளிக்க வேண்டும் என்ற நோக்கில் தான் வாழ்ந்த கிருஷ்ணபுரத்திலிருந்து குடிபெயர்ந்து ஆரோவிற்கு பக்கத்தில் வாடகைக்கு வீடு எடுத்து தன் மகனுடன் குடியேறுகிறாள். ஆறுமுகத்தை ஆங்கிலப் பள்ளியொன்றில் சேர்த்துவிட்டு படிக்கவைக்கிறாள். தினமும் ஆறுமுகத்தைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு வேலைக்கு பாண்டிச்சேரி ஆரோவில் ஒரு கம்பெனியொன்றில் தோட்ட வேலை செய்து வருகிறாள். அங்கு "ஜெரி ஆல்பெர்ட்" என்ற பிரெஞ்சுக்காரனுடன் உறவு ஏற்பட்டு அது வீடு வரை வளர்ந்துவிடுகிறது. ஒரு முறை தன்வீட்டில் தன் தாயை ஜெரி ஆல்பெர்ட்டுடன் பிறந்த மேனியாக இருப்பதைக் கண்டு, ஆறுமுகம் மனம் குழம்பி வீட்டைவிட்டு ஓடிவிடுகிறான். தனபாக்கியம் ஜெரி ஆல்பெர்ட்டை திட்டி, சண்டையிட்டு பித்து பிடித்தவளைப் போலத் தன் மகன் ஆறுமுகத்தைத் தேடி அலைகிறாள்.முடிவில் அவள் விபச்சாரியாக மாறிவிடுகிறாள்.

வீட்டைவிட்டு ஓடிய ஆறுமுகம், பாண்டிச்சேரி நகர்புறத்தில் "ரிக்ஷா" ஓட்டிப் பிழைப்பு நடத்தி வரும் தர்மமூர்த்தி என்பவனால் அடைக்கலம் தரப்பட்டு அவனுடனேத் தங்கி விடுகிறான். தர்மமூர்த்தி அப்பகுதியில் பாலியல் தரகு வேலையும் செய்து வருபவன். "செக்கு மேடு" என்ற பகுதியில் பாலியல் தொழிலில் ஈடுபட்டுவரும் சின்னப்பொண்ணு என்பவளுக்கு உதவியாகப் பாலியல் தரகு வேலையையும் செய்து வருகிறான் தருமமூர்த்தி. ஆறுமுகம் இந்த இருவரின் ஆதரவுடன் தங்குகிறான். ஒருமுறை தன்னுடைய அம்மாவின் (தனபாக்கியம்) தோழியான வசந்தாவைப் பார்த்து, அவள் மூலம் அட்டை கம்பெனியில் வேலைக்குச் சேர்கிறான். அங்கு வசந்தாவிற்கு நடைக்கும் பாலியல் தொல்லைகளைக் கண்டு வேலையை விட்டு நின்று விடுகிறான். மீண்டும் அவன் தர்மமூர்த்தியுடன் சேர்ந்து "ரிக்ஷா" ஓட்டிப் பிழைப்பு நடத்தி வந்த வேளையில், சின்னப் பொண்ணு இறந்து விடுகிறாள். சின்ன பொண்ணுவிற்குச் செக்குமேட்டுப் பகுதியில் ஆதரவாக இருந்தப் பாக்கியத்தின் துணையுடன் சாராயக்கடை முன்பு புரோட்டா கடை நடத்தி வருகிறான். அங்கு எதிர்பாராதவிதமாக தன் அம்மாவின் தோழியான வசந்தாவைச் சந்திக்கிறான். வசந்தாவும் இப்பொழுது செக்குமேட்டுப்பகுதியில் பாலியல் தொழில் உறுப்பினராக மாறிவிட்டதை அறிந்து கொள்கிறான். ஒரு முறை அங்கு கலவரத்தில் ஆறுமுகம் பாதிக்கப்படுகிறான். மருத்துவமனையில் மூன்று வாரங்கள் இருக்கிறான். மருத்துவமனையில் அவனைக் கவனித்துக் கொண்ட வசந்தா, அங்கு நர்ஸ் புஷ்பா மேரியின் நட்புடன் துணையுடன் மருத்துவமனையிலே வேலை செய்து வருகிறாள். செக்கு மேட்டிற்கும் போவதில்லை. ஆறுமுகம் பாக்கியம்

இருக்கும் இடத்திற்கேச் சென்று தங்குகிறான். அங்கு அபிதா என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறான். ஒருமுறை அப்பெண்ணைத் தேடி செக்குமேட்டுப் பகுதிக்கு இருட்டில் செல்கிறான். தங்கமணி என்பவள், ஆறுமுகத்தின் வருகை, அதுக்காகத்தான் இருக்குமென்று, ஒரு குடிசைக்குள் தள்ளி விடுகிறாள். ஆறுமுகம், அங்கு "அபிதா" இருப்பாளா? என நினைத்து விளக்கு வெளிச்சத்தில் பார்க்கிறாள். அங்கு அந்த வெளிச்சத்தில் அவனுடை அம்மா தனபாக்கியம் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைகிறான். நீண்டநாளுக்குப்பிறகு அம்மா-பிள்ளையின் உறவு மலர்கிறது. குறிச்சிக்குப்பத்திலுள்ள நர்ஸ் புஷ்பா மேரியின் வீட்டிற்கு அடைக்கலம் தேடிச் செல்கின்றனர். தனபாக்கியம் அன்று இரவு முழுவதும் தன் மகன் ஆறுமுகத்துடன் பேசிவிட்டு, தன் தோழியான வசந்தாவுடன் பேசிவிட்டு, அனைவரும் தூங்கியப் பின்பு தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்கிறாள் அத்துடன் புதினம் முடிவடைகிறது.

## 2.16 ஆறுமுகம்-புதினம்: சமூகப் பின்புலம்:

இந்த புதினத்தில் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வரும் பெண்களின் வாழ்வு மையப்படுத்தியுள்ளது. பாலியல் தொழிலுக்குத் தலித் பெண்கள் பலியாவது இதனுள் பின்புலமாகச் சொல்லப்பட்டுள்ளது. செக்குமேடு என்னும் பகுதியில் சிறிய வயதுள்ள பெண்கள் கூட "பாலியல் தொழிலில்" ஈடுபட்டுவருவது இதனுள் காட்டப்பட்டுள்ளது.

> **"இங்க எதுக்குடி வந்தீங்க. இங்க எந்த மாப்ளடி ஒங்களுக்காகக் காத்துக்கிட்டு இருக்கான்? நீங்கெல்லாம் செத்தா என்ன? நாட்டுல எவ்வளவு சனங்க செத்துப் போறாங்க ஒங்களுக்கு மட்டும் என்ன அப்பொடியொரு இது? ஒங்க இதெயே தச்சாலும் நீங்க சும்மா இருக்கமாடடீங்கடி"**(ஆறுமுகம்,அத்-12,பக்-120)

எனவரும் இந்த உரையாடலில் பாலியல் தொழிலில் ஈடுபட்டுவருபவர்களுக்கு சமூகம் தரும் மரியாதை இதனுள் காட்டப்பட்டுள்ளது.

மருத்துவமனைக்கு வந்து கருக்கலைப்புச் செய்துகொள்ள வரும்போதும், பாலியல் தொடர்பான நோய்க்கு மருந்து வாங்க வரும் போதும் மருத்துவர்களாலும் செவிலியர்களாலும் இவர்கள் வசைப்பாடப்படுகிறார்கள். இதன் மூலம் இச்சமூகம் இவர்களுக்குத் தரும் மதிப்புக் காட்சிப்படுத்துவடன், பாலியல் தொழிலில் ஈடுபட்டு

வருவர்களின் அவலம்,துன்பம் போன்றவையும் நமக்கு புதியப் புரிதலை எடுத்துரைக்கிறது.

> **"எங்கம்மா தூக்குனா, நானும்தான் தூக்குறன். ஆமாண்ட, எம்மவளும் கண்ட பையனுக்கே கால தூக்குவாதான். எனக்கு ஈங்குசமில்லடா, சின்னமில்லடா, ஒன் சாதி சனம் சோறு போடுமா? அட சீ! ஒன் சாதியிலயும் சனத்திலயும் என் சாண்ட ஊத்தியடிக்க மானங்கெட்ட பய குடிக்கறதுக்கு இல்லைன்னு வந்து என்னை அடிக்கிறானே! தூமப் பய, வரட்டும், பொட்டச்சிக்கு எதுக்குடா சாதி? கொலம் கோத்திரமெல்லாம் எதுக்குடா? பொட்டச்சிக்கிட்ட இருக்கிற தொட சந்துக்காகத்தாண்டா எல்லாச் சாதிக்காரனும் அலஞ்சிக்கிட்டு இருக்கானுவோ"** (ஆறுமுகம், அத்-8, பக்-84)

என்ற சின்னப்பொண்ணு என்றக் கதைமாந்தரின் உரையாடலின் மூலம் "பாலியல் உறவுகளுக்கு சாதியும் இல்லை, சமயமும் இல்லை என இதனுள் உரைக்கப்பட்டுள்ளது. மேலும் பெண்கள் பாலியல்த்தொழிலில் ஈடுபட ஆண்களும் ஒரு காரணமாக இருக்கின்றனர் என்றச் சமுதாயத்தின் மீதானக் குற்றச்சாட்டை ஆசிரியர் இது போன்ற உரையாடல் மூலம் உணர்த்துகிறார்.

படைப்பு- படைப்பாளன்- சமுதாயம் இவை ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை என்பதற்கு ஆறுமுகம்- புதினம் ஒரு சான்றாக இருக்கிறது.

> **"எந்தவொரு இலக்கியத்திலும் கூறப்பட்டுள்ள செய்திகள், அவற்றின் தன்மைகள், குறிப்பிட்டச் சமுதாய அமைப்பின் காரணக் காரியங்களோடு நேரடியாக உறவு கொண்டவை"**

என்பதற்கேற்ப ஆறுமுகம்-புதினம் "பாலியல் தொழில் " செய்துவரும் பெண்களின் சிக்கலான வாழ்வியலை உள்ளது உள்ளபடி உணர்த்துகிறது.

கதை மாந்தர்களாக வலம் வரும் சின்னப்பொண்ணு, தங்கமணி, அபிதா, பிரேமா, வள்ளி, மஞ்சாயி, வசந்தா, தனபாக்கியம் போன்றோர் இத்தொழிலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டச் சூழல் இதனுள் காட்டப்பட்டுள்ளது. இப்புதினத்தின் மூலம் சமுதாயத்தின் அரங்கினுள் இருக்கும் சாதிகளின் முகமூடி தோல் உரித்துக் காட்டப்படுகிறது. பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்கள் பெரும்பான்மையோர் "தலித்"கள் என்ற கருத்து இதனுள் காட்டப்பட்டுள்ளது.

**"பாண்டிச்சேரி என்றாலேப் பிராந்திக்கும் பெண்ணுக்கும் என்றாகி விட்டது. தெரு என்று ஒன்று இருக்கிறதென்றால் அதில் பாதிப் பிராந்திக் கடையாகத்தான் இருக்கும். பெண்கள் என்றால் முதல் தரம் பெரிய ஹோட்டல்களிலும், இரண்டாம் தரம் லாட்ஜ்களிலும், மூன்றாம் தரம் செக்குமேட்டிலும், சின்னப்பொண்ணு வீடு இருந்த சாக்கடை உள்ள இடத்திலும் இருப்பார்கள்"** (ஆறுமுகம், அத்-17, பக்-184)

என வரும் புதினத்தின் இப்பகுதியின் மூலம் பாண்டிச்சேரி என்னும் நகரத்தின் இருப்பு அவலமாகக் காட்டப்பட்டுள்ளது.

இந்த பாலியல்த்தொழில் முறைச்சார்ந்தவர்கள் பெரும்பான்மையானோர் அடித்தட்டு மக்களாகவே இருக்கின்றனர் என இப்புதினம் சான்றுரைக்கிறது. வசந்தாவைப் போல ஓரிருவர் மேல்தட்டு சமூகத்திலிருந்து விபத்து போல இந்த தொழிலில் ஈடுபடுவதாக இப்புதினம் "பாலியல்த்தொழில்சார் பெண்களின்" பின்புலத்தை எடுத்துரைப்பதாக இப்புதினம் அமைந்துள்ளது.

நாயுடு சாதியைச் சார்ந்த, வசந்தா செக்குமேடு இடத்திற்கு வந்து பாலியல் தொழிலில் ஈடுபடுவது ஒரு விபத்து போலக் காட்டப்பட்டுள்ளது. அட்டை கம்பெனியில் வேலை செய்து வரும்போது கம்பனி மேனேஜருடன் பாலியல் உறவு கொள்கிறாள். இதனைப் பார்த்துவிட்ட "வாடச்மேன்" வெளியில் சொல்லி விடுவேன் என்று மிரட்டி அவளைத் தன்னுடன் உறவு கொள்ளுமாறு மிரட்டிப் பணியவைக்கிறான். இதனை வசந்தாவின் உடன் பிறந்த அண்ணன், தம்பி அறிந்து வசந்தாவை அடித்து வீட்டைவிட்டுத் துரத்தி விடுகின்றனர். இவ்வாறு வீட்டை விட்டு துரத்தப்பட்டவள் செக்குமேடுப் பகுதிக்கு வந்து பாலியல்த்தொழிலில் ஈடுபடுவதாக இப்புதினம் கூறுகிறது. இதேபோன்று சின்னப்பொண்ணு, பாக்கியம் மற்றும் ஆறுமுகத்தின் தாய் தனபாக்கியம் ஆகியோர்களும் இம்மாதிரியானச் சமூகச் சூழலின் பின்னணியில் பாலியல்த்தொழிலில் ஈடுபடுவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனுள் இதன்மூலம் பெண்கள் பாலியல்த்தொழிலில் ஈடுபடக் காரணமானச் சூழல் இதனுள் காட்டப்பட்டுள்ளது.

## 2.17 இமையம்: சிறுகதைத் தொகுப்புகள் :-

இமையம் என்றப் படைப்பாளர் சிறுகதைகள் மூன்று தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். அவை,

1. மண் பாரம் - 2004

2. வீடியோ மாரியம்மன் - 2008

3. கொலைச் சேவல் - 2013

4. சாவுச்சோறு - 2014

## 2.18 மண்பாரம்: சிறுகதை : சமூகப்பின்புலம் :-

மண்பாரம் என்றச் சிறுகதைத் தொகுப்பில் பதினேழு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. கதைகள் ஒவ்வொன்றும் ஒரு சமூகத்தின் பின்னணியில் இயங்குவதைக் காணமுடிகிறது.

1. மண் பாரம் - 2002 (காலச் சுவடு-ல் வெளிவந்தது)
2. நெல்சோறு - 2003 (தீராநதி இதழில் வெளிவந்தது)
3. ஐஞ்சிக் கண்ணு - 2003 (தீராநதி இதழ்)
4. பொன்னம்மாவின் - (குடும்பக்கதை - எந்த இதழிலும் பிரசுரமாகாதது)
5. மாடுகள் - 2003 (தலித் இதழ்)
6. பசிக்குப்பின் - 2003 (தலித் இதழ்)
7. சின்னச்சாவு - 2001 (நவீன விருட்சம்)
8. உறவு - 2000 (இந்தியா டுடே இலக்கிய ஆண்டு மலர்)
9. எமன் - --
10. பூவும் இரவும் - 1995 (இந்திய டுடே இலக்கிய ஆண்டு மலர்)
11. அரையாள் - 2005 (புதிய கோடங்கி)
12. அம்மாவின் இடம் - 2003 (இந்தியா டுடே)
13. வனாந்தரம் - --
14. தொடரும் - 2001 (இந்தியா டுடே)
15. ஊர்காலி மாடுகள் - --
16. மலரின் காதல் - --
17. விடியாத இரவு - --

## 2.19 மண்பாரம் சிறுகதை தொகுப்பிலுள்ள கதைகளின் பின்புலம்:-

### 2.19.1 சிறுகதை:1 மண் பாரம்:-

கிருஷ்ணன், அஞ்சலை ஆகியோரின் (கணவன் மனைவி) இருவரின் விவசாயம் சார்ந்தக் கனவை வெளிப்படுத்துவதாக உள்ளது. விவசாயிகள் மழையை வேண்டி நிற்பர். மழை இல்லையென்றால் இவர்களது வாழக்கை கேள்விக் குறியாக மாறிவிடும் என்பதை இக்கதையில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் மழையே இவர்களின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக மாற்றிவிட்டதை இக்கதையின் பின்புலமாகக் காட்டப்பட்டுள்ளது. விவசாயிகளின் சமூக வாழ்க்கையோடு அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் சிக்கல் எடுத்துக் காட்டுகிறது.

### 2.19.2 சிறுகதை:2 நெல் சோறு:-

சிறுவர்களை மையப்படுத்திப் படைக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் ஒன்று கூடி விளையாடும் போது ஒரு கல்யாண வீட்டில் சோறு சாப்பிடுவதற்காக முயற்சிக்கின்றனர். நெல் சோறு சாப்பிடுவதற்காகத் திருட்டுத்தனமாகப் பின்பக்கமாக, ஓலைகளின் அடியில் புகுந்து இடம் பிடிக்க முற்படும்போது கம்சலா,(அம்மா) அதைக் கண்டித்து, அங்கிருந்து அவனை அடித்து இழுத்து வரப்படுகிறான். நெல்சோறு சாப்பிடும் அவனின் கனவு சிதைக்கப்படுகிறது. அதற்கு அந்த சிறுவன் "இனிமே என்னெ அடிச்சா, ஒனக்கு சாவக் கொடுத்துடுவேன்" என்று மகன் கூறும் வார்த்தைகளைக் கேட்டு திகைத்துப் போய்விடுதாகக் கதை அமைந்துள்ளது. இது சிறுவர்களின் வேடிக்கையுடன் அவர்களின் ஆசையும் அறியாத அறிவும் கதைக் களமாக காட்டப்பட்டுள்ளது.

### 2.19.3 சிறுகதை:3 ஐஞ்சிக்கண்ணன்:-

குழந்தைகள் அழும் போது அவர்களுக்கு பயம் காட்ட ஏதோ ஒன்றைச் சொல்லி பயமுறுத்துவது வழக்கம். இதனைப் பின்னணியாக ஐஞ்சிக்கண்ணன் கதை அமைந்துள்ளது. ஆசிரியரே கதை கூறுவதாகப் படைக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள் அழும் போது, அதை நிறுத்த கணவன்-மனைவி இருவரிடையே ஏற்படும் சிறு மோதல்கள் இதன் சிறிய நிகழ்வாகக் காட்சிப்படுத்தப்படுகிறது.

> "எங்களுடையத் தெருவின் முதல் வீட்டில் கண்ணன் என்பவன் பண்ணை வேலை செய்து கொண்டிருந்தான். ஒரு நாள் மாடு அவனை முட்டியதில் வலது பக்கக் கண் காயம்பட்டு மெல்ல அழுகி ஒரே வெள்ளையாகிவிட்டது. அதிலிருந்து அவனை

ஐஞ்சிக் கண்ணன் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.”
(மண்பாரம்-பக்-61)

என இதில் கூறப்பட்டக் கதை நிகழ்வானது, சிறுவர்களைப் பயமுறுத்தும் பின்புலத்தைப் பெற்றுள்ளது.

"ஜன்னலுக்கு பக்கத்துல நிக்குறாண்டா போர்வயப் போத்திக்
கண்ண மூடிக்க. இல்லான்னா அந்த ஐஞ்சிக்கண்ணன் வந்து
ஒன்னெத் தூக்கிட்டுப் போயிடுவான்” (மண்பாரம்-63)

எனப் பிள்ளைகளைப் பயமுறுத்தித் தூங்கவைக்கப்படும் காட்சி இதனை உறுதி செய்கிறது.

### 2.19.4 சிறுகதை:4 பொன்னம்மாவின் குடும்பக் கதை:-

மாடுகள் காணாமல் போனதென்றுத் தேடிவந்த ஒருவனிடம், கிழவி பொன்னம்மா என்ற கிழவித்தன் குடும்பக் கதையைக் கூறுவதாக உள்ளது. அடித்தட்டு மக்களாகியத் தாழ்த்தப்பட்டோரிடம் மட்டுமே "வறுமை" இருப்பதில்லை. அது அனைத்து சாதிகளிலும் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவே இச்சிறுகதைப் படைக்கப்பட்டுள்ளது எனலாம். மேலும், பெண்கள் ஒன்பது குழந்தைகளைப் பெற்றெடுத்துக்கொள்ளும் வழக்கத்தை இதனுள் சொல்லப்படுகிறது. படிப்பறிவு அற்றவர்கள் அனைத்து சாதியிலும் உள்ளனர் என்பதையும், பெண்களுக்கு வாய்க்கும் வாழ்க்கை மிகவும் துன்பமானது என்பதைக் கருப்பொருளாக்கி "இமையம்” இச்சிறுகதையைப் படைத்துள்ளார்.

### 2.19.5 சிறுகதை:5 மாடுகள்:-

இச்சிறுகதை, ஏழை விவசாயக் குடும்பத்தைப் பற்றியதாக உள்ளது. ஆறுமாதமே ஆன குழந்தையை, கொத்து மல்லி வயலுக்கு எடுத்துப்போய் ஓரத்தில் படுக்க வைத்துவிட்டு, தன் கணவனுக்கு மனைவி உதவுவதாகப் படைக்கபட்டுள்ளது. தங்களுடைய மாடுகளுடன் ஊரில் ஏரவல் வாங்கிய மாடுகளையும் கொண்டு கொத்துமல்லிச்செடிகளின் மீது நடக்கச்செய்து, அறுவடை செய்கின்றனர். வேலை முடிந்ததும் மாடுகள் ஓய்வெடுக்க, வேலைக்கு வந்த ஒருவன் மாடுகளைக் காலால் உதைக்கிறான். மாடு ஒன்று மிரண்டு ஓரத்தில் படுக்க வைத்துள்ளக் குழந்தையைக் காலால் மிதித்து ஓடிவிடுகிறது. குழந்தைக் குடல் பிதுங்கி இறந்து விடுகிறது. தாய்

இதைக் கண்டு கண்ணீர் விட்டு அழுவதாகக் காட்டப்பட்டுள்ள இந்தச் சிறுகதையில், ஏழை விவசாயிகள் படும் சிரமங்களை இது எடுத்துரைத்துள்ளது எனலாம்.

### 2.19.6. சிறுகதை:6 பசிக்குப்பின்:-

விருதாச்சலம் என்ற சிறுவனை மையமிட்டு எழுதப்பட்டுள்ளது. நாட்டுப்புறத்தில் (கிராமங்களில்) சிறுவர்கள் "ஐஸ்" சாப்பிட, அவர்கள் எடுக்கும் முயற்சிகள் சொல்லப்பட்டுள்ளது. விருதாச்சலத்தின் வீட்டில் அவனும் அவன் தம்பியும் சேர்ந்து தவிட்டினைப் பசிக்காகக் கூழாக்கிச் சாப்பிடும் சிறுவர்களின் நிலை,ஆசை, எண்ணம், பேச்சுக்கள் ஆகியவற்றை இக்கதை பதிவு செய்கிறது.

### 2.19.7 சிறுகதை:7 சின்னச்சாவு:-

ஊரில் மிகவும் வயதானக் காசிக் கிழவர் இறந்து விடுகிறார். உயிருடன் இருக்கும் போது காசிக்கிழவர் பேசும் கேலியும், கிண்டலும், கொச்சையாக இருந்தாலும் ஊரார் அதனைக் கேட்டு மகிழ்வர். சிறுவர்களிடம் பேய்க் கதைகளைச் சொல்வார். இளைஞர்களிடம் பாலியல் கதைகளைச் சொல்லுவார். பெண்களிடமும் குறும்புத் தனத்துடன் பேசுவார். கிழவர் இறந்த பின்பு அவரின் பிணத்தைப் பார்த்து, இனிக் கிழவர் வரமாட்டார் எனச் சிறுவர்கள் வியப்பதாக இக்கதை அமைந்துள்ளது.

ஊர்ப்புறங்களில் இளைஞர்கள், குறிப்பாக வாலிப இளைஞர்கள் வயதானவரிடம் பேசும் பாலியல் தொடர்புள்ள பேச்சுக்களை ரசிக்கும் படி இக்கதை கூறப்பட்டுள்ளது. சாதாரணமாக அனைத்து கிராமப் புறங்களிலும் இந்தக் "காசிக் கிழவர்" போல் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருவதை இக்கதை நினைவு படுத்துகிறது.

### 2.19.8 சிறுகதை:8 உறவு:-

பறையர்கள் வாழும் காலணித் தெருவில் இரண்டுப் பெண்கள் சண்டையிட்டுக் கொள்ளும் தலித்துகளின் சாதாரண வாழ்வு இதனுள் சொல்லப்பட்டுள்ளது.

பஞ்சவர்ணம், கதவில்லாதத் தன் வீட்டில் ஆடுகள் புகுந்துத் தானியங்களைத் தின்று விட்டதால், ஒரு ஆட்டின் காலை ஒடித்து விடுகிறாள். எதிர் வீட்டு அஞ்சலையைத் திட்டித்தீர்க்கும் போது இருவருக்கும் சண்டை ஏற்படுகிறது. ஒருவருக்கொருவர் தலைமயிரைப் பிடித்துக் கீழேப் புரண்டு சண்டைப் போட்டுக் கொள்கின்றனர். ஊரேக் கூடி வேடிக்கைப் பார்க்கிறது. பஞ்சவர்ணத்தின் கணவன்

திரும்பி வந்து, செய்தியைக் கேட்டவுடன் பஞ்சவர்ணத்தை அடிக்கிறான். இது கண்டு சற்று நேரத்திற்கு முன்பு சண்டையிட்டு வந்த அஞ்சலை அதைத்தடுத்து அவளுக்கு ஆதரவாகப் பேசி, அடிப்பதைத் தடுக்கிறாள். தன்னுடைய வீட்டில் சாப்பாடு செய்து பஞ்சவர்ணத்திற்கு ஊட்டிவிட்டு, அவளின் பிள்ளைகளுக்கும் உணவு கொடுக்கிறாள். இதில் தலித் மக்களின் வாழ்க்கை எதார்த்ததுடன் சொல்லப்பட்டுள்ளது.

> **"ஆயிரமேன்னாலும் குடியானிச்சுவோ, எப்படி கிணுக்கு முணுக்குங்காம கம்மக்கொலயாம இருக்காளுவோ. இங்கப் பாரன், பறச் சாண்டருக்கி மக்கள, "ம்" கிறதுக்குள்ளாற "ஒன்னெப் புடி என்னெப் புடின்னு" மாரடிச்சிட்டுத் தெரு சிரிச்சிப் போயி கெடக்குறத, சீ இவளுங்கயெல்லாம் எதுக்காகத்தான் உசுர இந்த சனிக்காலத்துல வச்சிக்கிட்டிருக்கிறாளுவளோ. இவளுங்களயெல்லாம் சுண்ணாம்பு காளவாயில வச்சி சுட்டாலும் என்னோட வெஞ்சும் தீராது"** (மண்பாரம்: உறவு-பக்-157)

எனவரும் உரையாடலில் தலித் மக்களின் வாழ்க்கை விமர்சிக்கப்படுவதைக் காணமுடிகிறது. இது அடித்தட்டு மக்களின் நிலை இவ்வாறுதான் இருக்கும் என்பதினை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

> **"சும்மா கெட. நீ ஒரு இந்த பேச்சு பேச வந்துட்டெ, மனசுல இருக்கிறத இப்பிடி வெளியக் கொட்டி ஆத்திக்கிறது எவ்வளவோ தேவலாங்கிறன், குடியானிச்சிவோ மாதிரி கம்மக்கொலயாம இருந்து ஈரத் துணியப் போட்டுக் கயித்த அறுக்கச் சொல்றியா?"**(மண்பாரம்: உறவு-பக்-157)

என்ற இந்த உரையாடலில், குடியானவர்கள் (மேல்சாதிக்காரர்கள்) எதார்த்த வாழ்க்கையில் நிலை தடுமாறி பழிக்குப்பழித் தீர்த்துக் கொண்டு கொலைப்பழிகளைச் செய்து விடுவர் என்பதும் அவர்கள் அவமானத்திற்கு அஞ்சித தங்களை மாய்த்துக்கொள்வர் என்பதினை எடுத்துக்காட்டுகிறது இந்தக் கதையின் உரையாடல். தலித் மக்களிடையேச் சண்டைச் சச்சரவுகள் இருந்தாலும் மனதில் எதையும் வைத்துக்கொள்ளாலம் உறவு முறையில் பழகுவர் என்பதை எடுத்துக்காட்டுவதாக இச்சிறுகதையின் பின்புலம் அமைந்துள்ளது. இது தலித் மக்களைப் பற்றியதானக் கதை எனலாம்.

### 2.19.9 சிறுகதை:9 எமன்:-

சிறுவன் கணேசனின் அக்காவிற்கு குழந்தைப் பிறக்கிறது. வீட்டிற்கு அழைத்து வரப்படுகிறாள். கணேசனை நேற்று விரையில் கண்ணே! மணியே எனக் கொஞ்சியவர்கள், அக்கா லட்சுமிக்குக் குழந்தை பிறகு கணேசனைக் கொஞ்சுவதை விட்டுவிடுகின்றனர். ஆதலால் கணேசன் அக்குழந்தையை "எமனாக"ப் பார்க்கிறான் என்பதாக இக்கதை அமைந்துள்ளது. தாயின் பாசம் குழந்தைகளுக்கு அவசியம் என்பதை மையமிட்டு இது படைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அம்மாவிற்கேக் கொஞ்சும் வயதில் குழந்தை இருக்க, மகளும் குழந்தைப் பெற்றுக்கொள்தாக இதில் காட்டப்பட்டுள்ளது. இது மகளிரின் சமூக நிலையை எடுத்துரைக்கிறது எனலாம்.

> **அக்கா தன் குழந்தையிடம் தன் தம்பியைக் காட்டி "மாமனப் பாருடா, மாமனப் பாருடா" எனக் கூறியதற்கு சிறுவன் கணேசன் "மசுரு மாமன்" என வாயில் முணுமுணுப்பது இரசிக்க வைக்கிறது** (மண்பாரம்: எமன்-பக்-168).

### 2.19.10 சிறுகதை:10 பூவும் இரவும்:-

முதலியார் சாதியைச் சார்ந்த கேசவன் கீழ்சாதியைச் சேர்ந்த கமலா என்பவளைத் திருமணம் செய்து கொண்டதால், வீட்டைவிட்டு துரத்தப்படுகிறான். உறையூருக்கு வந்து பீடி சுற்றும் வேலையில் சேர்கிறான். வேலைப் பிடிக்கவில்லையென்பதால், பூ விற்கும் தொழிலில் ஈடுபடுகிறான். கடன் வாங்கி பூக்கள் விற்கும் கணேசனின் ஒரு நாள் வாழ்க்கை இதில் காட்டப்பட்டுள்ளது. மழை காலத்தில் பேருந்து, சேற்று நீரை வாறியடித்துவிடுகிறது. கட்டியப் பூக்களின் மீதும் சேறுபடிகிறது. அதில் டீசல் வாசனை அடித்ததால் அதைப் புதருக்குள் வீசிவிடுகிறான். பின்பு கடன் கொடுத்த நமச்சிவாயத்தின் நினைவு வரவே "ஐயோ" என, வீசியெறிந்த அந்தப் பூப்பந்துகளை மீண்டும் தேடுகிறான்" என்பதாக இக்கதை அமைக்கப்பட்டுள்ளது. கலப்புத் திருமணம் இதில் காட்டப்பட்டுள்ளது. பீடிச்சுற்றும் வேலையில் ஈடுபடும் மக்கள், பூக்கள் விற்கும் மக்கள் என சமூகத்தின் காணப்படும் இயல்பான மனிதர்களின் சில நிகழ்வுகளைக் கூறுகிறது.

### 2.19.11 சிறுகதை:11 அரையாள்:

கணவனை இழந்த கல்யாணி, பன்னிரண்டு வயதானத் தன் மகனைக் களை வெட்டும் கூலி வேலைக்கு அழைத்துச் செல்கிறாள். நிலத்துக்குச் சொந்தக்

காரியான உடையார் பெண்டாட்டி "அரையாள் கூலி" தான் தரமுடியும் எனக் கூற, வாக்குவாதம் ஏற்படுகிறது. தன் மகனை யாரும் "அரையாள்" எனக் கூறுவதை விரும்பாதக் கல்யாணி, ஒருமுறை பயணம் செய்த போது, பேருந்து நடத்துனரிடம், "இவ(ன்) பச்ச புள்ளைங்க! நெடுநெடுன்னு அப்பனாட்ட வளர்ந்துட்டான்னு" எனக் கூறி பயணச் சீட்டு வாங்காமல் ஏமாற்றுகிறாள். வேலை என்று வரும் போது அவள் தன் மகன் அரையாள் அல்ல அவன் முழு ஆம்பள என உடையார் பெண்டாட்டியிடம் வாக்குவாதத்தில் ஈடுவது அவளின் வறுமை நிலையைக் காட்டுகிறது. பிழைப்புக்கு வேறு வழியில்லாமல் தன் மகனையும் வேலைக்கு அழைத்துச்செல்லும் ஒரு தலித் ஏழைப் பெண்ணின் சிரமம் இதனுள் காட்டப்பட்டுள்ளது. ஏதேனும் ஒன்றைச் சொல்லிக் கூலியை வாங்கி விடவேணுமென்றத் தன் எண்ணிற்குக் குறுக்கே உடையார் பெண்டாட்டி வர, "இவன் பாதி பொம்பள" எனக் கூறிவிடுவதால் அவளுக்கு உண்மையாகவே கோபம் வந்து விடுகிறது. உடையார் பெண்டாட்டியிடம் சண்டையிட்டு அவளை அடித்தும் விடுகிறாள்" என தலித் பெண்களின் எதார்த்த வாழ்வைப் பிரதிபலிக்கிறது.

### 2.19.12 சிறுகதை : 12 :அம்மாவின் இடம்:-

கணவன் மனைவியினிடையே நடக்கும் சாதாரணச்சண்டையை மையமிட்டு படைக்கப்பட்டுள்ளது. வேலைக்கு ஆட்குறைப்பு செய்யும் கம்பனியை நினைத்து கோபம் கொள்ளும் கணவன், தன் கோபத்தை மனைவி மீது செலுத்துகிறான். மனைவியோத் தன் மாமியார் பக்கத்து வீட்டிற்குச் சென்று வீண்பேச்சுப் பேசி வம்பு செய்வதாகக் கூறிக் கணவனிடம் கோபித்துக்கொள்கிறாள். இருவரும் சண்டையிட்டுக் கொள்கின்றனர். இதையெல்லாம் தூங்குவது போலப் பாசாங்கு செய்துகொண்டு கேட்டுக் கொண்டிருந்த அம்மா, காலையில் வீட்டை விட்டு சொல்லாமல் போய்விடுகிறாள். பால்காரன் வந்து அழைக்க, கதவைத் திறக்கும் போது கதவினருகில் படுத்திருந்த அம்மாவைக் காணவில்லை என்பதை மகன் உணருகிறான் என இக்கதையானது தற்காலத்து நிகழ்வாகப் படைக்கப்பட்டுள்ளது. வயதான தாயின் நிலையும் "ஆட்குறைப்பு" நிகழ்ச்சியும் இதில் மையப்படுத்தப்பட்டுள்ளது.

நவீன இலக்கியங்களின் உண்மையான நோக்கமே நடப்பியல் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தல் என்பதே. ஆதலால் கணவன்-மனைவி-அம்மா (மாமியார்) ஆகியோருக்கிடையேயான மன எண்ணங்கள் இதனுள் காட்டப்பட்டுள்ளது என்பது இச்சிறுகதையின் நோக்கத்தை நாம் அறியலாம்.

### 2.19.13 சிறுகதை : 13 : வனாந்தரம்:-

கடலைச்செடிப் பிடுங்க வரும் கூலி ஆட்களானத் தலித் பெண்களைப் பற்றியதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. பத்து,பதினைந்து பேர் சேர்ந்து கடலைச் செடிப்பிடுங்கும் கூலி வேலையில் ஈடுபடுகின்றனர். வேலையின் நடுவே அவர்கள் பேசிக்கொள்கின்றனர். அந்த உரையாடல்களின் மூலம் அப்பெண்களின் குடும்பநிலை எடுத்துரைக்கப்படுகிறது. நிலத்திற்குச் சொந்தக் காரியானப் பார்வதி மேல்ச்சாதியைச் சேர்ந்தவள். அவளிடம், தான் உயர்ந்தவள் என்ற எண்ணமும், தான் ஒரு முதலாளி என்ற எண்ணமும் வெளிப்படுவதாக அவளின் போக்கு அமைந்துள்ளது. கூலி வேலை செய்பவர்களுள் ஒருத்தி பார்வதியின் சாதிக்காரியாக இருப்பதால், பார்வதிக்கு தேள் கொட்டியப் பிறகு, அவளுக்குப் பதிலாக அவளே (கொத்தனூராள்) முதலாளி போல மாறி வேலையை வாங்குவதாக இக்கதை அமைந்துள்ளது. இச்சிறுகதை, கடலைச் செடி பிடுங்கும் இடத்தைச் சுற்றியும், வேலை செய்யும் தலித் பெண்களின் குடும்ப நிலையும், அவர்களது வாழ்க்கை நிலையும் எடுத்துக்காட்டுவதைப் போல் சுவைபட அமைந்திருக்கிறது. இது முதலாளி, தலித் கூலி வேலையாட்கள் ஆகியோரது மனநிலையைப் படம்பிடித்து காட்டுவதாக உள்ளது.

### 2.19.14 சிறுகதை: 14 : தொடரும்:-

மாமியார் மருமகள் சண்டையை மையமிட்ட இச்சிறுகதைப் படைக்கப்பட்டுள்ளது. இதில் தலித் குடும்பத்தின் பின்னணிக் காட்டப்பட்டுள்ளது. பன்றிகளை வளர்த்து வரும் மாமியார், தனது மருமகள் மீது கோபம் கொள்கிறாள். இது வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தும் மாமியாரின் மனநிலை இதனுள் காட்டப்பட்டுள்ளது. ஏழ்மையானத் தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகளிலும் கூட வரதட்சனைக் கொடுமை இருப்பதையே இது படம் பிடித்துக்காட்டுகிறது.

### 2.19.15 சிறுகதை: 15 : ஊர்காலி மாடுகள்:-

வீட்டை விட்டு துரத்தப்பட்டப் படிக்காத ஒரு இளைஞன் வேறொரு ஊரில் அடைக்கலம் புகுகிறான். அவ்வூரின் தலையாரி அவனுக்கு அடைக்கலம் கொடுத்து அவ்வூரிலேயே குடியானவர்களின் வீட்டிலுள்ள மாடுகளை மேய்க்கும் வேலையை வாங்கித் தருகிறான். அதனால் அவன் "ஊர்காலி"என அழைக்கப்படுகிறான். மாடுகள் மேய்த்துக்கொண்டிருந்த போது ஒரு நாள் தலையாரி இறந்ததைக் கேள்வியுறுகிறான். மாடுகளை மேயும் இடத்திலேயே விட்டு விட்டு போனதினால்,

ஊரார் சேர்ந்து, ஊரின் நடுவில் கம்பத்தில் கட்டிவைத்து அடித்து துவைக்கின்றனர். ஊர்கூடிப் பின்பு பஞ்சாயத்து மூலம் மன்னிப்பு வழங்கப்படுகிறது. அவன் அவ்விடத்தை விட்டு இரத்தக்காயங்களுடன் தலையாரியைப் புதைத்த சுடுகாட்டிற்குச் செல்கிறான் என இக்கதை முடிகிறது. இதில் தலித் இளைஞன் மேல்ச்சாதிக்காரர்களால் வன்மையாகத் தாக்கபடுவதையும் , தலித் இளைஞன் எதிர்த்துப் பேசாமல் நிற்பதும் , அவனை ஆதரித்தவன் மீது கொண்டப் பாசத்தால் அவன் அடி வாங்கியது என கதை வன்மம்-பாசம் இதனை மையமிட்டுப் பேசுதை இதனுள் காணமுடிகிறது. இக்கதையில் மேல்சாதிக்காரர்களின் அடாவடித்தனம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மாடுகளை மதிக்கும் மக்கள் மனிதர்களை மதிப்பதில்லை என்ற நோக்கு இதனுள் காட்டப்படுகிறது. அநாதையாக ஊர் சுற்றுபவர்கள், இப்படித்தான் இருப்பார்கள் என்பதனை எடுத்துக் காட்டுவதாக இச்சிறுகதை அமைந்துள்ளது.

### 2.19.16 சிறுகதை: 16 : மலரின் காதல்:-

கரும்புக் காட்டுக்குள், கரும்புச் சுமைத் தூக்கி வரும் பெண்களைப் பற்றியானக் கதையாக இச்சிறுகதை அமைந்துள்ளது. மலர் என்ற பெண், தனக்குச் சுமையேற்றி விடும் பெருமாள் என்பவனை நல்லவன் என நினைத்து அவன் மீது அன்பு செலுத்தலாம் என நினைக்கும் தருவாயில், மலரிடம் அவன் பாலியல் எண்ணத்தோடு அவளைத் தொடும் வேளையில் மலர் அவனை அடிவயிற்றில் உதைத்துத்தள்ளி விடுகிறாள். கரும்புச் சுமைதூக்கும் பெண்களிடம் பாலியல் ரீதியில் நடந்து கொள்ளும் ஆண்களின் போக்கு சித்தரிக்கப்படுகிறது. ஆண்கள் பாலியல் எண்ணத்துடன்தான் பார்க்கின்றனர். இதனைப் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. ஆண்களின் குறும்பான பேச்சுக்கள், அவர்களது பாலியல் கண்ணோட்டம், கள்ளத்தொடர்பு போன்றச் சமூதாயத்திற்குப் புறம்பாக உள்ளச் செய்திகளைப் பின்புலமாகவே இக்கதை அமைத்திருப்பது கதையின் நோக்கம் நமக்கு புரிகிறது.

### 2.19.17 சிறுகதை: 17 : விடியாத இரவு:-

கணவனை இழந்து , மூன்று குழந்தைகளுடன் சிறு குடிசையில் வாழச் சிரமமப்படும் ஒரு தலித் பெண்ணைப் பற்றியதானக் கதையாக இச்சிறுகதை உள்ளது. வாழ்வதற்கு இனி வழியில்லை என எண்ணி, தன் குழந்தைகளுக்கு எலிப் பாசனம் கொடுத்துக் கொன்றுவிட எண்ணுகிறாள். குழந்தைகளைக் கொன்றுவிட்டு தானும் எலிபாசனம் சாப்பிட்டு இறந்துவிடலாம் என எண்ணுகிறாள். முடிவில் இதைக்

கைவிட்டுவிடுகிறாள். கணவனை இழந்து வாழும் தலித் பெண்களின் வாழ்வைச் சித்தரிப்பதாக இதனை எடுத்துக்கொள்ளலாம். வெட்டியான் தொழிலில் ஈடுபட்டுள்ளத் தலித் மக்களைப் பற்றி இந்த சமூகம் என்ன? நினைக்கிறது என்பதும், தோட்டி வேலைச் செய்பவர்களின் மீதான சமூகப் பார்வை என்ன? என்பதாக இக்கதைப் புதிய கோணத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

மண்பாரம் என்னும் சிறுகதைத் தொகுப்பில் அமைந்துள்ள பதினேழு சிறுகதைகளும் ஒவ்வொரு விதமானச் சமூகப்பின்புலத்தை எடுத்துக்காட்டுகிறது. கதையானது பல்வேறுச் சமூகப் பின்புலத்துடன் காணப்படும் மனிதர்களைப் பற்றிப் பேசுகிறது. இனி இமையத்தின் வேறொரு சிறுகதைத் தொகுப்பான "வீடியோ மாரியம்மன்" (2008) என்றச் சிறுகதைத் தொகுப்புகளில் அமைந்துள்ள சிறுகதைகளின் சமூகப் பின்புலம் பற்றிக் காணலாம்.

## 2.20 வீடியோ மாரியம்மன் சிறுகதைத் தொகுப்பு (2008):-

வீடியோ மாரியம்மன் என்ற சிறுகதைத் தொகுப்பில் பதினொரு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. 2008-ல் தொகுப்பு நூலாக வெளியிடப்பட்ட இந்தச் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளச் சிறுகதைகள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு மாத இதழ்களில் வெளிவந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வீடியோ மாரியம்மன் | - | 2007 (காலச் சுவடு இதழில் பிரசுரம்) |
| 2. | உயிர் நாடி | - | 2008 (டைம்ஸ் ஆப் இந்தியா சிறப்பு மலர்) |
| 3. | நல்ல சாவு | - | 2007 (தலித் இதழ்) |
| 4. | அம்மா | - | 2004 (தீராநதி) |
| 5. | நாளை | - | 2008 (தீராநதி) |
| 6. | நிஜமும் பொய்யும் | - | -- |
| 7. | எழுத்துக்காரன் | - | 2005 (புதிய பார்வை) |
| 8. | குடும்பம் | - | 2006 (அம்ருதா) |
| 9. | சத்தியக்கட்டு | - | -- |
| 10. | பயணம் | - | -- |
| 11. | ஊர் வம்பு | - | 2005 (புதிய பார்வை) |

### 2.20.1 சிறுகதை: 1 : வீடியோ மாரியம்மன்: சமூகப்பின்புலம்:-

மாரியம்மன் திருவிழா நடக்கிறது. சாமி ஊர்வலமாக வரும்போது ஒரு குறுகலானச் சந்தில் "சாமி" ஊர்வலம் போக முடியாது எனச் சாமியைத் தூக்கிக் கொண்டு ஊர்வலம் வருபவர்கள் சொல்ல, வந்தே ஆக வேண்டும் என ஒரு சாரர் சண்டையில் ஈடுபடுகின்றனர். சாமி நடு வீதியில் இறக்கி வைக்கப்படுகிறது. அங்கு இரண்டு தெருக்காரர்களுக்கும் மிகப் பெரிய வாய்ச்சண்டை ஏற்படுகிறது. அதில் ஒரு பெண் சண்டையை நிறுத்த முயற்சிக்கத் தலையில் அடிபட்டு விடுகிறது. பஞ்சாயத்து கூட்டப்படுகிறது. இதற்கிடையில் திருவிழாவிற்காக வீடியோ படம் காட்டுவதற்கு, இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அதனைப் பார்ப்பதற்குச் சிறுவர்கள் ஆரவாரத்துடன் இருந்தனர் என்ற இந்த கதைக் கருவுடன் இச்சிறுகதை அமைந்துள்ளது. திருவிழாவென்றால் மக்கள் பரபரப்புடன் காணப்படுவர் என்பது இதில் எதார்த்தமாகச் சொல்லப்பட்டுள்ளது. "சாமி" என்ற நம்பிக்கைகளைத் தாண்டி மக்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்பதனைப் பின்புலமாக்கி படைக்கப்பட்டுள்ளது.

கதையின் இறுதியில் வீடியோ படம் காட்ட, ஏற்பாடு செய்த கணேசன் என்ற இளைஞன், ராணி என்ற பெண்ணை காதல் செய்கிறான். வீடியோ படம் காட்ட, வீடியோகாரனுக்கு பணம் கொடுக்க பணம் பத்தவில்லை. ராணியின் மூலம் பணத்திற்கு ஏற்பாடு செய்யப் படுகிறது. பணம் பெற்றுக் கொள்ளதவற்காக ஊரின் எல்லையில் சந்திக்கின்றனர். கணேசன் சொன்ன இடத்திற்கு வந்த ராணியிடம் பணம் பெற்றுக் கொள்ள கணேசன் பக்கத்தில் செல்கிறான். அங்கு, ராணியின் அண்ணன் எதிர்பாரத விதமாகத் தன் தங்கையை அந்த இடத்தில் பார்க்கிறான். (புதரின் மறைவிலிருந்து ஒரு பெண்ணுடன் வெளிவருகிறான் ராணியின் அண்ணன்) "வீட்டுக்கு வா உன்னைக் கவனிச்சுக்கற!" என்று மிரட்டி விட்டு போய் விடுகிறான். தன் காதல் அண்ணனுக்குத் தெரிந்துவிட்டதால், ராணி அரளிச் செடியை நோக்கி (தற்கொலை செய்து கொள்ள) போவதாகக் கதை முடிகிறது.

ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்ற அநீதியை இக்கதை உணர்த்துகிறது. திருவிழாவின்போது "ஊரில்" நடக்கும் நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளவாரே எடுத்துரைத்துள்ளது என்பது படைப்பாளரின் சமூகத்தைப் பற்றியப் புரிதலை வெளிப்படுத்துகிறது எனலாம். சிறுவர்கள் வீடியோபடம் பார்க்கத்துடிக்கும் துடிப்பு இதனுள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

### 2.20.2 சிறுகதை: 2 :உயிர் நாடி:-

கிழவர் (விவசாயி) தன் மகன் எவ்வளவோ மன்றாடிக் கேட்டும் கூடத் தன் விவசாய நிலத்தை விற்க மறுத்துவிடுகிறார். இனி அப்பாவை அடித்து இனி கையெழுத்து வாங்கிவிட வேண்டும் என்ற முடிவுக்கு மகன் வந்துவிட்டதை உணர்ந்த கிழவர் இனிச் சாவதேமேலென்று முடிவெடுத்துக் கொண்டு காட்டை நோக்கி நடப்பதாகக் கதையின் போக்கு அமைந்துள்ளது. விளைநிலங்கள் கையகப்படுத்தும் நிலை இதனுள் காட்டப்பட்டுள்ளது. விவசாய நிலங்கள் தொழிற்சாலைகள் கட்டும் இடமாக மாறுகிறது என்பதும், விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு அதிகப் பணம் கிடைப்பதால் அந்நிலங்களை விற்றுவிட்டு சொகுசு வாழ்க்கையில் ஈடுபடுத்திக் கொள்ளும் தன்மை இதனுள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்த சொகுசு வாழ்க்கை சோம்பேறியானது, மோசமானது, வெறும் தொலைக்காட்சிப் பெட்டியும், நகையும், பணமும் ஆடம்பரம் இது வாழ்க்கைக்கு ஒத்துவராது என கிழவர் நினைக்கிறார். ஆதலால் தனது நிலத்தை விற்க மறுக்கிறார். விவசாயிக்கிழவர் கதாப்பாத்திரம் அனைவரின் மனதிலும் ஒரு புதுவித அர்த்தத்தை ஏற்படுத்துகிறது. கிழவரின் மகன் செல்வராஜ் ஆடம்பர வாழ்க்கையை விரும்புகிறான். தெரசு பில்டிங், மோதிரம், பிரேஸ்லெட், செயின் போட்டுக் கொண்டு "பைக்கில்" செல்ல வேண்டுமென்ற ஆசைகள் இன்றைய இளைஞர்களே இந்த செல்வராஜ் போன்றவர்கள் என்பதை இச்சிறுகதை எடுத்துக்காட்டுகிறது. கார்பரெட் கம்பனிகாரர்கள், ஹைவே ரோடு போடுகிறக் காண்டிராக்டர்கள் எவ்வாறு விவசாயி நிலங்களைச் சாதுரியமாகக் கைப்படுத்துகின்றனர் என்பதனை இதனுள் காணலாம். ஆடம்பர வாழ்க்கையை விரும்பும் மகன், வேளாண்மையேத் தனக்கு உயிர் என வாழும் தந்தை, நிலம் விற்று ஆடம்பர வாழ்வில் திளைக்கும் ஊர் என முப்பரிமாணக் கோணத்துடன் சமூகத்தின் இன்றைய நிலை இச்சிறுகதையில் காட்டப்பட்டுள்ளது.

### 2.20.3 சிறுகதை: 3 : நல்ல சாவு:-

கல்வியைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களின் பாலியல் விருப்பம் இக்கதையின் பின்புலமாக அமைத்துக்காட்டப்பட்டுள்ளது. சின்னச்சாமி ஆசிரியர், குசலம்பாள் ஆசிரியை இருவரும் பாலியல் ஈர்ப்பில் கவரப்பட்டு உடலுறவு கொள்ளும் போது, அது ஊருக்குத் தெரிந்து விடுகிறது. பெரியசாமி என்பவன் இதனைக் கண்டு, இருவரையும் வீட்டிலே கட்டிப்போட்டு, ஊராரையும், உறவினரையும் அழைத்து வந்து காட்டி ஊராருடன் அவர்களை அடிக்கின்றான். குசலம்பாளின் கணவர் உடையார்

வருகைக்காகக் காத்திருக்கின்றனர். உடையாரும் வந்து விடுகிறார். அவர் வந்து எதுவும் பேசாமல் கட்டை அவிழ்த்துவிட்டு நாகரீகமான முறையில் நடந்து கொள்கிறார். சின்னச்சாமி ஆசிரியர் தப்பித்தால் போதுமென்றுக் கடைசிப் பேருந்தில் சென்று விடுகிறான். இதனையெல்லாம் வேடிக்கைப் பார்த்துக்கொணடிருந்த இரு சிறுவர்கள் அவர்களின் வாத்தியாரின் நிலைக்கு அனுதாபப்படுகின்றனர். தன் ஆசிரியரைப் பேருந்து நிறுத்தம் வரையில் கொண்டு வந்து விட்டுவிட்டுச் சிறுவர்கள் திரும்பி வரும்போது உடையார் தூக்குப்போட்டுத் தற்கொலைச் செய்கொண்டதைச் சிறுவர்கள் கேட்டு அதிர்ச்சியடைகின்றனர்.

இக்கதையில் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் ஆசிரியர்களின் மீது கொண்ட மரியாதை இதனுள் காட்டப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் பாலியல் எண்ணம் மற்றும் உறவு விருப்பம், இதன் மூலம் வெளிப்படுத்துவதுடன். வாழ்க்கையில் ஏமாற்றம் அடைந்த் உடையாரின் நாகரீகம் இக்கதையின் மூலம் சொல்லப்படுகிறது.

### 2.20.4 சிறுகதை:4 அம்மா:-

பெற்றத் தாயைத் தன் கிராமத்திலேயேத் தனியாக விட்டுவிட்டு தன் மனைவியின் ஊரில் சென்று குடியிருக்கும் மகன் இக்கதையில் காட்டப்பட்டுள்ளது. அம்மாவின் பாசம், மகனின் இக்கட்டான நிலை என்ற இரட்டைநிலையில் வாழும் இன்றைய மக்களின் வாழ்வு இப்படித்தான்! என்பதாகச் சிறுகதை அமைந்துள்ளது.

> **"மொச்சப்பயிறு ஒருப்படியாகும். இங்க யாரு இருக்க திங்க எடுத்து கிட்ட போயி புள்ளிவோகிட்ட கொடுக்கிறியா?**
> **"நேரம் ஆச்சு, நான் கியம்பட்டுமா?" என்றவனிடம் விசயம் இருந்தால் ஆள்வுடு, வர்றான், அக்காவா ஒரு எட்டு போய் பாத்துட்டு வாடா தம்பி** (வீ. மா -அம்மா - பக் - 101)

எனக் கேட்கும் தாயின் உள்ளம், மகனின் அவசரநிலை ஆகியவை இக்கதையின் போக்கை நமக்கு எடுத்துரைக்கிறது. இக்கதையின் நோக்கமே தாய்ப்பாசம் உணர்த்துவது எனலாம்.

### 2.20.5 சிறுகதை:5 நாளை:-

செல்லம்மாள், சின்னச்சாமிஉடையார் இருவரும் தனித்தனியாக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கணவனை இழந்தச் செல்லம்மாள், மனைவியைழந்த சின்னச்சாமிஉடையார் இருவரும் பாலியல் எண்ணத்தில் கரவப்பட்டு ஒன்றாக வாழ முடிவு செய்கின்றனர். இதனை மையமிட்டேக் கதையின் நிகழ்வு அமைகிறது.

மருமகள்களின் போக்குப் பிடிக்காமல் செல்லம்மாளைத் தேடி வருகிறார் சின்னச்சாமிஉடையார். தன்னுடன் வந்து வாழும்படி கேட்க, செல்லம்மாள் பிடிவாதமாக மறுத்து விடுகிறாள். தாலி கட்டினால்தான் மனைவி என்ற அந்தஸ்து கிடைக்கும் என்பதை இக்கதைப் பதிவு செய்கிறது.

### 2.20.6 சிறுகதை:6 நிஜமும் பொய்யும்:-

இச்சிறுகதை இரண்டு அத்தியாயங்களில் அமைக்கப்பட்டுள்ளது. முதல் அத்தியாயம் ஊரை விட்டு ஓடிச்சென்ற (மகன்) ராகவன் என்ற கதாப்பாத்திரத்தை மையிட்டதாகவும் இரண்டாவது அத்தியாயம் ராகவனின் அம்மாவைப் பற்றியதாகவும் காணப்படுகிறது. ராகவன் ஊரை விட்டு வெளியேறி, சென்னைக்குச் சென்று வேலைக்குப்போய்ச் சேர்ந்து அங்கேயே தங்கியும் விடுகிறான். தன் கம்பனியின் மூலமாக பம்பாயிக்கு மாற்றலாகிப் போகும்போது, புகை வண்டியில் ஏறி அமர்ந்து தன் அம்மாவிற்கு கடிதம் எழுதுகிறான். ராகவன் எழுதும் கடிதத்தின் மூலம் ராகவனின் முந்தைய நிகழ்வுகள் கதையாக நமக்கு எடுத்துக்காட்டப்படுகிறது.

"ஊரைவிட்டு ஓடி வந்தது. தற்சமயம் தான் மேற்கொண்டப் பயணம். தான் வேலைப் பார்க்கும் இடத்திலேயே தான் ஒரு பெண்ணைப் பார்த்து, திருமணம் செய்து கொள்ளப் போவது எனத் தொடங்கி, தன் அம்மாவான மொட்டையம்மாளுக்கு அறிவுரைகளாக, ஊராரிடம் வம்பு பண்ணாதே, எதிர்த்த வீட்டுக் கோழிகள் வீட்டு முன் இரையெடுக்க வந்தால் பக்கத்து வீட்டாருடன் சண்டை போடாதே, சீக்கரம் நான் வந்து விடுவேன்" எனக் கடிதத்தில் எழுகிறான்.

அத்தியாயம் இரண்டில், மொட்டையம்மாள் தன் மகன் ராகவனுக்கு சேகர்! என்பவனின் துணைகொண்டு கடிதம் எழுதுகிறாள். அவள் சொல்ல அதனை சேகர் என்பவர் எழுதுவதாக இக்கதை நிகழ்வு அமைக்கப்பட்டுள்ளது.

"ராகவன் சிறு பிள்ளையாக இருந்தபோது, தன் கணவர் (ராகவனின் தந்தை) இறந்தபோது, என்ன நடந்தது என்பதை பற்றியும் அவன் ஊரை விட்டுச் சென்றவுடன் என்ன நடந்தது என்பது பற்றியும், அவனுக்காக அவள் ஒரு பெண்ப் பார்த்து வைத்திருப்பதாகவும் கடிதத்தில் அவள் சொல்லச்சொல்லச் சேகர் கடிதம் எழுதுகிறான். சேகர் வெறுமனே நான் நலம், நீ நலமா என ஓரிரு வரிகளில் எழுதி முடித்ததை அறிந்து கொண்டு என்னாத்த எழுதின? எனத்தனக்குள் சொல்லிக் கொள்ள, சேகர் எழுதியது மொட்டையாளுக்கு தெரிந்துவிட்டது என்று நமட்டு சிரிப்புடன் எழுந்து போவதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. இதில் ஊராரின் நடப்பு

நிகழ்ச்சிகள், அம்மா -மகன் உறவு ஆகியவை இதனுள் எடுத்துக்காட்டபட்டுள்ளது. சாதியின் கொடுமைத் தாங்கிக்கொள்தாத இளைஞன் சென்னைக்குச் சென்று வேற்றுச் சாதிப்பெண்ணை திருமணம் முடிக்கத் துணிந்தது எனக் கதையின் போக்கு அமைகிறது.

### 2.20.7 சிறுகதை:7 எழுத்துக்காரன்:-

வட்டாட்சியர் அலுவலகத்தில் தன் மகனுக்காக "சாதிச் சான்றிதழ்" பெற்றுக் கொள்ள வந்தப்படிக்கத் தெரியாதக் கிராமத்துப் பெண்ணுக்கு உதவும் "சிவராமன்" என்ற எழுத்துக்காரன் உதவுகிறான். முடிவில் அவன் எழுத்துக் கூலியாக ஐந்து ரூபாய் கேட்கிறான். அந்த கிராமப்புறப் பெண் எதற்கு பணம் தரவேண்டும் என சிவராமனுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுகிறாள் முடிவில் அந்த பெண் போனால் போகிறது என ஒரு ரூபாயை சிவரானுக்கு எழுத்துக் கூலியாக கொடுக்கிறாள். இதனைப் பார்த்த மற்றவர்கள் வியப்பியல் ஆழ்கின்றனர்.

> **"எம் மவன கவர்மண்ட் ஆஸ்டல்ல சேக்கிறதுக்கு இந்த வாரத்துல இன்னசாதி, இன்னா எனம்னு சொல்லி எயிதி ஒரு கையெயித்து வாங்கியார சொன்னாங்க"**
>
> (வீடியோ மாரியம்மன் - எழுத்துக்காரன்: பக் - 145)

எனக் கூறி நிற்கும் அந்த கிராமத்துப் பெண்ணின் அறியாமையும், வட்டாட்சியர் அலுவலகம் முன்பு அமர்ந்து மனு எழுதித் தந்து அதில் வருமானம் பெற்றுக் கொள்பவரான சிவராமன் என்ற எழுத்தரின் எதார்த்த வாழ்க்கையும் நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

> **"நாலே நாலு எயித்து, அதுவும் நல்லா எய்தினியோ இல்லியோ அதுக்குப் போயி நெஞ்சுக்கு நீதியாத்தான் அஞ்சி ரூவா பணம் கேக்குறியே, இந்த நாயத்தை கிராமத்தான்கிட்ட சொல்லிப்பாரு தெரியும். படிக்கிற புள்ளக்கி அதுவும் நாலு எயித்தெக் காயிதத்திலெ கிறுக்கினதுக்குப் பணம் கேக்குற ஆளெ இப்பத்தான்**
> **நான் பாக்குறேன். நீ என்னப் பண்ணுவ? ஒலகம் அப்படிப் ஒலகமா மாறிடிச்சிடாப்பா கடவுளே"** (வீ.மா - எழுத்துக்காரன் - பக் - 150-151)

என்ற அந்த அம்மாவின் அறியாமைப் புலம்பலில் அறியாமையில் வாழும் மக்களின் எதார்த்த வாழ்வுக் காட்சிப்படுத்தப்படுகிறது.

### 2.20.8 சிறுகதை:8 குடும்பம்:-

முருகன் தன் மனைவி மஞ்சாயியை சந்தேகித்து அடிக்கிறான். ஊரே நின்று வேடிக்கைப் பார்க்கிறது. உடைந்தச் சூடானக் கீரச்சட்டியை எடுத்து அப்படியே மஞ்சாயின் கண்ணத்தில் அடிக்கிறான். வலி தாங்காமல் அலறியடித்துக் கொண்டு, தப்பிக்க வெளியே வந்து விடுகிறாள். பள்ளி முடித்து வந்து பயத்துடன் மூலையில் அமர்ந்து இதை வேடிக்கைப் பார்க்கும் கண்ணன், அம்மா வெளியேச் சென்றவுடன் அவளைத் தேடிச் செல்கிறான்.

பறவண்ணான் தொரப்பாட்டு என்ற இடமானது

> **"காலணியில் உள்ள பெண்கள் யாராக இருந்தாலும் புருஷன் அடிச்சான் என்று, மாமனார் மாமியார் சண்டைப் போட்டனர் என்று, குடும்பப் பிரச்சனை என்று, கோவித்துக் கொண்டு தாய் வீட்டிற்கு போகமாட்டார்கள். எடுத்ததுமேப் பறவண்ணான் துரைப்பாட்டிற்குத்தான் போவார்கள். அந்த இடத்தில்தான் பெரிய காடு மாதிரி அரளிச்செடி வளர்ந்து நிற்கும். அந்த இடத்திற்குப் போனவர்களில் பெரும்பாலானவர்களை பிணமாகத்தான் தூக்கிக் கொண்டு வருவதை கண்ணன் அறிந்திருந்தான்.** (வீடியோ மாரியம்மன் - குடும்பம் - பக் - 156)

அம்மாவைத் தேடிப் பறவண்ணான் தொரப்பாட்டு என்ற இடத்திற்கு போகிறான். அவன் நினைத்தது மாதிரியே மஞ்சாயி அங்கு அரளி விதையை அரைத்துக் குடித்து தற்கொலை செய்து அரளி விதையை அரைத்துக் கொண்டிருக்கும் போது, கண்ணன் அதைத் தடுத்து வீட்டிற்கு அழைத்து வருகிறான். அவள் இறந்துவிட்டாள் தன் மகளின் நிலை என்னாகும் என நினைத்துப்பார்த்துத் தற்கொலை எண்ணத்தை மாற்றிக்கொண்டு கண்ணனுடன் வீட்டிற்குப் போகிறான். வீட்டிற்கு வந்த மஞ்சாயியைக் கணவன் மீண்டும் அடிக்கக் கீழேத் தள்ளியபோது, முருகனை அப்பா என்றுகூடப் பார்க்காமல் கண்ணன் மத்துக் களியை எடுத்து வந்து தந்தை முருகன் தலை மீது அடித்து விட்டு "எங்கம்மாவ உடுடா " என்கிறான். கண்ணனின் இச்செயலைக் கண்டு முருகன் சிரிக்கிறான். ஊர் மக்கள் வேடிக்கைப்பார்த்து விட்டுக்களைந்து செல்கின்றனர் எனப்தாக இச்சிறுகதை அமைந்துள்ளது. இக்கதையில் குடிகாராகளின் மனநிலைக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. குடிப்பழக்கத்தினால் குடும்பங்களில் நிம்மதி போய்விடுகிறது என்பதும், எல்லாவிதச் சண்டைகளுக்குக் காரணம் சந்தேகப்புத்திதான் என்பதாக இச் சிறுகதை அமைந்துள்ளது.

## 2.20.9 சிறுகதை:9 சத்தியக்காட்டு:-

மேல்சாதிக்காரர்களிடம் வீட்டு வேலை செய்து வந்த பொன்னருவிக்கும், சாமிதுரை படையாச்சி என்பவரின் பேரனுக்கும் உறவு ஏற்பட்டு, பொன்னருவி கற்பம் தரிக்கிறாள். அவள் கீழ்ச்சாதியைச் சேர்ந்தவள் என்பதினால், மேல்ச்சாதியைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடி பஞ்சாயத்து வைத்து சமாதானம் பேசுகின்றனர். பொன்னருவியின் உறவினர்கள் "தலித்துகளும் " ஒன்று கூடி நியாயம் கேட்கின்றனர். திருமணம் செய்து வைக்கும்படி கேட்க, பணியாத மேல்ச் சாதிக்காரர்கள் நாகம்மாளிடம் (பொன்னருவியின் அம்மா) நாசுக்காகப் பேசி, பொன்னருவியைக் கடத்திச் சென்றுக்கொன்றுவிடுகின்றனர். பொன்னருவியின் உடலை "பொட்டைக் குளம்" என்ற குளத்தில் வீசி எறிந்துவிடுகின்றனர். பொட்டைக் குளத்தில் தலித்துகள் யாரும் இறங்கக் கூடாது, நீர் அருந்தக் கூடாது என்பது கட்டளையாகக் கட்டுப்பாடாக இருந்தது. இந்த குளத்தில் கொன்று வீசியதால் மேல்ச் சாதிக்காரர்கள் அக்குளத்தைப் பயன்படுத்துவதை நிறுத்திக்கொள்கின்றனர். ஆடு, மாடுகளைக்கூடத் தண்ணீர் குடிக்க விடுவதில்லை. இது இவ்வாறு இருக்க,

பொன்னருவி இறந்த நாள்முதல் "பொட்டைக்குளம்" வழிபாட்டுத் தலமாக மாற்றப்படுகிறது. பொன்னருவி சாமியாக மாற்றப்பட்டு தெய்வ நிலையில் தலித்துகள் அவளை வணங்கவும் செய்கின்றனர். பொன்னருவி இறந்த நாளில் தலித்துகள் அங்கு வந்து ஒன்றுகூடிப்பொங்கலிட்டு பொன்னருவிக்கு மரியாதைச் செலுத்திவந்தனர். இதற்காகக்குடும்பத்துடன் வந்து நேர்த்திக் கடன் கழித்து திருவிழாவாகவே மாற்றினர்.

நாகம்மாள், பொன்னருவி இறந்ததின் நினைவாக விளக்கொன்றை குளத்தின் கரையில் வைக்கிறாள். அத்துடன் ஆலமரம், வேப்பமரம், புன்னைமரம் போன்ற மரங்களை நட்டு வளர்க்கவும் செய்கிறாள். பின்னாளில் அது வழிபாட்டுத் தலமாக மாறி விடுகிறது. இருபது ஆண்டுகளாக இவ்வாறு நடந்து வரும் திருவிழாவில் மழை வருவதைப் பொன்னருவியின் தெய்வச்செயல் என நினைத்து வந்தனர். அந்த மழையில் நனைவதைப் புனிதமாக் கருதினர். என இக்கதையின் போக்கு அமைந்துள்ளது.

"மேல்ச்சாதிக்காரர்களின் கபடத்திட்டம், தலித்துகளின் அறியாமை, அவர்களது ஒற்றுமை போன்றவை இக்கதையின் பின்புலமாகக் காட்டப்படுவதுடன் தலித்துகள் ஒன்றுபட்டு மேல்ச்சாதிக்காரர்களால் கொல்லப்பட்டப் பொன்னருவியைச் சாமியாகவே நினைத்து வழிபட்டும் வருகின்றனர் எனக் கதையின் போக்கில்

கூறப்பட்டுள்ளதால் தலித் மக்களின் மேல்ச்சாதிகாரர்களுக்கு எதிர்ப்பாக பொன்னருவியைச் சாமியாக உயர்த்தி வழிபாடும் நிகழ்த்துவதாக இதனுள் கூறப்பட்டுள்ளது.

> **"ஒனக்கு நல்லதுதான் சொல்றம், முடியாதின்னா ஒன்னோட மவ வாயிக்கத்தான் வீணாப் போவும், ஊரும் ரத்தக்காடாப் போயிடும் மேச்சாதிக்காரங்க சொல்றம். வாத்தைய மாத்திப் பேசுற சாதி நாங்க இல்லெ. இந்த மாதிரி வெவகாரம் இன்னிக்கு மட்டும்தானா நடக்குதா? இத்தன காலமா அனுசரிச்சப் போவலியா? இப்பத்தான் புதுசா கொம்பு மொளச்ச மாரி எல்லாப் பயலும் ஆடு றானுவோ, ஆடட்டம், பாத்துக்கலாம்"** (வீ.மா. - சத்தியக்கட்டு - பக் -174)

என்ற உரையாடலில் மேல்சாதிக்காரர்களின் மட்டகரமானப் பேச்சு தலித்துகளைப் பற்றியதான அவர்களது எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது எனலாம். இக்கதையில் மேல்ச்சாதிகாரர்களிடம் மனிதாபிமானம் என்ற ஒன்றை எதிர்ப்பார்க்க முடியாது என்பதற்கான உதாரணமாக இச்சிறுகதையைக் கூறலாம்.

> **"இருந்தும் கெடுத்தா தேவடியா, செத்தும் கெடுக்கிறா பாரு தேவடியா" என்ற மேல்க்குடிக்காரர்களின் பேச்சு,**
> **"பறச்சிய எப்படியோ சாமி ஆக்கிட்டீங்க"**

என்று மேல்ச்சாதிக்காரர்கள் பேசும் பேச்சுக்கள் தலித்துக்களுக்கு எதிரானதாக இருக்கிறது எனலாம்.

ஊர் சபையில் சிவன் கோவிலுக்கு எதிரிலுள்ள சிதம்பரம் பிள்ளைக் கூறியதை ஊர் கேட்காமல், பொங்கல் வைத்துப் படைக்க மனமில்லாதக் குடியானவர்கள் அந்த உரிமையைத் தலித்துகளிடமேக் கொடுத்துவிடுகின்றனர். பஞ்சாயத்தின் முடிவு நல்லவிதமாக இருந்தாலும், பொன்னருவியின் சாபத்திற்கு ஆளாகிப்போனவர்கள் சாதரணமாக அவர்கள் இறந்ததாலும் அதற்குக் காரணம் பொன்னருவியின் சாபம் என ஊரார் நம்பி அவளைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகின்றனர். இதில் சாதிச் சண்டை, வீண் நம்பிக்கை போன்றவைகள் இச்சிறுகதையின் சமூகப்பின்புலமாக இருப்பதைக் காணலாம்.

### 2.20.10 சிறுகதை:10 பயணம்:-

கணவனை இழந்தப் படையாச்சி லோகம்பாள், தன் பிள்ளைகளை விடியற்காலையில் எழுப்பி, கொத்து மல்லித் தோட்டத்திற்கு அழைத்துச் செல்வதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. இறந்த பின்பு ஆவியாகச் சுற்றுகின்றனர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இச்சிறுகதை ஒரு கிராமத்தின் சாதாரண மக்களின் இயல்பு வாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது. சமூகத்தின் மூடநம்பிக்கையை முன்நிறுத்தி சொல்லப்பட்டுள்ளது.

### 2.20.11 சிறுகதை:11 ஊர்வம்பு:-

குமார் என்பவன் பேருந்தில் பயணம் மேற்கொள்ளும் போது, விபத்து ஏற்பட்டு விட்டதாகக் கூறி அழுது கொண்டு ஒரு கிழவி அந்த பேருந்தில் பயணம் செய்கிறாள். வேறொரு இடத்தில் மூன்று இளைஞர்கள் பேருந்தில் ஏறி அமர்ந்து, டேப்ரிக்கார்டு பாட்டிற்கு ஏற்ப, அவர்களும் பாடி, கைகளைத் தட்டி வேடிக்கையாகச் செய்கின்றனர். குமார் இதைக் கண்டு பாட்டை நிறுத்தச் சொல்கிறான். நடத்துனர், ஓட்டுநரிடம் அதைக்கூறி நிறுத்தி விடுகிறான். பாட்டு நின்றுவிட்ட பிறகும், அவர்கள் பாடுவதை நிறுத்தவில்லை. குமார் அதனைத் தட்டிக் கேட்டும் விதமாக, "இது பஸ்ஸா, ஒங்க ஊடா" எனக் கூறியக் குமாரின் சத்ததினால் அடங்கிப் போனார்கள். அந்த இளைஞர்கள் குமாரைச் சாடைமாரியாகத் திட்டி வருகின்றனர். குமார் கிழவியைக் கண்டு வருத்தப்படுகிறான் எனக் கதை அமைந்துள்ளது. இச் சிறுகதையில் பொறுப்பற்ற இளைஞர்களின் நடவடிக்கை, பொது இடங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியதானச் சூழலை மையப்படுத்தியுள்ளது.

## 2.21 கொலைச் சேவல் சிறுகதைத் தொகுப்பு (2013): சமூகப் பின்புலம்:-

இச்சிறுகதைத் தொகுப்பு 2013-ம் ஆண்டில் வெளிவந்தது. இதற்கு முன்பு பல்வேறு மாத இதழ்களில் பல்வேறுக்காலக் கட்டங்களில் வெளியிடப்பட்டுள்ளது. மொத்தம் பதிமூன்று சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மணலூரின் கதை | - | 2012 (உயிர்மை) |
| 2. | பொருத்தம் | - | -- |
| 3. | அவரவர் பாடு | - | -- |

| | | | |
|---|---|---|---|
| 4. | அன்னக்கிளியும் பன்றிக் கறியும் | - | 2012 கணையாழி |
| 5. | பழம்புளி வீட்டுக் கதை | - | 2011 (உயிர்மை) |
| 6. | கொலைச் சேவல் | - | -- |
| 7. | ஒரு கதையும் இரண்டு மனிதர்களும் | - | -- |
| 8. | வேலை | - | 2010 (தீராநதி) |
| 9. | எதிரி | - | 2011(ஆ.வி) |
| 10. | உயிர் நாடி-2 | - | 2011(ஆ.வி) |
| 11. | பெரியவர்களும் சிறியவர்களும் | - | 2011(ஆ.வி) |
| 12. | அணையும் நெருப்பும் | - | -- |
| 13. | கண்கள் | | -மணற்கேணி(2010) |

**2.21.1 சிறுகதை:1 மணலூரின் கதை:-**

"தமிழர்களின் உயர் நாடி" என்ற தொலைக்காட்சியின் "இந்த வாரம் இந்த ஊர்" என்ற நிகழ்ச்சியைப் படமாக்கும் எண்ணத்துடன் இயக்குநரான ஸ்ரீ என்பவன் மணலூரில் உள்ள தனது நண்பன் ராமு - கஸ்தூரி வீட்டிற்கு வருகிறான். தான் வந்த நோக்கத்தைக் கூறி ஊரில் ஏதேனும் வித்தியாசமானக் கதை இருந்தால் சொல்லும் படிக் கேட்கிறான். முடிவில் எந்த கதையும் கிடைக்காததால் அவனே புது கதையை ஒன்று கட்டி விடுகிறான். சித்தர் ஒருவரின் சாபத்தால் இந்த ஊருக்கு மணலூர் என்ற பெயர் வந்ததாகவும், மணல் மழைப் பெய்த்ததாகவும், மழை பெய்தால் இந்த ஊர் ஆற்றில் மட்டும் விழாது என்றும், பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களின் நேர்த்திக் கடனை நிவர்த்திச் செய்வதற்கு இங்கு ஆண்டிற்கு ஒரு முறை வந்து கூடிப்பொங்கல் வைத்து கொண்டாடுவதாகவும் என ஒரு புதியக் கதையைக் கூறி, ராமுவை ஆச்சரியப்பட வைத்து, இதேக் கதையை அந்த ஊர் ஊராட்சி மன்றத் தலைவரிடம் கூறி அவர் வாயாலேயே சொல்லவும் வைத்து, ஊர் பொதுமக்களிடத்தில் கூறி அவர்களையும் அவ்விதமேச் சொல்லவைத்ததாகவும் இச்சிறுகதை அமைந்துள்ளது.

இன்றைய நவீன உலகில் மக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு அடிமையாகிப் போனதின் நிலைமைகளை மிக ஆழமாகச் சிந்தித்திருக்கிறது. டி.வி.

என்ற ஊடகச் சாதனம் மக்களை எவ்வாறு ஏமாற்றுகிறது என்பதும் மக்கள் எவ்வாறு இதற்கு அடிமையாகின்றனர் என்பதும் இதனுள் எடுத்துக்காட்டப்படுகிறது.

> "டி.வி புரோகிராம்ன்னா என்னான்னு நீ நெனச்சிக்கிட்டிருக்க? இருக்கிறத அப்பிடியே காட்டுறது டி.வி இல்லெ. இருக்கிறதையும், இல்லாததையும் இணைச்சிக் காட்டுறது. புரிகிறதா? கொல, கொள்ள,கற்பழிப்பு, விபச்சாரம்ன்னு சனங்ககிட்ட பாப்புலரான விசயமா சொல்லணும். அதே நேரத்தில செண்டிமெண்டா இருக்கணும். ஒரே பொண்ணு மூணு பேரக் காதலிச்ச கதை, தந்தை மகளை சீரழித்து கத, அண்ணன் கூட ஓடிப்போன தங்கச்சி கதென்னு இருக்கனும்"
> (கொலைச்சேவல் - மணலூரின் கதை - பக்- 10)

என வரும் உரையாடலில் இன்றையத் தொலைக்காட்சிகளின் நவீன உத்தியை எடுத்துரைக்கிறது.

> "சினிமாவுலதான் வயலன்ஸ் இருக்கா? நம்ம நாட்டுல இருக்கிற ஒவ்வொரு நியூஸ் சேனலும் இருபத்தி நாலு மணிநேரமும் சென்சேஷனலா வயலன்ச உருவாக்கிக்கிட்டே இருக்கு, அதவிடப் பெரிய வயலன்ச சினிமா உருவாக்க முடியாது"
> (கொ.சே.- மணலூரின் கதை -பக்- 21)

என்ற உரையாடல், இன்றை உண்மை நிலைகளை, பிழையின்றி கூறுகிறது எனலாம்.

தொலைக்காட்சி, திரைப்படம், நடிகர்கள், தொலைக்காட்சி நெடுந்தொடர்கள் போன்றவற்றிற்கு மக்கள் கொடுக்கும் முக்கித்துவங்கள் சமூக அவலங்களாக இச்சிறுகதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 2.21.2 சிறுகதை:2 பொருத்தம்:-

திருமணப்பொருத்தம் பார்க்கும் இன்றையச் சமூகச்சூழல் இதனுள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ரமேஷ் என்றக் கதாபாத்திரம், தனக்கு ஒரு மணப் பெண் தேடுதல் என்ற முறையில் பத்து வருடங்களை வீணடித்துவிட்டு "ஜாதகம்"

என்ற நம்பிக்கையில் தன்னை முகிழ்த்துக் கொண்ட இளைஞனாகக் காட்டப்பட்டுள்ளார்.

> "காலக்காலத்தில வெதைக்கணும். காலக்காலத்தில அறுக்கணும். வெதயும் நல்லா இருக்கணும். நெலமும் நல்லா இருக்கணும். அப்பத்தான் பயிறு முளைக்கும். பயிறும் சரி நெலமும் சரி. ரெண்டுல ஒண்ணு சரியில்லண்ணாக் கூட பயிறு பச்ச முளைக்காது புரியுதா? எல்லாம் சரியாக இருக்கணுமின்னா பொண்ணு என்ன? செஞ்சிவச்சப் பொருளா! புடிவாதம் புடிக்காம கெடைக்கறதப் புடிச்சிக்கிட்டு காலத்த ஓட்டிக்கிட்டுப் போங்க" (கொலைச் சேவல்-பொருத்தம்-பக்-36)

என ஜோதிடர் கூறுவது இன்றைய நாட்களில் பொருத்தம் பார்க்கும் பெற்றோர்களுக்கும், இளைஞர்களுக்கும் அறிவுறுத்துவதைப் போல உள்ளது.

> **"மனசு ஆசப்பட்டா மட்டும் பத்தாது. ஜாதகத்திலெ கொடுப்பின இருக்கணும். அப்படி இல்லையா, கெடச்சதே போதும்ண்டா சாமின்னு போவணும். அப்படிப் போனாத்தான் காலம் ஓடும். குடும்பமின்னு ஒண்ணு இருக்காது. யாருக்கு என்ன விதிக்கப் பட்டிருக்கோ அதுதான் நடக்கும். நாம்ப ஆசப்படுற மாரி பொறப்ப மாத்திட முடியாது"** (கொலைச் சேவல்-பொருத்தம்-பக்-36)

என்பதின் வழியே, மண வாழ்க்கை என்பது கிடைத்ததை வைத்து நல்ல விதத்தில் வாழ்வது என்பதை வலியுறுத்துவதாக இருக்கிறது எனலாம். திருமணம், ஜாதகப் பொருத்தம், நம்பிக்கை என்ற மூன்றின் பின்னணியில் இச்சிறுகதை அமைந்துள்ளது.

### 2.21.3 சிறுகதை: 3 :அவரவர் பாடு:-

அரசாங்கப் பள்ளிகளில் ஆசிரியர்களின் நிலைமை இச்சிறுகதையில் முன்நிறுத்தப்பட்டுள்ளது. மாணவிகள் பள்ளிகளில் இன்று அலைபேசிகளைப் பயன் படுத்துவது, ஆண் நண்பர்களுடன் பேசிப்பழகுவது என்பன உள்ளிட்டவைகள் காட்சிப் படுத்தப்படுகிறது. மாணவிகளை வழி நடத்தும் ஆசிரியர்களுக்கு, பெற்றோர்களால் ஏற்படும் சிக்கல்கள் இதன் வாயிலாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

"பத்து நாளக்கு முன்பு பிளஸ்டூ படிக்கிற தர்ம நல்லூர் பொண்ணு ஒண்ணு மருந்து குடிச்சிடிச்சி. "எதுக்கு மருந்த குடிச்ச?ன்னு கேட்டதுக்கு "டீச்சர் திட்டிப் புட்டாங்க"ன்னு பொய் சொல்லிடிச்சி. மறு நாளே ஊரே திரண்டி மறியல் பண்ணிட்டாங்க. சாலை மறியல்ன்னதும் போலீஸ் வந்து கனிமொழிங்கிற டீச்சர அரஸ்ட் பண்ணிட்டாங்க. சி.இ.ஓ அந்தம்மாவ சஸ்பெண்டு பண்ணிட்டாரு. ரெண்டு நாளக்கி முன்னால்தான் காதல் பிரச்சனையால பொண்ணு மருந்து குடிச்சா டீச்சர் திட்டுனதால இல்லன்னு தெரிஞ்சி அந்த டீச்சரை வெளிய வுட்டாங்க. எதுக்காக ஸ்கூல்ல வந்து கலாட்டா செஞ்சாங்க சால மறியல் பண்ணுணாங்க ணன்னு பெத்தவங்கிட்ட தான் போயிக் கேக்க முடியுமா?" (கொலைச்சேவல்-அவரவர் பாடு-பக்-45)

எனத் தலைமையாசிரியரின் உரையாடலில் பள்ளி ஆசிரியர்களின் துன்பம் நமக்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தீபா என்ற மாணவியின் காலில் இரத்தம் வருவது எனத் தொடங்கி அந்த மாணவியின் தாய் வேறொருவருடன் வாழ்ந்து வருவதையும், தந்தை வேறொரு பெண்ணுடன் மும்பையில் வாழ்ந்து வருவதாகக் காட்டப்படுவது என்பது சமூதாயத்தின் இன்றையப் போக்கு நமக்கு என்ன என்பதைப் புரியவைக்கிறது. தவறானப் பழக்கத்தினை உடையவளானத் தன்தாயைத் தண்டிக்க முடியாத தனது காலில் தனக்குத்தானே சூடு வைத்துக் கொள்வதும், பிளேடால் கீறிக்கொள்வது என இக்கதை மாணவிகளின் பெற்றோர்களின் மோசமான நிலை வெளிப்படுத்துகிறது.

### 2.21.4 சிறுகதை:4 அன்னக்கிளியும் பன்றிக் கறியும்:-

கிழவி பழனியம்மா தனது பேரனைத் தன் ஊருக்கு அழைத்து வரும்போது "செம்பையனாரு"க் கோவிலுக்கு வந்து சாமிகும்பிடுவதாக இக்கதை அமைந்துள்ளது. குழந்தையின் மனநிலை இதனுள் காட்டப்பட்டுள்ளது. பேரன் பன்றிக் கறிப் சாப்பிடப் பந்தியில் உட்கார்ந்த போது தனக்கு வேண்டாம் எனப் பழனியம்மாப் படையாச்சியின் பின்னணியில் கதை இயங்குகிறது. சிறுவர்களின் விளையாட்டு போக்கு இதனின் மையக்கருவாக விளங்குகிறது.

### 2.21.5 சிறுகதை:5 பழம்புளி வீட்டுக்கதை:-

பஞ்சவர்ணத்தின் மருமகன் ஐயப்பசாமி மாலை போட்டு கோவிலுக்குச் செல்வதற்குமுன் வழிப்பணம் கொடுக்கவேண்டி, பணம் பெற்றுக்கொள் தனது மகன் வீட்டிற்கு வருகிறாள். மகன் சென்னைக்குப் போய்விட, மருமகள் கோமதியிடம் பணம் கேட்க, அவள் இருநூறு ரூபாய் மட்டும் கொடுக்கிறாள். இதனிடையே மருமகள் "எரநூறுக்கு மேல எம்மாம் தருவாங்க? நீங்க என்ன அவரோட பொண்டாட்டியா நெனச்சப்பல்லாம் போன் போட்டுப் பேசுறதுக்கு?" என மருமகள் சொல்ல, இந்த சுடுச்சொல் தாங்க முடியாமல் கோபித்துக் கொண்டு ஊருக்கு திரும்புகிறாள் பஞ்சவர்ணம். பேருந்து நிலையத்திற்கு வந்தபின்புதான், தன்னிடத்தில் பணமில்லையென்பதை உணர்கிறாள். தன்னுடைய ஊர்க்காரர்கள் எவரேனும் இருந்தால் கைமாத்தா பணம் வாங்கிவிட, பேருந்து நிலையத்தில் வட்டமிடுகிறாள். யாரும் இல்லையெனத் தெரிந்தவுடன், நடந்தே போய்விட முடிசெய்து நடக்கிறாள். போகும் வழியில், ஒரு கொட்டகையில் நீர் குடிக்கிறாள். அங்கு கிழவர் ஒருவர் வழிப்போக்கராக உடன் வருகிறார். அப்போது அந்த கிழவரிடம் தன் கதையைக் கூறுகிறாள். தன் மகனுக்கு எவ்வாறு திருமணம் நடந்தது என்பது பற்றியும், தன் கணவர்தான் பழம்புளி என்பதையும் கூறுகிறாள். இவ்வாறாக இச்சிறுகதையின் போக்கு அமைந்துள்ளது. பெற்றப் பிள்ளைகள், தங்களின் பெற்றோரை எவ்விதம் நடத்துகின்றனர். மருமகள்கள் எவ்வாறு மாமியாரிடம் நடந்து கொள்கின்றனர் என்பதனை முன்னுருத்திக் கதை அமைந்துள்ளது.

### 2.21.6 சிறுகதை:6 கொலைச்சேவல்:-

கோகிலா என்ற பாத்திரம். கொலைச் சேவலின் மையப்பாத்திரமாக அமைகிறது. தன்னுடன் பாலியல் உறவு கொண்டவன் தன் மூத்த மகளைத் திருமணம் செய்ததுடன் தன் இரண்டாவது பெண்ணையும் திருமணம் செய்து கொள்கிறான். இதனைத் தாங்க முடியாதக் கோகிலாக் கொலைச் சேவல் வாங்கி கருப்பசாமிக்குப் படைத்து அதன்மூலம் அவனைக் கொல்ல திட்டமிடுகிறாள். இவ்வாறு இக்கதை அமைந்துள்ளது.

> "என்ன செய்யணும் சொல்லு. கை கால மொடக்கணுமா? கண்பார்வையக் கொறக்கணுமா? விஷ ஜந்துகள ஏவிவிட்டுப் போற வர எடத்தில கடிக்க வைக்கணுமா? செய்யுற தொழில விருத்திக்கி வராம செய்யணுமா? இல்லைத் துஷ்ட தேவாதிகளத் தூண்டி ஏவி வுட்டுப் பட, அரிப்பு, சொறி,

செறங்கு, குட்டநோவ உண்டாக்கி ஊரு ஒலகமே பாத்துச் சிரிக்கும்படியா செய்யணுமா? எல்லாத்துக்கும் மருந்து இருக்கு, மந்தரம் இருக்கு." (கொலைச் சேவல் - பக் - 86)

எனப் பூசாரி கோகிலாவிடம் சொல்லுவதைக் கொண்டு, இங்கு வருபவர்களின் நோக்கம் நமக்குப் புரிகிறது.

பில்லி, சூனியம், மருந்து, வசியம் போன்ற நம்பிக்கைகள் இந்த நவீன உலகத்தில் இன்னும் உயிரோடுதான் இருக்கிறது என்பதையே இச்சிறுகதை எடுத்துக்காட்டுகிறது.

### 2.21.7 சிறுகதை:7 ஒரு கதையும் இரண்டு மனிதர்களும்:-

நீதிமன்ற வாசலில் குப்பம்மாள் என்ற கிழவி, மருமகளிடம் கோபித்துக் கொண்டு வந்து உட்கார்ந்திருக்கும் குப்புசாமியிடம் தன் சொந்தக் கதையைச் சோகத்துடன் கூறுகிறாள். அவள்? ஏன்? நீதிமன்ற வளாகத்திற்கு வந்தாள் எனத் தன் கதையை கூறிவிட்டு, குப்புசாமியிடம் நீங்கள்? எதற்கு வந்தீர்? என்ற கேள்வியை எழுப்ப, குப்புசாமி தன் கதையைக் கூறுவதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. வயதான முதியவர்கள் குடும்பங்களில் எவ்விதம் நடத்தப்படுகின்றனர் என்பதே இச்சிறுகதையின் பின்புலம்.

### 2.21.8 சிறுகதை:8 வேலை:-

ஐ.கே.எஸ்.சி கம்பெனியில் தனது மகன் தனுசுக்கு நேர்முகத்தேர்வு இணையதளத்தில் நடத்தப்படுகிறது. தந்தை பெருமாள் முன்னிலையில் தனுஷ், நிர்வாகம் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்து தேர்வாகிவிடுவதைப் போல் அமைந்துள்ள இச்சிறுகதை, பொறியியல் படிப்பு முடித்து வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர்களின் நிலைமிகப் பொருத்தமுறச் சொல்லப்பட்டுள்ளது. நிர்வாகத்தாரின் சட்டதிட்டங்கள், ஒப்பந்தங்கள் என ஒவ்வொன்றையும் வாசித்து வாசித்து பதில் அளித்துவரும் தனுஷ் **"உறவினர் மட்டுமல்ல பெற்றோர் இறந்தால் கூட நிர்வாகம் அனுமதித்தால்தான் விடுமுறை எடுக்க வேண்டும்"** என்ற கேள்வியைப் படித்து, நிலைத்தடுமாறுகிறக் காட்சி நம்மையும் நிலைத்தடுமாறச் செய்கிறது. இந்தச் சிறுகதையின் மூலம் ஐ.டி கம்பனிகளின் மெத்தனப்போக்கு வெளிப்படுத்தப்படுகிறது. இந்தக் கேள்விக்குச்"சரி" எனப்பதிலளித்து விடும்படி தனது பெற்றோர்கள் கூறுவது இங்கு ஆச்சரியப்பட வைக்கிறது. இன்றையக் கல்வி, தொழில்நுட்பம், விஞ்ஞானம், மருத்துவம், வேலைவாய்ப்பு என்ற

முன்னேற்றங்களுடன் இருந்தாலும் மனிதாபிமானம் மட்டும் இல்லாதப் பரிதாபத்துக்குரிய நிலையைப் பின்புலமாக்கிக் காட்டப்படுகிறது.

### 2.21.9 சிறுகதை:9 எதிரி:-

வயலில் மாடுகள் மேய்வதினால் மாடுகளை முருகன் என்பவன் தடியால் அடிக்க, மாட்டுக்குச் சொந்தக்காரரான பாக்கியம் அதைத் தடுக்கும் போது நிலை தடுமாறி கீழே விழுந்து கை ஒடிந்து விடுகிறது. இருவரின் பிரச்சனைக் காவல் நிலையம் வரை செல்கிறது. அங்கு காவல்த்துறை ஆய்வாளர், பிரச்சனையைப் பேசித் தீர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறார். முடிவில் சமாதானமாகப் போய்விடுகின்றனர். காவல் துறைக்குச் சென்றால் அங்கு எந்தவிதமானச் சூழல் ஏற்படும் என்பதைக் கருவாக்கிப் படைக்கப்பட்டுள்ளது. சமாதானம் என்பதை விட்டு விட்டு, கோர்ட்டு, கேசு என்று போனால், என்னவாகும் என்றச் சூழலைப் பின்புலமாக்கிக்காட்டப்பட்டுள்ளது.

### 2.21.10 சிறுகதை:10 உயிர்நாடி-2:-

இச்சிறுகதையைப் போலவே, வீடியோ மாரியம்மன் சிறுகதைத் தொகுப்பிலும் இதே தலைப்பில் சிறுகதை இடம் பெற்றுள்ளது. ஆதலால் ஆசிரியர் இதற்கு உயிர்நாடி-2 என்ற தலைப்பை தந்துள்ளார்.

தங்கம்மாள் என்ற கிழவியிடம் இருக்கும் நிலத்தை விற்றுவிடும்படி நிலத்தரகர்கள் அணுகும்போது, அந்நிலத்தை விற்க மறுக்கிறாள். பணத்தைக்காட்டி நிறையக் கிடைக்கும் என ஆசைக் காட்டிப்பார்க்கின்றனர் கிழவி தங்கம்மாள் எதற்கும் மசியவில்லை. மறுத்துவிடுகிறாள். இப்பொழுது விற்கவில்லையென்றாள், இந்த ஊரில் உனது நிலம் மட்டும் தனியாக இருக்கும் ஊரிலுள்ள எலி, பூச்சி, பல்லி, பாம்பு இவையெல்லாம் இந்த நிலத்தில்தான் வந்து தங்கும் உன்னோட விளைச்சல் எல்லாமே வீணாகப் போய்விடும் என்று அச்சுறுத்தியும் பார்க்கின்றனர். அதற்கும் மசியாமல் உறுதியான நிலையில் நிற்பதாக இக்கதை அமைந்துள்ளது. இச்சிறுகதையானது இன்றைய விவசாயிகளுக்கு ஆறுதலாக இருக்கும் என்பதே இதனின் பின்புலம் எனலாம்.

### 2.21.11 சிறுகதை:11 பெரியவர்களும் சிறியவர்களும் :-

விருதாச்சலம் என்ற வாத்தியார் புதியதாக வேலைக் கிடைத்து அரசாங்கப் பள்ளியில் நியமிக்கப்படுகிறார். தலைமை ஆசிரியரிடம் அனுமதி பெற்று வகுப்பு

எடுக்கச் செல்லும் போது இடையிடையேப் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும்படி, அவர்களது மூத்தப் பிள்ளைகளிடம் குழந்தைகளை விட்டுச் செல்வதைக் கண்டு கோபம் கொள்கிறார். பக்கத்து வகுப்பில் எழுத்து வேலை கொடுத்துவிட்டு தூங்கிக்கொண்டிருக்கும் ஆசிரியர். தான் பாடம் நடத்தும் வகுப்பில் அப்பாடம் மூன்று மாதக்காலமாக நடத்தப்படாமல் இருந்தது என்பதையெல்லாம் அறிந்து அச்சமும், பயமும் கொள்கிறார். அரசாங்கப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பணியில் சேர்ந்தால் அவர்கள் எதிர் கொள்ளவேண்டியப் பிரச்சனைகள் இதனுள் பின்புலமாக வைத்துச் சிறுகதை அமைந்திருக்கிறது.

### 2.21.12 சிறுகதை:12 அணையும் நெருப்பு:-

காவல்துறை ஏட்டாக இருந்து இறந்துபோனத் தனது கணவரின் "பென்ஷன்" தொகை பெறுவதற்காக காவல் நிலைய அலுவலகத்திற்குச் செல்லும் போது, காவல்த்துறை ஆய்வாளருக்கும் இவளுக்கும் கள்ளத் தொடர்பு ஏற்படுகிறது. ஆய்வாளரின் மனைவி இதனை அறிந்து கடிதம் எழுதி வைத்துவிட்டு, தற்கொலை செய்து கொள்கிறாள். ஆய்வாளர் வேலையை இழக்கின்றார். செய்தித்தாள்களிலும், பத்திரிக்கைகளிலும் பெரிதாகப் பேசப்படுகிறது. ஆய்வாளர் சிறையில் தள்ளப்படுகிறார். இவள் இரண்டு மகளை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாத நிலையில் அவளின் தந்தையின் மூலம் மிகத் தொலைவில் ஒரு வீடு எடுத்து தனியாகத் தங்க வைக்கப்படுகிறாள். அங்கு அவளை ஒருவன் ஒரு வருடகாலமாகத் தன்னையும், வீட்டையும் நோட்டமிட்டுக்கொண்டிருந்ததை அறிந்து அப்பையனை வீட்டுக்குள் அழைத்து, அவனிடம் கடந்தக் கால நிகழ்வுகளை கோபத்துடன் கூறுகிறாள்.

பள்ளியில் படிக்கும் போது காதல் ஏற்பட்டது. பின்பு திருமணம் ஆனது. இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்து. காவல்த்துறையில் பணியாற்றும் ஏட்டான தன் கணவன் விபத்தில் இறந்தது. பிறகு ஆய்வாளருக்கும் அவளுக்கும் ஏற்பட்ட கள்ளத்தொடர்பு அதனால் ஏற்பட்ட விளைவு இக்கதையானது இன்றை கள்ளத்தொடர்புகளின் உண்மை நிலையை எடுத்துரைப்பதாகப் படைக்கப்பட்டுள்ளது. உயர் அதிகாரிகளிடம் வளர்ந்துள்ள பாலியல் உணர்வுகளை வெளிப்படுத்துவதாவும் இச்சிறுகதை சமூகவியல் நோக்கில் படைக்கப்பட்டுள்ளது.

### 2.21.13 சிறுகதை:13 கணக்கர்:-

பெரிய சாமி கவுண்டர் என்ற கிழவரை முன்னுருத்தி இக்கதை அமைந்துள்ளது. இரண்டு மகன்கள், மருமகள்கள் யாரும் தன்னைக் கவனிக்காத நிலையில் கண்கள் தெரியாமல் போய்விடுகிறது. ஆடுகளை மேய்க்கும் தொழிலை விட்டுவிட்டு, வீட்டோடு இருக்கிறார். கண் மருத்துவம் பார்க்கத் தன்னை யாரேனும் அழைத்துச் செல்லும்படி கேட்டால், மருமகள்கள் சண்டை இடுகின்றனர். அவரது மகன்கள் வேலையிருக்கிறது என நழுவி விடுகின்றனர். இந்நிலையில் மனம் வெறுத்த பெரியசாமி கவுண்டர் பேத்தி மூலம் விருத்தாச்சலம் ஊருக்கு இலவச கண் மருத்துவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்படுகிறார். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள், "ஆபரேசன்" செய்ய வேண்டும் எனக் கூறுகின்றனர். உங்களுடன் யார் வந்துள்ளனர் எனக் கேட்டதற்கு, நான் அனாதை, எனக்கு யாருமில்லை எனக்கூறுவதாக இச்சிறுகதை அமைந்திருக்கிறது.

வயதானவர்கள் வீட்டில் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு இதுவே ஒரு சாட்சியம். வயதில் பெரியவர்கள், முதியோர்கள் படும் வேதனைகள் இச்சிறுகதையில் முன் வைக்கப்படுகிறது.

இதுவரை இமையம் - படைப்புகளின் சமுதாயப் பின்புலம் என்ற முறையில், புதினங்கள், சிறுகதைகள் எனத் தனித்தனியே வகைப்படுத்தி, அதன் கதைச் சுருக்கங்களின் வழியே அதன் சமூகப் பின்புலங்கள் ஆராய்ந்து சொல்லப்பட்டது. இனி சமுதாயவியல் அணுகுமுறையின் இரண்டாவது நிலையான "ஏற்பும் எதிர்கொள்ளலும்" என்ற கொள்கைகள் இமையம் படைப்புகளுக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதைக் காணலாம்.

சமூகப்பின்புலம் பற்றி ஆய்வதற்காக அல்லது தெரிந்து கொள்ளுவதற்காக புதினங்கள், சிறுகதைகள் ஆகிவற்றின் கதைச் சுருக்கத்துடன் எடுத்துரைக்கபட்டது. இனிவரும் தலைப்புகளில் கதைச்சுருக்கம் இடம் பெறத் தேவை இருக்காது.

### 2.22 ஏற்பும் எதிர்கொள்ளலும்:-

சமுதாயவியல் பார்வை அல்லது நோக்கு அல்லது அணுகுமுறையில் "ஏற்பும் எதிர்கொள்ளலும்" என்ற நிலை என்பது அடிப்படையில் இது ஒரு சமுதாயத் தேவை[11] என்பதை நாம் இங்கு பதிவு செய்யவேண்டும்.

"குறிப்பிட்டப்படைப்பு, குறிப்பிட்டச்சமுதாயத்தினால் எவ்வாறு எதிர்கொள்ளப்படுகிறது என்பது - அந்த படைப்பினுடையத் தகைமை அதனை எதிர்கொள்கின்ற சமுதாயக்குழு அல்லது வாசகர்களுடையத் தேவை என்பதாகும். தரம், பயிற்சி முதலிய தகைமைகளையும் பொறுத்தே அமைகிறது. தவிர, சில சமயங்களில் இவற்றிற்குப் புறம்பானச்சக்திகளும் செயல்படுவதுண்டு."[12]

எனக் கூறும் தி.சு நடராசன் அவர்களின் கொள்கை வழியே ஏற்பு என்பது படைப்புகளும், படைப்பாளர்களும் வாசகர்களிடையே பெறும் இடம் என்பதைக் குறிக்கிறது எனக் கூறலாம்.

மேலும் இதற்கு உதாரணமாக இன்னும் சில விளக்கங்களை அவரிடமிருந்தே பெறலாம்.

"குறிப்பிட்டப் படைப்பினை வாசகர்கள் எவ்வாறு எதிர் கொள்கிறார்கள் என்பது பல முனைகளில் ஆராய வேண்டிய ஒரு சிரமமான காரியம். இந்த காரியத்தில் பிரெஞ்சு இலக்கிய அறிஞர் ஹென்னக்யுன் (E.Hennequin) ருசியஅறிஞர் பொதப்னியா (A.Potebnya) முதலியவர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். க்யூ.டி.லீவிஸ் இதன் அடிப்படையில், மேலும், ஒப்பிலக்கியம், ஏற்றல் கொள்ளை (Reception Theory) என்பதன் மூலமாக, ஒரு நாட்டு இலக்கியம் இன்னொரு நாட்டில் அல்லது இன்னொரு மொழியில் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதும் அதன் தடங்களும் தாக்கங்களும் எத்தகையதாக இருக்கிறது என்பதைப் பற்றிப் பேசுகிறது."[13]

என்ற கருத்தின் வழியாக, இலக்கியங்கள் எவ்வாறு வேற்றுமொழியில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதைக் கூறுவதையே ஏற்புகொள்கை என அறிஞர்கள் கூறுகின்றனர். இதனை இமயம் படைப்புகளில் ஒன்றான "கோவேறு கழுதைகள்" (1994) ஆங்கிலத்தில் 'Beaste of Burden' என்றத் தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டதை உதாரணமாகக் கூறலாம். ஒரு இலக்கியம் வெற்றி பெறுதல் என்பதின் அடையாளமே "ஏற்பு" தான். ஒரு வேளை, வாசிப்பாளன் இலக்கியத்தை வாசிக்கும் போது அதன் நடையோ, கருத்தோ அவனைப்

பாதிக்காமல் போகுமானால் வாசித்தலை அவன் நிறுத்திக் கொள்வான். எனவே, வாசித்தல் என்பது இங்கு ஏற்பாகக் கொள்ளலாம்.

"இந்த ஏற்பும் எதிர் கொள்ளுதல்" பற்றிக் கொள்கையினை மேலும் தி.சு.நடராசன் விவரிக்கிறார்.

> **"ஒரு இலக்கியத்தின் ஏற்பும் எதிர் கொள்ளலும் என்பது, நேரடிப் பேட்டிகள், புறவயவினா விடைகள், குறிப்பிட்ட படைப்பின் விற்பனைக் குறிப்புகள், தொடர்ந்து வரும் பதிப்புகள், மதிப்புரைகள், எதிரும் புதிருமான விமர்சனங்கள், குறிப்பிட்டப் படைப்பிலிருந்து பிறரால் எடுத்தாளப்பட்ட மேற்கோள்கள், அடிப்படையினைப் பின்பற்றி அல்லது அதனால் தாக்கம் பெற்று வந்த பிறபடைப்புகள், மொழிப்பெயர்ப்புகள் முதலியவற்றை குறிப்பிட்டுக்காட்டலாம்.**[14]

என்ற இந்த மேற்கோள் விளக்கத்தின் வாயிலாக இமையம் படைப்புகளின் ஏற்பும் எதிர்கொள்ளலும் எவ்வாறு காணப்படுகிறது என்பதனை இனி ஆராயலாம்.

### 2.23 இமையம் படைப்பின் விமர்சனங்கள்:-

இமையம் படைப்புகள் பெரும்பான்மையாக அடித்தட்டு மக்களை முன்னிறுப் பேசப்படுகிறது. "கோவேறு கழுதைகள்" புதினம் கீழ்ச்சாதிக்கும் கீழ்ச்சாதியாகக் கருதப்படும் "புதிரை வண்ணார்" என்றச் சமூகத்தை முன்னுறுத்துகிறது. "செடல்" என்ற புதினம் தாழ்த்தப்பட்டப் பறையர்கள் பொட்டுக்கட்டுதல் என்றப் பழைய மரபின் வழி எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என்பதுடன், கலைக் கூத்தாடிகளின் வாழ்வியலின் பிரச்சனைகளும் முன்னிறுத்தப்பட்டுள்ளது. "ஆறுமுகம்" என்ற புதினமும் பறையர் என்றச் சாதியினை முன்னுறுத்தியும், பாலியல் தொழிலில் ஈடுபட்டவர்களின் வாழ்வியலை முன்நிறுத்தி படைக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று புதினங்களுமே தலீத்படைப்பாளர்களின் மத்தியில் வரவேற்பு பெற்றதுடன் விமர்சனத்திற்கும் உட்பட்டது. நவீன இலக்கியவியலாளர்களில் ஒருவரான தலீத் சிந்தனையாளர் ராஜ்கௌவதமன் அவர்கள், "தலீத்திய விமர்சனக் கட்டுரைகள்" என்ற தலைப்பில், தன் நூலில் "ஆறுமுகம்" என்ற புதினத்தைப் பற்றி ஏற்புடையதாகக் கூறும் கருத்துகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

“இந்நாவலைப் படித்ததும் பலருக்கும் பல்வேறு அபிப்ராயங்கள் தோன்றச் சாத்தியம் உண்டு. வீட்டைவிட்டுக் கோபித்துக் கொண்டு ஓடியவர்களின் கதி என்னவாகும் என்பது பற்றிய எச்சரிக்கையாக இந்நாவல் படலாம். ஆறுமுகம், வசந்தா, தரும மூர்த்தி,பாக்கியம் போன்றவர்கள் இந்நாவலில் வீட்டைவிட்டு ஓடிப் போனவர்களாகப் படைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் எல்லோருமே நகர்ப்புற விளிம்பு நிலை வாழ்க்கையில் உதிரி வர்க்கமாகத் (Lumpen)தள்ளப்படுகிறார்கள். அடுத்து “ஆரோவில்” வருகையால் அதனைச் சுற்றியுள்ளப் பாரம்பரியமானக் கிராமத்துப் பிற்படுத்தப்பட்டோர், தலித் (அரிதாகஉயர்சாதி) குடும்பங்கள், நபர்கள் எவ்வாறு எதிர்மறையாகப் பாதிக்கப்பட்டார்கள் என்பதை நாவல் எடுத்துரைக்கிறது என்றும் கருதலாம், மேலும் நவநாகரீகத்தின் பலன்களை அடைந்து முன்னேறுவதற்காக, கிராமத்தில் பாரம்பரியமாக நடத்தி வந்த அடிமை வாழ்க்கை முறையை உதறிவிட்டு நகரத்திற்கு இடம் பெயர்ந்தத் தலித் குடும்பம் எவ்வாறு சிதறிச் சின்னாபின்னமாகியது என்பதை நாவல் வலியுறுத்துகிறது என்றும் பார்க்கலாம். விபச்சாரிகளாகத் தள்ளப்பட்டுத் தங்களை அழித்து ஜீவனம் நடத்துகிற நகர்ப்புற மலிவானக்குடிசை வாழ்ப் பெண்களிடமும் தாய்மை, சகோதரத்துவம், ஆண் ஆதிக்க எதிர்ப்பு, சக மனிதரிடம் இரக்கம், அன்பு காட்டுதல் முதலான மேலான மனிதநேயப் பண்புகள் காணக்கிடக்கின்றன என்பதை வலியுறுத்தப்பட்ட நாவலாகவும் இதைக் கருதலாம். ஒரு இளம் தலித் விதவை தன் மகனை முன்னுக்கு கொண்டு வருவதற்காக மேற்கொண்ட எத்தளிப்புகளில் தனக்கு வேலை கொடுத்த ஓர் ஆணுக்குத் தன் உடம்பைக் கொடுத்ததையும், ஒன்றாக இருந்த பாவத்திற்கு அவளைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு தண்டிக்கப்படுகிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்டும் நாவலாகவும் இதனைக் கொள்ளலாம்”[15]

என்ற விமர்சனத்தில் “ஆறுமுகம்” என்ற புதினம் எத்தகைய ஏற்புத் தன்மையைப் பெற்றுள்ளது என்பதற்குச் சான்றாகக் கூறலாம்.

அதே போல்,

> **"கோவேறு கழுதைகள் இந்த புதினமாது எந்த ஒரு சராசரி வாசகனையும் இலகுவாகத் தன் வசப்படுத்தி இலயித்துவிடச் செய்கின்ற கவர்ச்சியைப் பெற்றுள்ளது. நாவலுக்கு எடுத்துக் கொண்ட விசயங்களும், அவற்றைத் திருத்தமுறச் சொல்லிய செய்நேர்த்தி வாய்ந்தத் தொழில் நுட்பமும் இதற்குப் பிரதானக் காரணங்களாகும்."**[16]

என்ற இந்த விமர்சனக் குறிப்பும் இந்நூலின் ஏற்புக் கொள்கையாகவே எடுத்துக் கொள்ளலாம்.

அதே போல் இமையத்தின் படைப்புகளில் சிறுகதைகளில் ஒருசில சிறுகதைகள் பல்வேறு மாத இதழ்களில் வெளிவந்துள்ளது, என்பதையும் ஏற்பு கொள்கையில் இணைத்துக் கொள்ளலாம்.

காலச் சுவடு, தீரா நதி, இந்தியா டுடே, ஆனந்த விகடன், உயிர்மை, கணையாழி போன்ற இதழ்கள் பெரும் வாசகர் வட்டத்தையுடையவை. ஆதலால் வாசகர்களின் வாசிப்புத் திறனுக்கு ஏற்ற வகையிலேயே இந்த இதழ்கள் தேர்வு செய்து சிறுகதைகளை வெளியிடும் என்பது ஏற்புக் கொள்கையாக முன் வைக்கலாம்.

## 2.24 எதிர் கொள்ளல் :-

எதிர் கொள்ளல் என்பது ஒரு இலக்கியத்தின் மீதான எதிரான விமர்சனக் கொள்கைகள். அது விவாதங்களாக இருக்கலாம் அந்த வகையில் "ஆறுமுகம்" "கோவேறு கழுதைகள்" போன்ற புதினங்கள் மிகவும் எதிர் தன்மைக்கு வைத்து விமர்சிக்கப்பட்டது. குறிப்பாக இந்த புதினங்களில் தலித்கள் சிறுமைப்படுத்தப்பட்டதாக வெளிப்படையான விமர்சனங்கள் தோன்றியது.

> **"பல்வேறு சாத்தியப்பாடுகளுக்கு இடம் தரக் கூடிய நாவலாக "ஆறுமுகம்" அமைந்திருந்த போதிலும், தலித்துக்களின் புதிய நடவடிக்கைப் பற்றிய ஒவ்வாமை வெளிப்படுகிற நாவலாகவும் இருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்"**[17]

என்ற ராஜ்கௌதமனின் விமர்சனம் இமையம் படைப்புகளுக்கான எதிர் கொள்ளலாகக் காட்டலாம். அதேபோல்,

**"நாவலில் நகைச்சுவை வறண்டிருக்கிறது. கட்டாயமாக அங்கத்தோடு கிண்டலாகச் சொல்லத் தக்க விசயங்களைக்கூட அவ்வாறு சொல்லாமல் மிக மென்மையான வன்மம் கலந்து சொல்வது ஏன் என்று விளங்கவில்லை"**[18]

என்ற இந்த ஆறுமுகம் பற்றிய விமர்சனமும் எதிர் கொள்ளல் நிலையில் வைத்துப் பார்க்கலாம்.

**"இப்படிக் கால ஓட்டத்தில் செய்யப்படும் வெட்டுகளும் ஓட்டுகளும் நாடகத் தனமாகவும், சினிமாவில் துரிதக் காட்சிகள் ஓட்டப்பட்டு பிரம்மிப்பை ஏற்படுத்துவதைப் போலவும் அமைந்து விடுகின்றன"** [19]

என வரும் ஆறுமுகம் புதினத்தைப் பற்றிய விமர்சனத்தை எதிர் நிலையில் வைத்துப் பார்க்கலாம்.

**"இவ்வித ஒவ்வாமை "கோவேறு கழுதைகள்" நாவலிலேயே தொடங்கி விட்டது. அங்கே கிராமப் புறத்து தலித்துகளைப் பற்றி வெளிப்பட்டது. இங்கே நகர்ப்புறத்துக்கு முன்னேறும் ஆர்வத்தில் இடம் பெயர்ந்தத் தலித்துகளைப் பற்றி வெளிப்படுகிறது."**[20]

என்ற இந்த "கோவேறு கழுதைகள்" புதினத்தின் மீதான விமர்சனமும் எதிர் நிலையில் வைத்துப் பார்க்கலாம்.

மொத்தத்தில் விமர்சனம் என்பதே ஏற்பும்-எதிர்ப்பும் என்ற நிலையைக் காட்டும் என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இமையம் படைப்புகள் யாவும் இவ்வாறு எதிர்ப்பும், ஏற்புமாக என இரண்டு நிலை விமர்சனங்களுக்கும், விமர்சனப் பாராட்டுகளுக்கும் தகுதியானவையாக இருக்கிறது என்பது படைப்பாளரின் வெற்றி எனலாம். இந்த வெற்றியே இலக்கியத் தேவை எனப்படுகிறது.

## 2.25 சமூதாயச் சித்தரிப்பு :-

**"இலக்கியத்தில் சமுதாயம் அல்லது தனி மனித வாழ்வு சித்தரிக்கப்பட்டிருப்பது என்பது அவ்விலக்கியத்தின் பொதுவானப் பண்பேயாகும். அது அவ்விலக்கியத்தின் பல்வேறு கூறுகளிலும் பல்வேறு முறைகளிலும் வெளிப்படுகின்றன."**[21]

என்ற இந்த விளக்கத்தின் வழியே, சமூதாயச் சித்தரிப்பின் விளக்கத்தைப் புரிந்து கொள்ளலாம். மேலும் சமுதாயச் சித்தரிப்பு என்பதை நான்கு வகையில் விளக்க முற்படுகிறார் தி.சு நடராசன் அவர்கள்,

1. சமுதாயத்திலுள்ளப் பிரச்சனைகளையும், துன்பத் துயரங்களையும் எதிர் கொண்டு ஆனால் நேராகக் காட்ட விரும்பாமல், ஒன்றில், மிகையானக் கற்பனையுடன் புனைந்துரைத்தல்: அல்லது பழைய வாழ்க்கையைப் பெண்ணுலகமாகக் காட்டி அதனைத் திரும்பக் கொண்டு வர விரும்புதல்: கீழேக் கால்பரப்பாமல் மேலெழுந்த வாரியாக ஏதோ ஒன்றைக் கூறுதல். இத்தகைய, நழுவல் (Escapism) போக்காகவும் இருக்கலாம். ஆனால் அப்படித்தான் இருக்கவேண்டும் என்பதல்ல நிறுவனங்களுக்கெதிரான புறப்பணிப்பாகவும் இருக்கலாம்.
2. வாழ்க்கையையும் அனுபவங்களையும் மற்றும் சுற்றியிருப்பவற்றையும் நுணுக்கமான விவரங்களுடன் இயல்பு நவிற்சியாகச் சித்தரித்தல்.
3. சமுதாயத்தையும் வாழ்க்கை அனுபவங்களையும் அப்படியே சொல்வது மட்டுமின்றி அவற்றை எள்ளுதலும் விமர்சித்தலும் சொல்லுகிற செய்திகளுடன் இழையோடுவது.
4. சமுதாய நிலைகளையும் போக்குகளையும் காரணக்காரிய முறையில் கண்டு, அவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனங்கண்டு, அவற்றை இலக்கிய பொருளாக எடுத்தாளுதல்.

இந்த நான்கு சமுதாயச் சித்தரிப்புகளும் இலக்கியத்தில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதைப் பொருத்தே ஒரு இலக்கியத்தின் மதிப்பீடு அமையும். மேலும் ஒரு இலக்கியம் தரம் உள்ளதா இல்லையா எனச் சோதிப்பதற்கு இந்த நிலைபாடுகள் அவசியம்[22] என இலக்கியத் திறனாய்வில் தி.சு.நடராசன் அவர்கள் கூறுகிறார். அவர் கூறும் கொள்கை வழி நின்று இமையம் படைப்புகளின் சமுதாயச் சித்தரிப்பைக் காண்போம்.

"ஆறுமுகம்" புதினத்தில் இந்த நான்கு கொள்கைகளும் அடங்கியுள்ளது. பாலியல் தொழிலாளர்கள் படும் துன்பங்களைப் பிரச்சனைகளாகவும், பிரச்சனைகள் அவர்களது எதிர்காலம் பற்றியதாகவும் அமைந்திருப்பதைக் குறிப்பிடலாம்.

"ஆறுமுகம்" நாவலில் கிராமப்புறத் தலித்துக்கள் நகர்ப்புறத்திற்கு மாற்றம் பெற்று, அதன் விளைவுகளாகக் குடும்பம் இல்லாமல் அனைவரும் பிரிதல் என்பதினையும், "ஆரோவில்" விலைமாதர்கள் தங்கள் மலிவான வியாபாரப்பொருளாகத் தங்களை மாற்றிக்கொண்டு வாழ்க்கையில் ஒரு பயனும் இல்லாமல் அவர்களின் வாழ்வு முடிவுபெறுவது என்பது பரிதாபத்துக்குரியதாக அமைந்துள்ளது என அவர்களைப்பற்றி கூறியிருப்து மிகவும் இயல்பான தன்மை எனலாம்.

"செடல்" புதினத்தில் கிராமப்புறத் "தலித்" குடும்பங்கள் பிறர் சமூதாயத்தால் மதிக்கப்படாமல் இருப்பது. வறுமை நிலையிலும் தங்களின் குடும்பத்திலுள்ள ஒரு நபரை "பொட்டுக்கட்டு" விடுதல் என்ற மரபு வழியில் இழத்தலும், அக்குழந்தையேப் பின்னாளில் ஆதரவற்ற நிலையில் வறுமை நிலையில் தத்தளித்தலும் சமூதாயத்தின்கண் உள்ள சிக்கலாகவேக் காணலாம். (இந்த சமுதாயச் சித்தரிப்பு சிறுகதைகளின் சுருக்கம் என்ற தலைப்பில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது)

### 2.26 சமுதாயச் சிக்கல்களும், சமுதாய மாற்றங்களும்:-

தலித்துக்களின் வாழ்வியலின் அனைத்துப் பகுதிகளும் சிக்கல்களே. "ஆறுமுகம்" நாவல் அவலம் நிறைந்ததாக, விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலின் சிக்கலை மையப்படுத்தியே எழுதப்பட்டுள்ளது. ஒரு மாற்றம் வேண்டி நகர்புறம் நோக்கி நகரும் ஆறுமுகம், தனபாக்கியம், சின்னப்பொண்ணு,பாக்கியம் ஆகியோர்களின் வாழ்க்கை சிக்கலாகவேப் படைக்கப்பட்டுள்ளது.

பாலியல் தொழிலில் ஈடுபட்ட பெண்கள், ஒரு சிலர் ஏமாந்து போய், பெண்களுக்கான மாதவிடாய் நாட்களை கவனிக்காமல் கர்ப்பம் தரிப்பது சிக்கலாகக்

காட்டலாம். பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள இவர்களை சமுதாயத்தில் சரிசமமான மனிதர்களாக மதிக்கப்படாததைக் காணலாம். மருத்துவமனைகளில் இவர்களை மனிதர்களாகவே மதிப்பதில்லை.

"செடல்" புதினத்தில் செடல் என்றக் கதாபாத்திரம் சிறியவளாக இருக்கும் போதே "பொட்டுக்கட்டி" விடுகின்றனர். அவள் சாமிப்புள்ள என்ற பெயரில் சாப்பிடுவதற்கும் தங்குவதற்கும் என ஒரு கௌரவமான நிலையினைப் பெறுகிறாள். எங்கு சென்றாலும் "சாமிபுள்ள" வந்திருக்கான் என்று கூறி தானியங்களை பெறுதலும் ஊரார் அனைவரும் சேர்ந்து உடன்படிக்கைப் போல கையெழுத்திட்டு அவளுக்கு உதவ முன்வருவது, என்ற நிலையில் அவள் பெண்ணிற்குரியப் பருவம் அடையும் போது அதேச் சமூதாயம் அவளுக்கான மரியாதைத்தர மறுப்பதும் , அவளை சாமிபுள்ள என அழைத்த நிலை மாறி இவள் வேசி, தேவடியா என அழைப்பது போன்றவைகள் சமூதாயத்தின்கண் உள்ள குறையை எடுத்துரைக்கிறது. அவள் தொடர்ந்து இனி கோயிலில் இருக்க முடியாது என்பதும், ஊரில் தனது தாய் தந்தையர்களுடன் போய் இருக்கலாம் என்றால், அவர்களும் பஞ்சம் பிழைக்க ஊரே விட்டு போனது போன்றவற்றைச் சிக்கல்களாகக் கூறலாம்.

கோவேறு கழுதைகள் - புதினத்தில் ஆரோக்கியத்தின் குடும்பத்தின் ஒவ்வொருவரும் பிரிந்து சென்று, அவளும் கணவனும் தனிமைப்படுவதும், அவளின் மகள் மேரியின் கணவன் திரவியராஜ் இறப்பதும், மேரி ஊரில் "அழுக்குதுணி" வாங்கச் சென்ற போது, ஒருவனால் பாலியல் கொடுமைக்கு ஆளாவதும் கதையின் சிக்கல்கள்களாக் கூறலாம்.

ஆரோக்கியத்தின் வாழ்க்கையே, சிக்கலாகவே படைத்துக்காட்டப்பட்டுள்ளது. (சிறுகதைகளில் காணப்படும் சிக்கல்கள் சிறுகதையின் சுருக்கம் என்ற தலைப்பில முன்னரே கூறப்பட்டுள்ளது).

## 2.27 சமுதாய மாற்றங்கள்:-

"செடல்" புதினத்தில் "கொலைச்சிந்து அருணாச்சலம்" என்ற கதாபாத்திரம் சமுதாய மாற்றத்தின் அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளார். செடல் புதினத்தின் மூன்றாவது பாகத்தில் "கொலைச்சிந்து அருணாச்சலம்" கிழவராகக் காட்டப்பட்டுள்ளான். பஞ்சாயத்துக் கூடி எதற்கு மீண்டும் இங்கு வந்தாய் என ஊரார் கேட்கும் போது,

"யார்ரா அவன் ஒக்கால ஓழி" (செடல் -3, பக் - 199) என கொலைச்சிந்து அருணாச்சலம் தைரியமாக ஊராரைப்பார்த்து கேட்பது போல காட்டப்பட்டுள்ளது என்பது ஒரு சமுதாய மாற்றம் எனலாம். செடல் புதினத்தில் மூன்றாம் பாகத்தில் தலித்துக்கள் பெரும்பான்மையோர் கிறித்துவர்களாக மாற்றப்பட்டு வேதப் பறையர்களாக் காணப்படுவது சமூகமாற்றம் எனக் கூறலாம். பஞ்சாயத்து என்றால் அடக்க ஒடுக்கமாகக் கட்டுப்பட்டவர்களாக நின்ற தலித்துகள், இண்டு குழுக்களாகப் பிரிந்து சண்டையிட்டுக் கொள்வதும், பஞ்சாயத்தாரை எதிர்ப்பதும் சமுதாயத்தின் மாற்றங்களாகக் காட்டலாம்.

உயர்சாதிக் கூத்தாடியைச் சேர்ந்த பாஞ்சாலி, தனக்குப் பின்னால், கூத்து - நாடகக் குழுவை "செடல்" தான் முன்னின்று நடத்த வேண்டும் எனச்சத்தியம் வாங்கியது, "செடல்" ஒரு பயிற்சி ஆசிரியரைப்போல இருக்க வேண்டும் என வேண்டிக் கொள்வது சமுதாயத்தின் மாற்றங்களாகக் காணலாம். (செடல் -3, பக் - 242)

கோவேறு கழுதைகள் - புதினத்தில் ஆரோக்கியத்தின் மருமகள் "சகாயம்" அழுக்கு துணி துவைக்க ஆற்றுக்கு வர மறுத்துவிடல், இரவுச் சோறு எடுக்க வீடு வீடாகச் செல்வதற்கு மறுப்பு தெரிவித்தல் என்பதோடு இல்லாமல், சகாயம் மேரியிடம்

**"நீ உன் ஆயுள் பிராயத்தியமும் சோறு துணி எடுக்கப்**

**போவ மாட்டன்னு எந்தலயிலெ அடிச்சித் சத்தியம் பண்ணு"** (கோ.க.பக்- 48)

எனப் சமுகத்திற்கான மாற்றங்களாகக் காணலாம். அடிமை நிலையின் ஆழத்தில் இருக்கும் கிழ்ச்சாதிக்கும் கீழ்ச்சாதியாக இருக்கும் இவர்களின் சுதந்திரம் / விடுதலை என்பது அவர்களின் சிந்தனையில்தான் இருக்கிறது என்பதை "சகாயம்" கதாபாத்திரத்தின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

கொலைச்சேவல் சிறுகதைத் தொகுப்பில் "உயிர் நாடி" "மணலூரின் கதை" போன்றவைகள் சமுதாயத்தின் மாற்றத்தினை எடுத்துரைக்கிறது. மணலூரின் கதை சிறுகதையில் நவீன உலகில் இன்று மனிதர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு ப் போனது சமுதாயத்தின் மாற்றமே.

**"மனுசனுக்கு டி.வியும் சினிமாவும்தான் சோறும் தண்ணியும். அது மட்டுமில்லடா. அது ரெண்டுதான்தாண்டா நாம்மோட ரெண்டு கண்ணும். ஒருத்தன் கண்ணு இல்லாம எப்படி**

**ஒலகத்தப் பார்ப்பான்? ஒரே ஒரு நாளக்கி தமிழ்நாட்டுல இருக்கிற சினிமாத் தியேட்டர்களையும், டி.வி சேனல்களையும் நிறுத்திப்பாரு. எல்லாப் பயலுக்கும் பைத்தியம் புடிச்ச மாரி இருக்கும். செத்திட்டமாரி இருக்குன்னு சொல்றானா இல்லியான்னு பாரு"**

(கொலைச் சேவல் - மணலூரரின் கதை - பக் -25)

என்பதின் மூலம் எந்த அளவிற்கு சமூதாயம் மாறுதலைப் பெற்றுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

"சத்தியக்கட்டு" சிறுகதையில் தலித் பெண்ணை, மேல்சாதிக்காரன் காதலித்து கர்ப்பம் தரிக்கச்செய்கிறான். தலித்துக்கள் அனைவரும் கூடி அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கும்படி கேட்டல் சமூதாயத்தின் மாற்றம் எனலாம். வேலைக்குப் போகாமல் தங்கள் எதிர்ப்பினைக் காட்டுவதும், இறந்து போனப் பொன்னருவியை சாமி நிலைக்கு உயர்த்தி வழிபாடு செய்வது சமுதாயத்தின் மிகப் பெரிய மாற்றமாகக் கருதலாம்.

மண்பாரம் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள "மலரின் காதல்" என்ற சிறுகதையில், தன் மார்பகங்களைப் பிடித்தவனை நேரே காலைத் தூக்கி எட்டி உதைப்பது பாலியல் தொல்லைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு பெண்ணோக்கு நிலை எனலாம்.

"எழுத்துக்காரன்" என்ற சிறுகதையில் மனு எழுதி கொடுத்தவனிடம் கிராமப்புறப் பெண் சண்டையிடுதல், "அரையாள்" சிறுகதையில் நிலத்தின் முதலாளியிடம் நேருக்கு நேர் சண்டையிட்டு முதலாளி என்று கூடப்பார்க்காமல் அடித்தல், போன்றவைகள் பெண்கள் உளவியல் சார்ந்த எழுச்சி எனலாம். இது பெண்ணெழுச்சிக்கான சமூக மாற்றம் எனலாம். "குடும்பம்" சிறுகதையில் தன் அம்மாவை அடிக்கும் தந்தையை சிறுவன் கண்ணன் தடுத்து விடுடா எங்கம்மாவ!" என குரலை உயர்த்திப் பேசுவது, இனி அடங்கமாட்டோம், பொறுக்கமுடியாது என்பதின் வெளிப்பாடு எனலாம்.

## 2.28 தலித்தியம்:-

"பொட்டுக்கட்டுதல்" என்பது தேவதாசி முறையின் வேறொரு நிலை எனலாம். நாட்டார் வழக்காற்றியலில், ஒரு பெண் குழந்தையை (6 அல்லது 7 வயதுள்ள பெண்)

கோவிலுக்கு பொதுவானவள் எனக் கூறி "சாமிப்பெண்" "சாமிப்புள்ள" என்று பெயர் சூட்டிவிடுவது. அவ்வாறு பெயர்ச் சூட்டப்பட்ட 6 அல்லது 7 வயது பெண், வளர வளர அவளை ஊருக்கேப் பொதுவானவளாக மாற்றும் செயலே பொட்டுக்கட்டுதல் என்பதாகும்.

> **"சாமி என்னிக்குமே சாவப் போறதில்லெ. ஓம் மவளும் தாலியறுக்கப் போறதில்லை. சாமி செத்தாத்தானெ தாலியறுக்க? ஓம் மவ நெற சுமங்கலிதான் சாவற முட்டும்"[6]**

என்னும் இந்த உரையாடலில் "பொட்டுக்கட்டுதல்" என்றால், சாமிக்கு (கடவுளுக்கு) அந்த 6 அல்லது 7 வயது பெண் பிள்ளையை நேர்ந்து விடுதல் என்பதாகும்.

"பொட்டு கட்டுதல்" என்ற சமூகமரபு இதிகாசங்களோடு, புராணங்களோடு தொடர்புடையது.

> **"காலங்காலமா நடந்து கிட்டு வற்ய வயக்கம்தானெ. இந்த வயக்கம் (வழக்கம்) இன்னிக்கா உண்டாச்சு? தெய்வ காரியம் முடியாதுன்னா இன்னிய தேதியில இருந்து ஒங்க அக்காவுக்குப் பட்டயம் எயிதிக்கொடுத்த (எழுதிகொடுத்த) ஊர்லயெல்லாம் படிவாங்கறத வுட்டுடு"[7]**
>
> (கதை மாந்தர் நடராஜப்பிள்ளை உரைப்பது)

எனத்தலித்துக்கள் மேல்ச்சாதிக்காரர்களால் மிரட்டப்பட்டு பணிய வைக்கப்படுகின்றனர். இது காலங்காலமாக நடக்கிற வழக்கம் என்பதையே இது காட்டுகிறது.

இந்த "பொட்டுக்கட்டுதல்" என்பது கடவுளோடுச் சமயத் தொடர்புள்ளது. சமயத்தின் பெயரால் ஒரு குறிப்பிட்டச் சமுதாயத்தை மட்டுமே பலியாக்குவது என்பது சயத்தின் அல்லது கடவுளின் பெயரில் உடன்படுத்துவது அல்லது கட்டாயப்படுத்தி, மிரட்டி பணியவைப்பது போன்றவற்றின் மூலம் அடித்தட்டு மக்களின் வாழ்க்கை இருப்புக்களை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இம்மாதிரியான வர்க்க முரண்பாடே இந்தியா முழுவதிலும் நிலவி வருகிறது. இது மேல்கீழ் என்று அடுக்கு முறையிலானதாகக் காணப்படுகிறது. இந்த மேல்கீழ் என்ற முரண்பாடுகள் அவர்களுக்கான வாழ்வியலைச் சிக்கலாக்குவதுடன் சமூதாத்தையும் அது பாதிக்கிறது. பாதிப்பு என்பதே இலக்கியத்தின் சிக்கல் எனப்படுகிறது.

இமையம் படைப்பாளர் இந்த வர்க்க முரண்பாடுகளைச் சாதாரண நடையில் பதிவு செய்கிறார். இந்த முரண்பாடுகளுக்கு ஆளானவர்கள் அல்லது பாதிப்பிற்கு ஆட்பட்டவர்கள் யாரெனில்? அடிதட்டு மக்களே முதன்மை இடத்தைப் பெறுகின்றனர். இரண்டாவதாகப் பெண்கள், மூன்றாவதாக இந்த இரண்டிலும் சேராத ஏனையோர் எனப் பட்டியலிடலாம். அந்த வகையில் வர்க்க முரண்பாடுகளுக்கு ஆட்பட்டு, பாதிப்பிற்குள்ளானவர்களை (அடித்தட்டு மக்களை) தலித்துகள் என்ற பெயரால் இங்கு அழைத்து பொருள் கொள்ளலாம். தலித் என்பதற்கானப் பொருள் விளக்கம் முன்னரே விளக்கப்பட்டிருக்கிறது.

**2.28.1 செடல் (2006):** இந்த புதினத்தின் கதை மாந்தர்களாகத் தலித்துகளையே முதன்மைப்படுத்துகிறார். தலித்துகளின் ஒரு பிரிவான "பறையர்" என்ற சமூகத்தின் வாழ்நிலைகளைத் தன் கதையில் உயிரோட்டமாகப் படைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஒரு சமூகம் என்பதே பல்வேறு மரபுசார்ந்தப் பழக்க வழக்கங்களைக் கொண்டிருப்பதுதான். அந்த அடிப்படையில் ஒரு ஊரில் வாழும் பல்வேறுச் சமூகங்கள் ஒன்றிணைந்து ஒரு மரபு சார்ந்த வழக்கத்தை முன்னிலைப்படுத்தும் போது பெண்களின் வாழ்வினைக் கேள்விக்குறியாக ஆக்கும் "பொட்டுக்கட்டுதல்" விளங்குகிறது.

> **"ஒங்க மூதாதியிலெ ஒருத்தனக் கொண்டாந்து இந்த ஊர்ல குடிவச்சதே இதுக்குத்தான். ஆதி கதெ தெரியும்ல? பல ஊருக்காரன் கூடி ஒரு முடிவு எடுத்தாச்சு. மீறக் கூடாது. மீறினா வெளியூர்ல இருந்து ஒரு குட்டியெக் கொண்டாந்து பொட்டுக்கட்ட வேண்டியதாயிடும். அதெயும் மீறினா ஒன்னோட அக்கா ராஜாம்பாளக் கட்டிவச்சிப் புளியம் மிளாறால அடிச்ச மாரிதான் நடக்கும்"** (செடல் - பக்-4)

என வரும் உரையாடலில் தலித் மக்கள் பொட்டுக்கட்டுதலுக்காகக் கட்டாயப்படுத்தப்படுத்தப்படுகின்றனர் என்பது புலனாகிறது கதைக்குள் நடக்கும் இந்த உரையாடலில், ஊரார் ஒன்றினைந்து மிரட்டிப் பணியவைக்கும் நிகழ்வும், கலங்காலமாக நடக்கும் மரபு இதனை மாற்ற முடியாது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

ஊர் மிரடலுக்குப் பயப் படுவதே, தலித்துகளின் அடையாளம் எனலாம். சாதியின் பிடியில் கீழ்நிலையில் உள்ள மக்களை, பிற மேல்சாதிக்காரர்கள் எவ்வாறு ஆட்டிப் படைக்கிறார்கள் என்பதை இந்த செடல் புதினத்தின் மூலம் காணலாம்.

மேலச் சாதிக்காரர்கள் இந்த "பொட்டுக் கட்டுற விசயத்தில்" மட்டும் ஒன்றுபட்டு நிற்பதைக் காணமுடிகிறது. பொட்டுக்கட்டி விட்டால் மழை பெய்யும் என்ற நம்பிக்கை எல்லாருடைய மனதிலும் ஒரு மரம் போலத் தோன்றியிருந்தது" (செடல் - பக் -5) என இமையம் கூறும் கருத்தின் வழியே மழை வேண்டி ஒரு ஊரில் நடக்கும் மரபு சார்ந்த நிலையும் இதனுள் பேசப்படுகிறது. நிகழ்த்தும் கலை மரபுச்சார்ந்தது என்றால்? ஏன் அந்த மரபு ஒரு குறிப்பிட்டச் சமுதாயத்தின் மீதுமட்டும் பாய வேண்டும்? பொட்டுக்கட்ட ஏன்? தலித் சமூகத்தைச் சார்ந்தவர்களை தேர்வு செய்கிறார்கள்.

**2.30 தலித் என்றாலே (அதாவது கீழ்ச்சாதி) சில சாதிய குணங்களைப் பெற்றிருப்பர்.**

1. பிறச் சாதிகாரர்கள் சொல்வதைக் கேட்பது.
2 ஊரே ஒன்று சேர்த்து மிரட்டும்போது, அதற்கு பயந்து பணிவது.
3. எதிர்த்துப் பேசாமல் இருப்பது.
4. போ என்றால் போயிவிடுவது, வா என்றால் வந்துவிடுவது.
5. யாரைக் கண்டாலும் வணக்கம் சொல்வது.

இந்த குணங்களை அடையாளமாகக் கொண்டவர்களே தலித்துகள். இவர்களை எளிதில் ஏமாற்றிவிடலாம் என்பதின் அடையாளமே சாமி (கடவுள்) குற்றம் என்பது. இந்த சாதாரண மக்களானத் தலித்துகளை ஏமாற்றி, அவர்களின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக ஆக்குவது மேல்சாதியினரின் பண்பாகவே உள்ளது என்பதை இந்த "செடல்" புதினத்தின் வழியே "இமையம்" எடுத்துக் கூறுகிறார்.

இதேபோல் வீடியோ மாரியம்மன் (2008) என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள "நிஜமும் பொய்யும்" என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள சிறுகதையில், மகள் தன் தாயிற்கு கடிதம் எழுதுவதைப்போல கதை அமைந்திருக்கும்.

> "நான் செத்தாத்தான் நம்பப்பழயக் கதயெல்லாம் மறக்கும். அப்பா செத்துக்கிடந்தப்ப பிணத்துக்கு வழிவிடக்கூட ஒருத்தரும் வரல. எழவு சொல்லக்கூட யாரும் போவலங்கிறத மறந்துட முடியுமா?" (வீடியோ மாரியம்மன் - பக் - 130)

என்ற உரையாடலில் தலித்துகளின் குடும்பங்கள் படும் பாடுகள் அவலங்களாகச் சித்தரித்துகிறது. ராகவன் என்றக் கதாபாத்திரத்தின் மூலம் மிக எதார்த்தமாக

தலித்துகளின் வாழ்க்கை எடுத்துக் கூறியிருப்பது, தலித் குடும்பங்களின் நிலையை அறிந்து கொள்ள உதவுகிறது.

"ஆடு திருடற, மாடுதிருடற ஊரா இருந்தாலும் நம்மளுக்கின்னு நாலு மக்கெ மனுச இல்லாமியாப் போயிடுவாங்க? ஆதியிலெ நடந்ததியே நெனச்சிக்கிட்டிருந்தா முடியுமா?" என்ற உரையாடலில் தலித் குடும்பங்களில் சிலர் திருட்டு வேலையில் ஈடுபடுவது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

திருட்டு என்றாலே அது தண்டனைக்குரியது. ஆனால் ஏன் திருடப் போகிறார்கள் என்பதே நமது அடுத்த கேள்வியாக இருக்க வேண்டும். சமூகம் (தலித்) அங்கிகரிக்கவில்லை, தொழில் எதுவும் இல்லை, மனிதனாக ஏற்றுக் கொள்ளவதில்லை, இவ்வாறு இருப்பவர்கள் வேறுவழியின்றி இது போன்ற தொழிலில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது. தானுங்கெட்டு, சமுதாயத்தின் பெயரையும் கெடுக்கின்றனர் என்பதையே இந்த கதை அமைகிறது.

> **"ஒப்பன் காயிலாவுல கெடந்தப்ப (காலர நோய்) ஒங்க பெரியப்பாங்காரன் வந்து இனிமே பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவாணாம். எங்கூட அனுப்பு, மோளம் கத்துகிட்டானா ரெண்டு காசி வரும்ன்னு சொல்லி ஒங் கையப் பிடிச்சி அயிச்சி (அடித்து) க்கிட்டுப் போனாள். இந்த வயசில ஒயச்சித் (உழைத்து) திங்க வாணாம்ன்னு நினெச்சு அது செத்தாலும் சாவட்டும், சாவு மோளமடிச்சி திங்க வாணாம்"**
> **(வீடியோ மாரியம்மன் - நிஜமும் பொய்யும் - பக் - 137)**

என்ற உரையாடலில் "தலித்" மக்கள் இன்றும்கூட இறந்தவரின் வீட்டிற்குச் சென்று சாவு மேளம் இசைத்து வாழ்க்கை நடத்தும் நடப்பியலைக் காணலாம். இந்த வாழ்க்கை எங்களுக்கு வேண்டாம் எனத் தாய்தடுத்தும், மகனைப் பள்ளி அனுப்பும் விதமாக அமைந்த இதில் தலித்துகளின் அன்றாட அவலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

"எழுத்துக்காரன்" என்ற சிறுகதையில் ஒரு தாய்த்தன் மகனுக்காக சாதிச்சான்றிதழ் வாங்குவதற்கு சிரமப்படும் நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டியுள்ளர். அந்த பெண் (தாய்) கிராமத்திலிருந்து புறப்படும் தன்னிடம் பணம் இல்லாததினால், வீட்டிலிருந்த குத்துவிளக்கை அடகு வைத்து 20 ரூபாயை எடுத்துக் கொண்டு வட்டாட்சியர் அலுவலர் வந்து படும் சிரமங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

கிராமத்திலிருந்து வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்ல, 10 ரூபாயோ, 20 ரூபாயோத் தேவை. இதுவும் இல்லாதவர்களாகத் தலித் மக்கள் இருக்கின்றனர். தன் மகனை எப்படியாவது படித்து வைத்துவிட வேண்டும் என்ற வைராக்கியம் அனைத்து மக்களிடையேயும் இருப்பதைப்போலத் தலித் மக்களிடையேயும் காணப்படுகிறது என்பதற்கு ஆறுமுகம் புதினத்தைக் காட்டலாம்.

> "பார்ப்பான் சம்பாதிச்சது பிண்டதுக்கு, துலுக்கன் சம்பாதிச்சது துண்டத்துக்கு, ஏர் ஓட்டுறவன் சம்பாதிச்சது தெண்டத்துக்குங்குற கதயாதான் இருக்கு"

எனத் தன்னிடம் எழுதி கொடுப்பதற்கு கூலிப்பணம் கேட்டவரிடம் அந்த பெண் (தாய்) மறுத்துரைத்து பேசுவதுபோல அமைந்த இந்த உரையாடல் சாதாரண மக்களாகிய தலித்துகள் படும் துன்பம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

தலித் மக்களின் சாதாரண,எளிய வாழ்க்கையைக் கதைகளமாகக் கொண்ட இமையத்தின் படைப்புகள் சமூகவியல் திறனாய்வுக் கொள்கைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது. புதினங்கள்,சிறுகதைகள் திறனாய்வு செய்யப்படுகிறது. கதை மாந்தர்களின் இயல்புகள் கதைகளுக்குள் எவ்வாறு சொல்லப்படுகிறது என்பதும், ஆசிரியர் தம் கதைமாந்தர்களைப் பயன்படுத்தி எவ்வாறு இலக்கியங்களுக்கு உயிரோட்டம் தருகிறார் என்பதாக இவ்வாய்வு இமையம் படைப்புகளின் இலக்கியங்களை கால வரிசையோடு கூறி, விளக்கம் தந்து கதையும், மாந்தர்களும் விமர்சிக்கப்படுகிறது. இந்த படைப்புகள் சமூதாயத்தின் நிகழ்வுகளை எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பது இதில் சொல்லப்படுகிறது. படைப்பாளரின் கொள்கைகள் எவ்வாறு படைக்கப்படும் இலக்கியங்களில் சொல்லப்படுகிறது என்பது விளக்கமுறையாகச் சொல்லப்படுகிறது. சமூதாயம் என்றால் என்ன? சமூதாயத்தில் மக்களின் வாழ்க்கை எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதும், தமிழகத்தில் காணப்படும் சமுதாயத்தின் கட்டமைப்புகளில் தலித் மக்களின் நிலை போன்றவைகள் உதாரணங்களின் மூலம் கூறப்பட்டுள்ளது. கதையின் தன்மைகள், கதைகள் எந்த விதமான மனநிலையுள்ள மனிதர்களைச் சுற்றிப்படைக்கப்படுகிறது என்பதும் இதில் ஆராயப்பட்டுள்ளது.

# அடிக்குறிப்புகள்:-

1. தி.சு.நடராசன் - திறனாய்வுக் கலை - பக் - 54.
2. டாக்டர்.சு.பாலசந்திரன் - இலக்கியத்திறனாய்வு - பக் - 192.
3. எடுத்தாள்பவர் - டாக்டர்.சு.பாலசந்திரன் - இலக்கியத் திறனாய்வு-பக் - 196.
4. தி.சு.நடராசன் - திறனாய்வுக் கலை - பக் -7.
5. மேலது - பக் - 6. -
6. மேலது - பக் - முகப்புரை. -
7. ஆய்வாளர் கருத்தரங்கு பங்கேற்பு - பெரியார் பல்கலைக்கழகம்.
8. மேலது -
9. தி.சு.நடராசன் - திறனாய்வுக் கலை, பக் - 53.
10. மேலது - பக் - 54-55. -
11. மேலது - பக் - 57. -
12. மேலது - பக் - 57. -
13. மேலது - பக்- 57. -
14. மேலது - பக் -57. -
15. ராஜ் கௌதமன் - தலித்திய விமர்சனக் கட்டுரைகள், பக் - 113- 114.
16. மேலது - பக் - 113. -
17. மேலது - பக் - 113. -
18. மேலது - பக் - 114. -
19. மேலது - பக் - 115. -
20. மேலது - பக் - 116. -

21. தி.சு.நடராசன் - திறனாய்வுக்கலை, பக் - 54.

22. மேலது - பக் - 58-59.